549

ஓம்

# ஞானசாகரம்

## (அறிவுக்கடல்)

இஃது

இருபத்தாறு ஆண்டுகளாக நடைபெறு

தனிச் செந்தமிழ் வெளியீடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JAN 1928
MADRAS

பது, ௧௩. ] அக்ஷய ௵ பங்குனி ௴ பிரபவ ௵ சித்திரை ௴
வைகாசி ௴ [ இதழ், ௧௦, ௧௧, ௧௨.

பொருளடக்கம்

*மாணிக்கவாசகர் காலம், மூன்றாம்பகுதி.*

(The Age of Saint Manickavachakar, the third part—reviews all the arguments that have appeared for the last 16 years and finally fixes his age in the third century A. D.)

ஆசிரியர்:
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,
பொதுநிலைக்கழக குரு,
பல்லாவரம்

பல்லாவரம், பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள
டி. எம். அச்சுக்கூடத்திற்
பதிப்பிடப்பட்டது;

19th Jan., 1928.

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

ஓம்

## ஞானசாகரக் கையொப்ப நண்பர்க்கு

சென்ற ஆண்டின் ஈற்றில் பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் திருமடத்து ஆண்டுவிழா அவைக்கும், இவ்வாண்டிற் கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழா அவைக்குந் திருச்சிராப்பள்ளிச் சைவசித்தாந்தசபை ஆண்டுவிழா அவைக்குந் தலைவராய்ச் சென்று விரிவுரைகள் நிகழ்த்தி மீண்டதில் இடையிடையே உடம்பின் நலங் குன்றினமையாலும், உடம்பு சீர்ப்பட்டு நன்னிலைக்கு வரும் வரையில் அச்சுக்கூட வேலைகளையும் ஆராய்ந்து நூலெழுதும் முயற்சிகளையும் நிறுத்தி வைக்க நேர்ந்தமையாலும், இவற்றிடையே எம் அருமைப் புதல்வி திரு நீலாம்பிகையம்மையின் திருமணம் நடைபெற்றமையாலும், எமது அச்சுக்கூட வேலையாட்களும் இடையிடையே நின்றுபோய் வந்தமையாலும், நமக்கு உதவியாயிருந்து இவ் வேலைகளையெல்லாஞ் செய்து முடிக்கத்தக்க துணைவர் எவரும் இல்லாமையாலும் ஞானசாகரப் பதின்மூன்றாம் பதுமத்து முடிவாகிய இப் பத்துப்பதினொன்று பன்னிரண்டாம் இதழ்களைச் சென்ற ஜூன் திங்களுக்குப் பின் ஏழு திங்கள் கழித்து வெளியிடலாயினேம். காலந்தாழ்த்தாயினும், எல்லாம் வல்ல இறைவனருளால் இப் பதுமம் முற்றுப்பேறெய்தியதற்கு அன்பர்களெல்லாரும் மகிழ்ந்து இறைவனுக்கு வாழ்த்துரை கூறுவாராக! ஒன்றுக்கும் பற்றாத எம்மையும் ஒரு பொருட்டாகவைத்து எம்மால் இவ் அரும்பெருந் தொண்டை நடாத்திவரும் அம்மையப்பர் திருவடிகட்கு எமது புல்லிய வணக்கம் உரியதாகுக!

மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் அரும்பெருநூல் இப் பதுமத்திலேயே முடியுமென்று எதிர்பார்த்தேம். முடியுந்தறுவாயில் வந்தும் இன்னும் ஏறக்குறைய 24 பக்கங்களில் அது முடியவேண்டுவதாய் இருத்தலின் இதன்கண் அதனை முடிக்கக்கூடவில்லை. பதினான்காம் பதுமத்தின் முதல் இரண்டிதழ்களிலேதாம் அது முடியக்கூடியதாயிருக்கின்றது. இதுகாறும் நமது ஞானசாகரத்தைப்பெற்று உதவிசெய்துவந்த கையொப்பநேயர்கள் இனிமேலும் பதினான்காம்பதுமத்தைப்பெற்று உதவிசெய்துவருவார்களாகவென்று திருவருளை வேண்டி நிற்கின்றேம்.

‘மக்கள் நூறாண்டு உயிர்வாழ்தல் எப்படி?,’ ‘தொலைவிலுணர்தல்,’ ‘சிவஞானபோத ஆராய்ச்சி,’ ‘திருக்குறளாராய்ச்சி’ என்னும் அரியநூல்கள் முற்சென்ற பதுமங்களில் முடிக்கப்படாமல் அரைகுறையாய் நிற்கின்றன. அவை பதினான்காம் பதுமத்தில் முடிவுபெறும்.

இன்னுஞ் சில கிழமைகளில் ஞானசாகரப் பதினான்காம் பதுமத்தின் கையொப்பத் தொகைக்காகக் கையொப்ப நேயர்க்கெல்லாம் வழக்கம்போல அதன் முதல் ஈரிதழ்கள் நான்கு ரூபா மூன்றணாவுக்கு வி.பி.பியில் வரும்; கையொப்ப நேயர்களெல்லாரும் அவ் வி.பி.பியை மகிழ்ந்து ஏற்று உதவி புரிவாராக! முதல் ஈரிதழ்கட்குப் பின் வருவனவெல்லாம் நேயர்கட்குத் தவறாமல் வந்து சேரும்பொருட்டுத் தபாற்கூலி குறைத்தனுப்பப்படும்; குறையுங் கூலியை நேயர்கள் அவ்வப்போது செலுத்தி இதழ்களைப் பெற்றுக்கொள்வது நன்று. மற்றைப் பத்திதழ்களுக்கும் அவர்கள் செலுத்தவேண்டிய தபாற்கூலி ஐந்தணாவுக்கு மேற்படாது.

மலாய் நாட்டுக்கு வி.பி.பி. அனுப்புவது இயலாது. அங்குள்ள நண்பர்கள் ஞானசாகர 14-ஆம்பதுமக் கையொப்பத் தொகைக்குந் தபாற்செலவுக்குஞ் சேர்த்து நாலரைரூபா பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டரில்(British Postal Order) அனுப்பிவைத்து உதவி புரிவார்களாக. அவர்களிடமிருந்து கையொப்பத் தொகை வந்த பிறகுதான் அவர்கட்குப் பதினான்காம் பதுமத்து இதழ்கள் அனுப்பப்படும். புத்தகங்கள் வேண்டும் மலாய்நாட்டு நண்பர்களும் புத்தக விலையையும் தபாற்கூலியையும் முன் அனுப்பிவைத்தலே செயற்பாலர்.

ஞானசாகர இதழாசிரியர்.

---

## மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்

## (The Life and Times of St. Manickavachakar)

இவ் வரும்பெருந் தமிழ்நூலின் சிறப்பும் பயனும் இதனைப் படித்துவரும் ஞானசாகரக் கையொப்ப நேயர்கள் நன்குணர்வர். இதனைப் படியாதவர்கள்

பட்ட நிலத்தின் அகலம் சிறிதென்பது தானே பெறப்படா நிற்க, நிகளத்தில் அங்ஙனம் இருபுறத்து எல்லைகளுஞ் சுட்டப் படாமையின் அந் நிகளத்தின் பெரும் பரப்பு எல்லாரானும் அறியப் படாமைபற்றி அதுவே அங்ஙனம் எ00-காவதமென்று அவராற் குறிக்கப்பட்டதென்பது தானே போதரும்.

இனி, உரைகாரர் அடியார்க்கு நல்லார் காலத்திலும் அவர்க்கு முற்சென்ற காலத்திலுங் 'காவதம்' என்னுஞ் சொல் எத்தனைநாழிகை வழிக்குப் பெயராய் வழங்கிற்றென்பதனைத் தெளிய அறிதற்குத் தக்க சான்றுகள் பழைய தமிழ் நூல்களில் ஆராய்ந்த மட்டில் அகப்பட்டில. ஆயினும், இற்றைக்கு உஉ00-ஆண்டுகட்கு முன் இயற்றப்பட்ட தாகிய **கௌடிலியரது அர்த்த சாஸ்திரத்தில்** கரு000-முழங் கொண்டதே ஒரு யோஜனையென்று சொல்லப்பட் டிருத்தலால், அதுவே ஒரு சின்னக் காவதமாம் என்றுங், கி-பி ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தாகிய 'கணிதசார சங்கிரகத்'தில் ஙஉ000-முழங்கொண்டதே ஒரு யோஜனை யென்று கூறப்பட் டிருத்த லால் அதுவே ஒரு பெரிய காவதமாம் என்றும் ஓர் அறிஞர் எழுதினர்.* மேற்காட்டிய வட நூல்கள் இரண்டிலும் 'யோ ஜனை'யினளவு இத்துணையென வரையறுத்துரைக்கப்பட்டிருக் கின்றதே யல்லாமற், 'காவதம்' என்னுஞ் சொல்லாதல் அதனள வாதல் அவற்றின்கட் சிறிதுங் குறிக்கப்பட்டில. இனி, மற் றோர் அறிஞர் பழைய தமிழ்ப்பாட்டுகள் சிலவற்றின் சான்று கொண்டு "அணு-அக்கொண்டது க-தேர்த்துகள்,தேர்த்துகள்-அக்கொண்டது க-பஞ்சிழை, பஞ்சிழை-அக்கொண்டது க-மயிர், மயிர்-அக்கொண்டது க-மணல், மணல்-அக்கொண்டது க-கடுகு, கடுகு-அக்கொண்டது க-நெல், நெல்-அக்கொண்டது க-விரல், விரல்-கஉ கொண்டது க-சாண், சாண்-உ கொண்டது க-முழம், முழம்-ச கொண்டது க-கோல், கோல்-ரு00 கொண் டது க-கூப்பீடு, கூப்பீடு-ச கொண்டது க-காதம்" என நன்கு

* செந்தமிழ், கச, பகுதி, கக.

விளக்கிக்காட்டி யிருத்தலோடு, இந் நீட்டலளவைக் கணக்கு முற்றுந் தனித்தமிழ்நாட்டு வழக்கேயா மெனவும் நாட்டியிருக் கின்றார்*. இவ் அறிஞர் தாம் சான்றாகக் காட்டிய பாட்டுகள் இன்ன நூலின்கண் உள்ளனவென்பது காட்டிற்றிலராயினும், இவர் காட்டிய இந் நீட்டலளவைக் கணக்குத் தனித்தமிழ் நாட்டுவழக்கேயா மென்பதற்கு, இதன்கணுள்ள சொற்கள் அத்துணையுந் தனித்தமிழ்ச் சொற்களாயே யிருத்தலுங்,'காதம்' என்னுஞ் சொற் பழைய வடநூல்களுட் காணப்படாமையுமே சான்றாமென்பது. எனவே, ஒரு காவதம் என்பது அ000-முழங்கொண்ட ஒருநெடுவழியேயாதல் தெளியப்படும். அஃது இஞ்ஞான்றை ஆங்கில அளவைப்படி இரண்டேகால்மைலும் எண்பதுமுழங்களும் ஆகின்றது. ஆக, எழுநூறுகாவத நிகள மென்பது சிறிதேறக் குறைய ஆயிரத் தறுநூறு மைல்களே யாகின்றது. ஆப்பிரிக்கா தேயத்தின் கீழ்கரையிலிருந்து கிழக் கே சுமத்திராதீவகத்தின் மேல்கரைவரையிற் கடல்கொண்ட நிலத்தின் நிகளஞ் சிறிதேறக்குறைய நாலாயிரமைலாகும். ஆப் பிரிக்காவின் வடக்கிலுள்ள சகாரா பாலைநிலத்தின் நிகளம் மூவா யிரமைல் என்பது முன்னரே காட்டினேம். அதன் அகலம் ஆயி ரம்மைல் உளது. இப்பெரும்பரப்பில் நின்ற கடல்நீர்வற்றி, ஆயி ரத்தறுநூறுமைல் அதாவது எழுநூறுகாவதநிகளமுள்ள குமரி நாட்டைவிழுங்கிற்றென்பதில், உண்மைநிகழ்ச்சிக்கு மாறானது ஏதுமேயில்லை. ஆதலால், இவ் வுண்மை நிகழ்ச்சியைத் தமது காலத்துவழங்கிய நூற்சான்றுகள்கொண்டு நன்குவிரித்து விளக் கிய அடியார்க்கு நல்லாருரையைப் புனைந்து கட்டிய பொய்யுரை யென்ற பார்ப்பனருரையே புரைபட்டுப் பொய்படுவதாமென்க.

அற்றேல், ஆங்கில ஆசிரியர் பலர், தெற்கின் கண்ணதான பெருநிலப்பரப்பு மக்கள் தோன்றுதற்குப்பன்னூறாயிர ஆண்டு களுக்கு முன்னரே கடல்நீரால் விழுங்கப்பட்டதெனக் கூறவ தென்னையெனின்; குமரி நாட்டினும் நான்மடங்கு பெரிதாய்,

* செந்தமிழ், கடு, பகுதி, ҧ.

அக் குமரிநாட்டின் தெற்கிலிருந்த பெருநிலம் மட்டுமே மக்கள் தோன்றுதற்குப் பன்னூறாயிர ஆண்டுகட்குமுன்னர்க் கடலுள் அமிழ்ந்துபோயிற்றென்பதே அவர் தங் கருத்தாவதாம். மக்கள் தோன்றுதற்குமுன் அழிந்து பட்ட அந்நிலப் பரப்பைப் பற்றி ஈண்டு ஆராய்ச்சியில்லை. மக்கள் தோன்றியபிற் பல்லாயிர ஆண்டுகள் கழித்துக் கடல்வாய்ப் புக்க குமரிநாட்டைப் பற்றியதே யாம் ஈண்டு எடுத்துக் கொண்ட ஆராய்ச்சியின் பெற்றியாம் என்க. அற்றன்று, மக்கள் தோன்றுதற்குமுன் தெற்கின்கண் இருந்த பெருநிலத்தைக் கவர்ந்த கடல்கோள் ஒன்றுமே பெரியதொரு கடல்கோளாம்; மற்று, அவர் தோன்றியபின் நிகழ்ந்தன வெல்லாம் அத்துணைப் பெரிய கடல்கோள்கள் ஆகா; அவை யெல்லாஞ் சிறுசிறு நிலப்பகுதிகளை அடித்துச் சென்ற சிறுசிறு கடற்பெருக்குகளேயா மெனின்; மக்கட் டோற்றத்திற்குப்பிற் பெருங் கடல்கோள் ஏதும் நிகழ்ந்திலதென்று அவர் அங்ஙனந் துணிந்து சொல்லுதற்குச் சான்றென்னை? உலக இயற்கையிற் பண்டுதொட்டு நிகழ்ந்து வராநின்ற சாலப் பெரிய மாறுதல்களெல்லாம் இப் பார்ப்பனர் தங் கருத்துப்படிதான் நிகழ்ந்து வருகின்றன போலும்! லப்பக் என்னும் ஆங்கில ஆசிரியர் மக்கட் டோற்றத்திற்குப் பின் இந்திய மாக்கடலால் விழுங்கப்பட்ட நிலப்பரப்பு மிகப் பெரிதாதல் வேண்டுமென நன்காய்ந்து முடிவு கட்டிய உரைக்கூற்றை மேலே எடுத்துக்காட்டினமாகலானும், அவர் கூறிய அம் முடிபு குமரிநா டிருந்த காலத்தில் இயற்றப் பட்ட **செங்கோன்றரைச்செலவு** என்னும் நூற்கூற்றொடுங், குமரிநாடு கடல் கொண்டபின் இயற்றப்பட்ட தமிழ்நூற் கூற்றுக்களொடும் முழுதொத்து நிற்கக் காண்டலானும் அஞ்ஞான்றிருந்த தமிழகமாகிய அக் குமரிநாடு பெரியதொரு நிலப்பரப்பேயா மென்பதூஉம், அதனை விழுங்கிய கடல்கோளும் பெரியதொரு கடல்கோளேயா மென்பதூஉம் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெள்ளிதின் விளங்கற்பாலனவா மென்க. தமிழ்நூல் வடநூற் சான்றுகளானும், இஞ்ஞான்றை ஆங்கில மாப்பேரா

சிரியர் செய்து போதரும் வியத்தகு ஆராய்ச்சிகளானும் ஐயுற வுக்குத் தினைத்தனை இடமுமின்றி நாட்டப்பட்டதாகிய இம் மெய்ந்நிகழ்ச்சியினை அடியோடுபுரட்டி, அப்புரட்டால் தமிழின் தொன்மையைக் குறைத்துவிடுதற்கு ஆவலுற்று உழலும் அப் பார்ப்பனரது செயல், மலையைக் கல்லியெறிதற்கு மிக முயன்று அது கைகூடாமையின் மாயையின் றோற்றமாம் அம்மலை என்று மில்லாத வெறும் பொய்ப்பொருளேயா மெனக் கரைந்து மகிழும் அவர் தம் இனத்தாரது உரைபோற் கரைந்து மகிழுநர் செயலாய் நகையாடி விடுக்கற்பால தாகும். மேலாராய்ந்து காட்டிய வாற்றால், மக்கட் டோற்றத்திற்குமுன் தெற்கின்க ணிருந்த பெருநில வெல்லைகளைப் பற்பல காலங்களிற் கவர்ந்து வந்த கடல்கோள்கள் பற்பலஉளவாயினும் அவையெல்லாம் ஈண் டை யாராய்ச்சிக்கு வேண்டப்படாவெனவும், மக்கட்டோற்றத் திற்குப் பல்லாயிர ஆண்டுகள் கழித்துத் தோன்றிப் பண்டைத் தமிழகமாகிய குமரிநாட்டின் பெரும் பரப்பை வாய்ப் பெய்து கொண்ட பெருங் கடல்கோள் புறத்தேயுள்ள தமிழர்தம் நாடு நகரங்களை அழித்தொழிப்பினும், அவர்தமதகத்தே ஆராய்ந்து எழுப்பிய மாப்பேரறிவுநிலை யாகிய தொல்காப்பியத்தை யழிக் கும் வலியிலதாய், அதன் றொன்மை மாட்சியினை யஞ்சி, அது வீறி நிற்கும் இத் தென்றமிழ் நாட்டின் கீழ்கரை மேற்கரைப் பக்கங்களைத் தன் திரைக்கைகளாற் கவைஇத், தான்முன் செய் பிழையினைக்கூறி ஓவென ஓலமிட்டு, அதன் அடிக்கீழ் வீழ்ந்து அரற்றுநிற்கின்ற தெனவும் ஓர்ந்து கொள்க.

இனிச், 'செங்கோன் றரைச்செலவு' என்னும் நூலுரை யினும், அடியார்க்குநல்லா ருரையினுங் குமரிநாட்டி லிருந்தன வாகக் குறிப்பிடப்பட்ட 'ஏழ் தெங்கநாடு,' 'ஏழ்பனைநாடு' என் பவைகளில் அழிந்தனபோக இப்போது எஞ்சி நிற்பனவே: ஈழம், நக்கவாரம், மோரிசு, சுமத்திரா, யாவா முதலான தீவுக ளாகும். இத் தீவுகளிலெல்லாந் தென்னையும் பனையுமே மிகச் செழித்திருத்தலும் மேலைநிகழ்ச்சிக்குப் பின்னும் ஒரு பெருஞ்

சான்றாம். ஆகலின், கி. மு. உ௩அஎ-இல் நிகழ்ந்த முதற் கடல் கோளே குமரிநாட்டின் மாப்பெரும் பகுதியை வாய்ப்பெய்து கொண்டதாகுமென்பதூஉம், அக் கடல்கோளுக்கு முன்னர்ச் செய்யப்பட்டுத் தமிழ்வழங்கும் நிலனெங்கும் உலாயதே 'தொல் காப்பியம்' ஆமென்பதூஉம் இனிது தெளியக் கிடந்தவாறு காண்க. மற்றுக், கி-மு. ௫0௪-இலும், கி. மு. ௩0௬-இலும் நிகழ்ந்த ஏனைக் கடல்கோள்கள் இரண்டுங், 'திருச்சீர் அலைவாய்' (வடமொழியிற் 'கபாடபுரம்') எனப்பட்ட திருச்செந்தூர்க் குப் பக்கத்தே எஞ்சி நின்ற சில நாடுநகரங்களை இரண்டுமுறை யாக அடித்துச் சென்ற சிறுசிறு கடல்கோள்களாகு மல்லாமற், குமரிநாட்டை முழுதுங் கவர்ந்த பெருங் கடல்கோள் ஆகா தென்பதுங் கருத்திற் பதிக்கற் பாற்று.

இனித், தொல்காப்பியத்துக் களவியல், ௪௪-ஆஞ் சூத்திர மாகிய "மறைந்த வொழுக்கத்து ஓரையும் நாளும்" என்பதன் கட் காணப்படும் 'ஓரை' என்னுஞ் சொல்லைக் கிரேக்க மொழி யெனக் கொண்டு, அவ்வாற்றால் தொல்காப்பிய காலத்தைக் கி-மு. மூன்றாம் நூற்றாண்டின்பாற் படுப்பிக்க வேண்டினார் கூற் றைச் சிறிது ஆராய்வாம். 'ஓரை' என்னுஞ் சொல் இன்ன மொழிக்கு உரியதென்று ஆராய்ந்து உறுதிப் படுத்தியபின், அதனை ஒருசான்றாகக் கொண்டு ஒரு முடிபுக்கு வருதலன்றோ உண்மை யாராய்ச்சி செய்வாரது கடமையாகும்? அங்ஙனம் ஆராய்ந்து பாராது 'ஓரை' எனும் அச் சொல்லைக் கண்ட அத் துணையானே, அதனைக் கிரேக்க மொழியெனத் துணிந்துரைத் தல் பெரிதும் பிழைபடுவ துடைத்தாம். இங்ஙனமே இஞ் ஞான்று ஆராயாமல் வடமொழிகளெனவும் பிறமொழிகளென வுங் கொள்ளப்படும் நூற்றுக் கணக்கான சொற்கள் ஆராய்ந்து பார்க்கப்பார்க்கத் தனிச் செந்தமிழ்மொழிகளாதலை அறிவுடை யோர் (Dr. Caldwell) காட்டா நிற்பர். யாமும் மேலே சில காட்டிப் போந்தாம். இனி, 'ஓரை' என்னுஞ்சொல் தமிழ்மொழி யிலுங் கிரேக்க மொழியிலும் வடமொழியிலுங் காணப்படுகின்

றது. மூன்று மொழிகளிலும் பொதுவாகக் காணப்படும் இச் சொல்லைக் கிரேக்க மொழிக்கே யுரியதென வரைந்து கட்டினவர், அவ்வாறு தாம் அதனை வரைந்து கட்டுதற்குக் காட்டிய சான்றென்னை? எதுமே காணேம். தொல்காப்பியத்திற்கு முற்பட்ட கிரேக்க நூலிலாயினும் வட நூலிலாயினும் 'ஓரை' என்னும் அச் சொல் வழங்கப்பட்டிருக்குமாயின், அதனை அப் பிற மொழிகளுக்கு உரிய சொல்லாகக் கொள்ளுதல் ஒக்கும். தொல்காப்பியங், கி-மு. மூன்றும் நூற்றுண்டிலேதான் இயற்றப்பட்டதாகும் என இச் சொல் வழக்கையே ஒருசான்முகக் கொண்டு நாட்டப்புக்கவர், அச் சொல் கிரேக்க மொழியிலேனும் வடமொழியிலேனுங் கி–மு மூன்றும் நூற்றுண்டிற்குமுன் இயற்றப்பட்ட நூல்களில் வழங்கப்பட் டுளதெனக் காட்டல் வேண்டுமன்றோ? அவ்வாறு செய்தலை விடுத்து, அதனை வாளா கிரேக்க மொழியென்றால், அதனை ஆராய்ச்சியறிவுடையார் கைக்கொள்வரோ? யாம் ஆராய்ந்தமட்டிற் கி-மு மூன்றும் நூற்றுண்டிலாதல், அதற்கு முற்பட்ட காலத்திலாதல் இயற்றப்பட்ட கிரேக்க நூல் ஆரிய நூல்களில் 'ஓரை' என்னுஞ்சொல் வழங்குதலைக் கண்டிலம். கி–பி ஆறும் நூற்றுண்டிலிருந்த வராகமிகிரரால் மட்டுங் கிரேக்கரின் வான்நூலாராய்ச்சியைத் தழுவி 'ஹோரா சாஸ்திரம்' என்னும் ஒரு நூல் வடமொழியில் எழுதப்பட்டிருக்கின்றது. அதுகொண்டு 'ஹோரா' என்னுஞ்சொற் கி-பி ஆறும் நூற்றுண்டிற்குச் சிறிது முற்பட்ட காலத்திற் கிரேக்க மொழியில் வழங்கப்பட்டமை மட்டும் அறியப்படும். *கி-மு இரண்டாம் நூற்றுண்டி லிருந்த கிரேக்க ஆசிரியரான 'ஹிப்பார்க்கஸ்' காலத்திலேதான் கிரேக்கரின் வான்நூலாராய்ச்சி ஓர் ஒழுங்குபெறத் துவங்கி அவர்க்கு முந்நூறுண்டுகளுக்குப் பின் கி–பி இரண்டாம் நூற்றுண்டின் இடையிலிருந்த 'தாலமி' என்னுங் கிரேக்க ஆசிரியராலேதாம் அது முற்றப் பெறலா

* See 'A Short History of Astronomy' by A. Perry, M. A., pp. 40 and 62.

யிற்று. ஆகவே, கி-மு இரண்டாம் நூற்றாண்டிற்குங் கி-பி இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலேதான் 'ஹோரா' என்னுஞ் சொல் கிரேக்க மொழியில் வழங்கப்பட்டதாகல் வேண்டுமென்பது துணியப்படும். படவே, கி-மு இரண்டாம் நூற்றாண்டிற்குமுன் கிரேக்க மொழியில் வழங்காத 'ஓரை' என்னுஞ் சொல்லை அக்கிரேக்கமொழிக்கே உரியதென்றலுங், கி-மு இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகிய 'தொல்காப்பியத்தை' அந் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகிய அச் சொற்கொண்டு கி-மு மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப் பட்டதாகு மென்றலும் "என் முப்பாட்டன் திருமணக்காலத்தில் யான் அத் திருமணப் பந்தற்காலைப் பிடித்து நின்றேன்" எனக்கூறும் ஒருபேரனது சான்றுமொழியோ டொப்பவைத்து நகையாடற் பாலனவா மென்க.

அற்றேல், 'ஓரை' என்னுஞ்சொல் எந்தமொழிக்கு உரியதெனின்; மிகப்பழைய தமிழ்நூலாகிய தொல்காப்பியத்தில் அச் சொற் காணப்படுமாறுபோல் அங்ஙனமே பழைய கிரேக்கநூல் ஆரிய நூல்களில் அது காணப்படாமையானுந், தொல்காப்பியத்திற்கு மூவாயிரத் தைந்நூறாண்டு பிற்பட்டுக் கி-பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந் துண்டான கிரேக்க ஆரிய வான்நூல்களின் மட்டும் அது காணப்படுதலானும் அது பண்டைச் செந்தமிழ் மொழிக்கே யுரிய தூயதமிழ்ச் சொல்லாதல் உணர்ந்துகொள்க. அங்ஙனமாயின் அதற்குத்தமிழ்ச்சொற்பொருள்கூறுகவெனிற் கூறுதும். 'ஓரை' என்னும் அச் சொற்கு முதனிலை 'ஓர்' என்பதாகும். "'ஓர்ப்பு' என்பது ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல்"* என்று ஆசிரியர் நக்கீரனார் உரைகூறினாராகலின், அவ்வாறு ஆராய்ந்து உணரப்பட்ட வான்மீன் வட்டமே (இராசிச் சக்கரமே)ஓரையென வழங்கப்படலாயிற்று. பண்டைத் தமிழ்மக்கள் வழங்கிய 'ஓரை' என்னும் இத் தமிழ்ச்சொல்லே கிரேக்கமொழியிற் சென்று 'ஹோரா'என அம் மொழியினியல்

* இறையனாரகப்பொருள், உ-ஆஞ் சூத்திரஉரை.

புக்கு ஏற்பத்திரிந்து, பின் வடநாட்டில் வந்து குடியேறிய கிரேக்கர் வாயிலாக வடமொழியிற் புகுவதாயிற்று.

அற்றேற், பண்டைத் தமிழ்மக்கள் தமக்கு நெடுங்காலத்திலிருந்த மேனாட்டவராகியகிரேக்கருடன்கடல்தாண்டிச்சென்று கலந்தாலன்றோ, அச் சொல் அவர் மொழியிற் கலத்தற்கு இடனுண்டாம்? எனின், அந் நிகழ்ச்சியும் ஒருசிறிது காட்டுதும்: மேல்கடற் பாலதான சாலடி நாட்டின் (Chaldea) தலைநகராகிய 'ஊர்' என்னும்இடத்தே நிலத்திற் புதைந்துகிடந்த பழையவேந்தரின் அரண்மனைகளைக் கிளறிப் பார்க்கையிற், கி-மு ௩000-த்தில் அதாவது இற்றைக்குச் சிறிது குறைய ஐயாயிர ஆண்டுகளின்முன் அங்கு அரசுபுரிந்த 'ஊரேயா' என்னும் வேந்தனாற் கட்டப்பட்ட அரண்மனையின்கண் தமிழ்நாட்டுத் தேக்குமரத்துண்டொன்று கண்டெடுக்கப்பட்டது; அதுகொண்டு, பண்டைத் தமிழர்கள் ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னரேயே கடல் தாண்டிச் சென்று மேல்நாட்டவரோடு வாணிகம் நடாத்தினாரென ஆங்கிலவரலாற்று நூலாசிரியர் முடிவுகட்டிச் சொல்கின்றனர்*. அதுவேயுமன்றி, விவிலிய நூலிற் சொல்லப்பட்ட 'சாலமன்' என்னும் வேந்தன் மேல்நாட்டில் அரசுபுரிந்த கி.மு. க000த்தில், அதாவது இற்றைக்கு மூவாயிர ஆண்டுகளுக்கு முன்னமே, மயிற்றோகை, யானைமருப்பு, குரங்கு, அகிற்கட்டை முதலான பண்டங்களை, அவ் வரசனுடைய மரக்கலங்கள் 'உவரி'† என்னும் இத் தென்னாட்டுத் துறைமுகத்தில் வந்து ஏற்றிக் கொண்டுபோன வரலாறும், கருவாப்பட்டை, கருப்பூரம் முதலான பண்டங்கள் தமிழ்நாட்டிலிருந்து கிரேக்கநாட்டிற்கு இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகளின் முன்னரே ஏற்றிச் செல்லப்பட்டமையின் அப் பண்டங்களின் தமிழ்ப் பெயர்கள் கிரேக்க நூல்களிற் கலந்தவரலாறும் 'கால்ட்வெல்' ஆசிரிய

---

* Ragozin's Vedic India, p. 305.

† இப்போது இவ்வூர் தூத்துக்குடிக்குத் தெற்கே செம்படவர் குப்பமாய் இருக்கின்றது; Tamilian Antiquary, no. 1, p. 23.

ரால் நெடுநாட்குமுன்னமே நன்கெடுத்துக் காட்டப்பட்டன*. இங்ஙனமாக ஐயாயிர ஆண்டுகளுக்கு முற்ளுெட்ட காலத்திருந் தே தமிழர்களும் மேனாட்டவர்களும் ஒருங்கு கலந்துவந்தமை ஐயமின்றித் தெளியக் கிடத்தலின், அம் மேனாட்டு மொழி களுட் கலந்த பலப்பல தமிழ்ச் சொற்களில் 'ஓரை' யென்பதும் ஒன்றாதல் காண்க.

அற்றேலஃதாக, இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகளாக மேனாட் டவர்களே வான் நூ லாராய்ச்சியிற் சிறந்தவராகக் காணப்படுகின்றனரன்றி, இப் பரதநாட்டின்கண் உள்ளார், அவருள்ளும் இத் தென்றமிழ்நாட்டவர் அத்துணைப் பழைய காலத்தே அதில் வல்லுநரா யிருந்தன ரென்பது கண்டிலமா லெனின்; ஆராயாது கூறினாய்; வானூலாராய்ச்சி 'மதிவழியளவு' (சந்திரமானம்)எனவும், 'பகல்வழியளவு'(சூரியமானம்)எனவும் இருதிறப்படும். மேனாட்டவரிற் பண்டைநாளிலேயே வானூலா ராய்ச்சியிற் பெரும்புலமை பெற்று வயங்கினார் பாபிலோனியர் அல்லது சாலடியரெனப்படும் பழைய நாகரிகமக்களே யாவர். என்றாலும், இவர்கள் 'பகல்வழியளவு' என்னுஞ் சூரியமான ஆராய்ச்சியிற் றேர்ந்தவர்களேயல்லாமல், 'மதிவழியளவு' என் னுஞ் சந்திரமான ஆராய்ச்சியிற் றேர்ந்தவ ரல்லர், அதனை யுணர்ந்தவரும்அல்லர். வான்மீன்களைப் பன்னிரண்டுவீடுகளாக (இராசிகளாக)ப் பகுத்து, அவற்றினூடு செல்லும் பகலவன் இயக்கத்தைக் கொண்டு ௩௬௦ நாட்கள் அடங்கிய ஓர் ஆண் டினைப் பன்னிரண்டுதிங்களாக வகுத்தனர்†. ஆனாலும், இருபத் தேழு அல்லது இருபத்தெட்டு வான்மீன் நிலைகளை யுணர்ந்து, அவற்றூடு செல்லும் மதியின் இயக்கத்தைக் கண்டறிந்து நாள் களுங் கோள்களும் வகுத்த நம் இந்தியமக்களின் 'மதிவழியள' வாகிய சந்திரமான ஆராய்ச்சியைப் பழைய பாபிலோனியர் ஒரு

---

* See Dr. Caldwell's 'A Comparative Grammar of the Dravidian Languages,' 3rd edition, Introduction, pp. 88–91.

† Chaldea by Z. Ragozin, p. 230.

சிறிதுந் தெரிந்தவர் அல்லர். இந்நாளில் ஆரியமொழி நூல்களை எழுத்தெண்ணிக் கற்று ஆரியமொழியினும் மேனாட்டு மொழியாராய்ச்சியினும் மாப்பெரும் புலவராய்த் திகழ்ந்த மேனாட்டாசிரியரான **மாக்ஸ்மூலர்**, இவ் வரிய பெரிய உண்மையினை இற்றைக்கு சச-ஆண்டுகட்கு முன்னமே பின்வருமாறு எடுத்துக் காட்டினார்:

"பாபிலோனியர் கண்டறிந்த வான் வீடுகள் பகலவன் வழியவாகும். முளையெழுத்துப் பட்டையங்களை அடுத்தடுத்து ஆராய்ந்தமையாற் பற்பல வுண்மைகள் புலனாயினவேனும், மதிவழியளந்த வான்வீட்டாராய்ச்சி பாபிலோனியர்பா லிருந்த தென்பதற்கு ஏதொரு சுவடுதானும் அகப்பட்டிலது. மதிவழியளவு பாபிலோனியர்க்குத் தெரிந்ததொன்றென்றே வைத்துக் கொள்வோமாயினும், வேதநூல்களையும் பழைய வேதச்சடங்குகளையும் அறிந்தவர் எவரும், அவ் எளிதான வான்அளவையினைப் பாபிலோனியரிடமிருந்து இந்துக்கள் இரவலாக வாங்கிக் கொண்டனரென நம்புதற்குத் தாம் எளிதில் இசையார். வேத வேள்விகளிற் பெரும்பாலன, பகலவ னியக்கத்தைவிட மதியினியக்கத்தையே சார்ந்து நிகழ்வன வென்பது எவரும் நன்குணர்ந்ததேயாம். * * * ஒவ்வொருநாளுஞ் செய்யப்படுஞ் சடங்குகளாகிய மாப்பெருவேள்விகள் ஐந்துங், காலை மாலையிற் செய்யப்படும் எரியோம்பலுமே யன்றி, வேதகாலத்தில் முதன்மை பெற்றன: 'தர்சபூரணமாசம்' என்னும் மறைநிலா முழுநிலா வேள்விகளும், பருவகால வேள்விகளாகிய 'சாதுர்மாசியமு'மே யாகும்."* இங்ஙனமாக இப் பரதநாட்டின்கணிருந்த பண்டை நன்மக்களே வான்நூலாராய்ச்சியிற் சிறந்து விளங்கினமை காட்டியதோடு, 'மதிவழியளவு,' இருக்குவேத இரண்டாம் மண்டிலத்தின் ருஉ-ஆம் பதிகத்திலும், எட்டாம் மண்டிலத்தின் ரு-ஆம் பதிகத்திலுங் குறிப்பிடப்பட் டிருத்தலையும் முதன்முத லெடுத்துக் காட்டினார். இருக்குவேதத்தின் மட்

*Max Muller's 'India What Can It Teach Us?' pp. 126, 127.

டுமே யன்றி, எசுர்வேதத்தினுந், தைத்திரீயகத்தினுஞ், சாங்கோக்கிபத்தினும் வான்நூலாராய்ச்சிக்குரிய சான்றுகள் இருத்தலையுங் குறித்துப் போந்தார்*. இவரைப் போலவே வீபர் என்னும் மேனாட்டாசிரியரும் பழைய ஆரியவேத நூல்களிலிருந்து சான்றுகள் பல எடுத்துக்காட்டி, மிகப் பழைய நாளிலேயே இப் பரதநாட்டவர் 'மதிவழியளவை' யாகிய வானூலாராய்ச்சியிற் புலமையுடையராயிருந்தமை தெளித்து விளக்கினார்†. இவர்களெல்லார்க்கும் முன்னரேயே கோல்புரூக் என்னும் ஆசிரியர் இவ்வுண்மைகளை எடுத்துரைத்தனர்.

இனி, 'மதிவழியளவை'த் தவிரப் 'பகல்வழியளவு' வடநாட்டிலிருந்த நம்பரத நன்மக்கட்குத் தெரியாதாயினுந், தென்னாட்டிலிருந்த பண்டைத் தமிழ் நன்மக்கட்கு அவ் விருவகையளவுந் தொன்றுதொட்டே தெரிந்திருந்தன வென்பதற்குப் பதினோராம் பரிபாடலிற் போந்த,

"விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
எரிசடை யெழில்வேழந் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்த மூன்றொன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந் தேற்றியல்சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
அங்கி யுயர்நிற்ப அந்தணன் பங்குவின்
இல்லத் துணைக் குப்பால் எய்த இறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதியம் மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுனம் அடைய விரிகதிர் வேனில்
எதிர் வரவு மாரி" என்னும் பகுதியிற் பன்னிரண்டு

* MaxMuller's 'A History of Ancient Sanscrit Literature,' Panini Office edition (1912), pp. 107-109.

† A. Weber's 'The History of Indian Literature,' p. 248.

நாள் வீடுகளும் (இராசிகளும்), தாங்கூறும் முதிர்வேனிற்காலத்தில் அவை காணப்பட்டவாறும் ஆசிரியர் நல்லந்துவனர் நன்கெடுத்து மொழிதலே சான்றும். ஆசிரியர் நல்லந்துவனர், அகநானூறு, ருகூ-ஆஞ் செய்யுளில் மதுரை மருதனிளநாகனுராற் புகழ்ந்து பேசப்பட்டிருத்தலானும், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனே இம் மருதனிளநாகனுரும் ஆசிரியர் நக்கீரனுரும் பாடிய பாட்டுக்கள் (ருரு, ருசு) புறநானூற்றின்கட் காணப்படுதலானும் மேலே 412-ஆம் பக்கத்திற் கி-பி முதல்நூற்றுண்டின் முற்பகுதியி லிருந்தவராகப் பெறப்பட்ட நக்கீரனுரது காலமே நல்லந்துவனுர்க்குங் காலமாதல் தெளியப்படும். படவே, நல்லந்துவனர் கூறிய 'பகல்வழியளவு,' கி-பி இரண்டாம் நூற்றுண்டிலிருந்த கிரேக்க வானூலாசிரியரான 'தாலமி' என்பவர் கண்டெழுதிய 'பகல்வழியளவுக்'கும் முற்பட்டதாதலுந் தானே விளங்கும். இங்ஙனமாகக் கிரேக்க வானூலாசிரியர்க்கு முன்னமே தமிழ்ச் சான்றோர் 'பகல்வழியளவு' தெரிந்திருந்தமை புலனுதலிற், கிரேக்கரிடமிருந்து அவ்வளவினைத் தமிழர் கற்றுணர்ந்தாரென்பது அடாது. மற்றுத்; தமிழரிடமிருந்தே அதனைக் கிரேக்கர் கற்றுணர்ந்தாரென்க.

அற்றேற், கி-பி ஆறும் நூற்றுண்டி லிருந்த வராகமிகிரர் எழுதிய 'ஹோராசாஸ்திரத்'திற் காணப்படுங் கோள்கள், வான்வீடுகள் முதலியவற்றின் பெயர்கள் கிரேக்கமொழிச் சொற்களோடு ஒத்துநிற்றலும், அவை தமிழ்ச்சொற்களோடு ஒத்துநில்லாமையும் என்னையெனின்; கி-மு முதல்நூற்றுண்டி லிருந்தே வடநாட்டவரும் அவர்வழியே வடமொழியுந் தமிழ்நாட்டின்கண் வந்து மிகுதியாய்ப் பரவத் துவங்கிவிட்டமையின், தமிழர்கள் முன்னே தனித்தமிழ்ச்சொற்களால் வழங்கிய தம் பொருள்களையும் இடையிடையே வடசொற்களால் வழங்கத் துவங்கி விட்டனர். மேலெடுத்துக்காட்டிய நல்லந்துவனரது செய்யுட் பகுதியிற் றனித்தமிழ்ச் சொற்களினிடையே 'புந்தி,' 'மிதுனம்,' 'அங்கி,' 'பங்கு,' 'யமன்,' 'மகரம்' முதலான வடசொற்கள்

புகுந்துவிட்டமை காண்க. இங்ஙனமே நாட் செல்லச்செல்ல வடசொற்களும் வடமொழி வழக்குகளுந் தமிழ்நாட்டிற் பரவப் பரவத் தமிழர்களே தம் இயற்பெயர்களையும் 'ஞானசம்பந்தன்,' 'சுந்தரன்,' 'உமாபதி,' 'சுவாமிநாத தேசிகன்' என்றற்றொடக்கத்து வடசொற்களால் அமைக்கலானதுடன், தாமே வருந்தி யாராய்ந்தறிந்தெழுதிய ஒப்புயர்வில்லாத் தனித்தமிழ் நூல்களுக்குஞ் 'சிவஞானபோதம்,' 'சிவஞானசித்தி,' 'சிவப்பிரகாசம்,' 'சங்கர்பநிராகரணம்' முதலான வடமொழிப் பெயர்களை யமைத்து, அந்நூல்களுள் எடுத்துரைக்கப்படுஞ் சில பல பொருள்கட்கும் வடசொற்குறியீடுகளை யிட்டு வழங்குவாராயினர். தமிழ் வேளாண் மக்கட்குப் பிறந்த பிள்ளைகள் 'சுப்பிரமணியன்,' 'விநாயகன்,' 'வீரபத்திரன்,' 'சங்கரநாராயணன்' முதலான வடசொற் பெயர்களைப் புனைந்துகொண்ட அளவானே, வடநாட்டுக் குரிய ஆரியப்பிள்ளைக ளாய்விடாமை போலத், தனித் தமிழர்தம் ஆராய்ச்சி நுண்ணுணர்விற் பிறந்த 'சிவஞானபோதம்' முதலிய அருந்தமிழ்நூல்கட்கு வடசொற் பெயர் புனைந்துவிட்டமைபற்றி அவை ஆரியர்க்குரிய ஆரியநூல் களாய்விடுதல் ஒருவாற்றானுமில்லை. இவ்வாறே தமிழ்நாட்டு ஊர்களாகிய தில்லை, அண்ணாமலை, ஐயாறு முதலியன சிதம்பரம், அருணாசலம், பஞ்சநதம் முதலான வடமொழிப் பெயர்களைப் புனைந்தமட்டானே அவை வடவர்க்குரிய 'ஆரியப் பிரதேசங்க'ளாய்விடுதலும் எஞ்ஞான்றுமில்லை. இவ்வியல்புகளை ஆய்ந்து கண்டுணரமாட்டாதார், இவ்வடசொற் பெயர்களுங் குறியீடுகளும் உடைமைபற்றி மேற்கூறிய உண்மைத் தமிழ்நூல்களை வடநூன் மொழிபெயர்ப்புகள் போலுமென மயங்குவாரும், அவை அவற்றின் மொழிபெயர்ப்புகளேயா மெனப் பிடித்துப் பேசுவாருமாய்ப் பெரிதும் பிழைபடாநிற்பர். இஞ்ஞான்றை ஆங்கிலவழக்குப் பற்றி, ஆங்கிலம் அறியாத் தமிழ்மாதர்களுந் தாம் வழங்கும் பண்டங்களுக்குத் தப்புந் தவறுமாய் ஆங்கிலச் சொற்களையிட்டுப் பேசுதலும், ஆங்கிலமுணர்ந்த தமிழாடவர்

இடையிடையே ஆங்கிலச்சொற் கலந்த தமிழில் உரையாடுத லும் ஆகிய 'அயல்மொழி மயக்கின்' இயல்பினை உற்றுக்காண வல்லார்க்குப், பண்டைத் தமிழ்ச்சான்றோருந், தமக்குப் புறம் பான ஆரியமொழிச் சொற்களைத் தாங் கண்டறிந்த கோள்கள் நாள்கள் முதலியவற்றிற்கும் பிறவற்றிற்கும் பெயர்களாய் அமைக்கும் வேட்கையுடையரானதன் உண்மை புலனுகா நிற் கும். வடநாட்டவரால் அறியப்படாமல் தமிழ்நாட்டவராற் கண்டுணரப்பட்ட கோள்கள் நாள்கள் ஓரைகட்குத் தமிழ்ச் சான்றோரே வடமொழிப் பெயர்களைப் புனைந்துவிட்டா ராக லின், வாணிகஞ் செய்தற்பொருட்டும் பொறிகள் அமைக்கும் பொருட்டும் அரசர்க்கு மெய்காப்பாளராயும் ஏவற்சிலதர் சில தியராயும் அமர்தற்பொருட்டுந் தமிழ்நாட்டில் தொகைதொகை யாய் வந்த யவனராகிய கிரேக்கரே 'பகல்வழியள' வினைத் தமி ழர்பாற் கற்றுணர்ந்து, அதனைத் தாம் கற்றுணர்ந்தபடியே வட சொற்பெயர்களாற் றமது கிரேக்கமொழியில் வரைந்துவைப்பா ராயினர். அவ்வாறவர் வரைந்துவைத்த வானூற்கல்வி அவர் கூட்டங்கூட்டமாய்க் குடியேறிய வடநாட்டிற் பரவவே, அங் கிருந்த வராகமிகிரரை யுள்ளிட்ட வடநூற் புலவர்கள் அப் பகல்வழியளவினைத் தாமுங் கற்று, அதன்கட் காணப்பட்ட பெயர்களுங் குறியீடுகளுந் தமது ஆரியமொழிக் குரியவாயிருத் தலைக்கண்டு மகிழ்ந்து, அவையெல்லாவற்றையும் ஒருங்கே தழுவி 'ஹோராசாஸ்திரம்' எனப் பெயரிய ஒரு வான்நூல் எழுதி, அங்ஙனம் எழுதினுந் தாம் அறிந்த அப்பகல்வழியளவு தமக்குக் கிரேக்கர்பாலிருந்துங் கிடைத்ததென்பது தோன்ற அதற்கு 'ரோமகசித்தாந்தம்,' 'பௌலிசசித்தாந்தம்' என்னும் பெயர்களையுங் கிளந்து சூட்டினர்*. இங்ஙனமாகக் கிரேக்கர் 'பகல்வழியள'வினைத் தமிழர்பாலிருந்து கற்றது கி-பி இரண்

---

* See Dr. A. Weber's 'The History of Indian Literature,' p. 258; and also Mr. R. C. Dutt's 'A History of Civilisation in Ancient India,' vol. II, p. 243.

டாம் நூற்றாண்டிலும், அதனை வடநாட்டவராகிய ஆரிய பட்டரும் வராகமிகிரருங் கிரேக்கர்பாலிருந்து கற்றது கி-பி ஐந்தாம் நூற்றாண்டின் துவக்கத்திற்குப் பின்னுமேயாகலின், இதனைக் கி-பி முதனூற்றாண்டுக்கு முன்னரே யறிந்திருந்த தமிழ்ச்சான்றோரே இதனை இவ்விருவேறினத்தார்க்குங்கற்பித்த ஆசிரியராவரென் றுணர்ந்துகொள்க.

அற்றாயினுஞ், சாலடிநாட்டிலிருந்த பாபிலோனியர் மிகப் பழைய நாளிலேயே வான் நூலாராய்ச்சியில் தேர்ச்சிபெற் றிருந்தாரென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்த தாகலின், அவரொடு வாணிகம் நடாத்திய பண்டைத் தமிழரே 'பகல்வழி யள'வினை அவர்பாற் கற்றுணர்ந்தா ரென்றாற் படும் இழுக் கென்னையெனிற்; கூறுதும். பண்டைச் சாலடியராதல், இருக்குவேத காலத்து வடவராதல் வானூலாராய்ச்சியில் நிரம்பத் தேர்ந்தவரென்று கோடல் அமையாது; என்னை? சாலடியர் அதிற் றேர்ச்சி பெற்றது உண்மையாயின், அவர்பாற் 'பகல்வழியள' வோடு 'மதிவழியளவுங்' காணப்படுதல் வேண்டும், மற்றஃது அவர்பாற் காணப்படாமையானும், இனி இருக்குவேதகாலத்து வடவர் அதிற்றேர்ச்சிபெற்றவராயின் அவர்பால் 'மதிவழியளவு' காணப்படுமாறுபோலப் 'பகல்வழியளவுங்' காணப்படுதல்வேண்டும், ஆனாலஃது அவர்பாற் காணப் படாமையானும் என்பது. பண்டைச் சாலடியர்பாற் 'பகல்வழியளவு' ஒன்றுமே காணப் படுதலானும், இருக்குவேதகாலத்து வடவர்பால் 'மதிவழியளவு' ஒன்றுமே காணப் படுதலானும், மற்றப் பண்டைத் தமிழர் பாலோ அவ் இருவேறளவும் ஒருங்கே காணப்படுதலானும், சாலடியரும் வடவருந் தாமாகவோ அன்றித் தமிழரிடமிருந்தோ அவ் விரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளுதற்கு முன்னமே, தமிழ்ச் சான்றோர் தாமாகவே அவ் விருவகையளவும் ஒருங்குணர்ந்திருந்தமை தேற்றமாம்.

அற்றன்று, சாலடியரிடமிருந்து 'பகல்வழியளவும்,' வடவரிடமிருந்து 'மதிவழியளவுந்' தெரிந்துகொண்டமையினாற்றான்,

தமிழர்பால் அவ் விரண்டும் ஒருங்கு காணப்படுவ வாயின வென்றுரையாமோ வெனின், உரைபாம். தமிழரின் வானூலுணர்ச்சியை நடுவுநிலை வழாது ஆராய்ந்தறிந்த மக்லீன் என்னும் மேனாட்டாசிரியர்,

"தென்னாட்டின்கண் உள்ள பரதவர் தமது தொழிலின் பொருட்டு வளர்பிறை தேய்பிறை இயக்கங்களைத் தெரியவேண்டினமையிற், பண்டைநாளிலேயே காலத்தை 'மதிவழியளக்கும்' கணக்கை உண்டாக்கினர். வெளிநிலங்களி லிருந்த உழவர்களோ பருவகாலங்களையும் பகலை னியக்கங்களையும் உற்றுநோக்குவாராயினர். பார்ப்பனரது தொடர்பினுற் பற்றப்படுதற்கு முன்னமே, தமிழர்கள் தமது நாள் வாழ்க்கைக்குவேண்டிய வளவு வானூற் பயிற்சியை மிகவுஞ் சிறந்ததாகச் சீர்ப்படுத்தி வைத்திருந்தனர்; அவர்களது முறை பலவாற்றானும் இன்றும் நிலைபெறுற்று நிலவுகின்றது. தமிழரது காலக் கணக்கை ஒழுங்குறுத்துவ தாகிய விபாழ மண்டிலச் சுழற்சி ஐந்து கொண்ட அறுபதாண்டு வட்டம் ஆரியரது முறையிற் சேர்ந்த தன்று. தமிழரின் மனைவாழ்க்கை நிகழ்ச்சிகளின் பொருட்டு வழங்கும் பன்னிரண்டாட்டைக் காலஅளவும் அங்ஙனமே தமிழர்க்கு மட்டும் உரித்தாவது." என்றுகூறுதலும்,* ஸ்லேட்டர் என்னும் ஆசிரியர்,

"தமிழ்க் காலக் குறிப்புகள் நம தாராய்ச்சி யுணர்வினைப் பெரிதும் எழுப்பி விடுகின்றன. குருக்கள்மார்க்கு உரியதுங் குடிமக்கட் குரியதுமெனக் காலக்குறிப்பு இருதிறப்படுகின்றது. குருக்கள்மார்க் குரிய குறிப்பு, தெலுங்குக் குறிப்பு உட்பட ஏனை ஆசியாநாட்டுக் குறிப்புகளோ டொப்ப 'மதிவழியளவின்' பாற் படுவதாகலின், அதனைச் சிறந்தெடுத்துப் பேசல்வேண்டா. ஆனாற், குடிமக்கட் குரிய காலக்குறிப்போ 'பகல்வழியள'வின் பாற்படுவது, உண்மையாகவே முற்றும் 'பகல்வழியள'வின்பாற்

*Quoted in Mr. T. R, Sesha Iyengar's 'Dravidian India,' pp. 129, 130.

படுவதாகும்; முதலில் 'மதிவழியள'வாயிருந்து பின்பு பகல்வழி யாண்டிற்கு இசையத் திரிபு செய்யப்பட்ட நமது காலக் குறிப்பை ஒப்பதன்று. ஒரு திங்களுக்கு இத்தனை நாட்கள் தாம் இருத்தல் வேண்டுமென்று அவாவாத அவ்வளவுக்கு அது தனிப் 'பகல்வழியள'வின்பாற் பட்டதா யிருக்கின்றது. பகலவன் செல்லும் வான்வழியானது பன்னிரண்டு கூறுகளாகப் பகுக்கப் படுகின்றது; காலையிலோ நண்பகலிலோ இரவிலோ எந்த நேரத்திற் பகலவன் ஒரு புதுவீட்டிற் செல்கின்றனனோ அந்த நேரத்திலேயே ஒருபுதுத் திங்கள் பிறக்கின்றது. நாட்களின் பிறப்பானது கதிரவன் எழும் பொழுதிலேயே துவங்குகின்றது; அங்ஙனந் துவங்குவது, இந்தியாவிலுள்ள ஏதேனும் ஓரிடத்திற் றோன்றுங் கதிரவன் எழுச்சியைப் பற்றிய அவ்விடத்து நேரத்தைக் கொண்டன்று; மற்று, அது, பழைய தமிழர்கள் கோள்களின் இயக்கங்களைஉற்றுநோக்குதற்கு அமைத்த கொடுமுடிக ளுள்ள இடத்தின் நேர் உச்சியிலும், நடுக் கோட்டின் (Equator) பாற்படும் இடத்திலும் பகலவன் எழும்போது கணக்குச்செய்யப்பட்ட நேரத்தைக்கொண்டுதுவங்குவதாகும். இத்தகையதொரு தனிக் காலக்குறிப்பினை இவர்கள் எக்காலத்திற் கைக்கொண்டார்க ளென்பதை எவரேனும் என்றாயினும் எடுத்துக் காட்டினரோ இல்லையோ யான் அறியேன். இது தனித்த இயல்பிற்றென்பதும், வழக்கமான வசதிக்குச் சிறிது இடர் பயப்பதாயினுங் கோள்கள் நாள்களின் இயக்கங்களை முன்பின் முரணுமல் திருத்தமாக அளந்தறிவதில், இப்போது வழங்கும் வேறெந்தக் காலக் குறிப்பைக் காட்டிலும், இதுவே முன்நிற்ப தென்பதும் பெரிதுங் கருத்திற் பதிக்கற் பாலனவாகும். இது தமிழரல்லாதாரின்தொடர்பு சிறிதும் அணுகப் பெறாத தென்னாட்டின்கண் தனியே இடையறாது நடைபெற்று வந்த தமிழ்மக்களின் கலைநூற் புலமையின் சுறுசுறுப்பினை மெய்ப்பிக்கின்ற தன்றோ?"* என்று கூறுதலுங் கொண்டு,

* 'The Dravidian Element in Indian Culture' pp. 71, 72.

சாலடியர்க்குத் தெரியாத 'மதிவழியள'வினையும், ஆரியர்க்குத் தெரியாத 'பகல்வழியள'வினையும் பண்டைத் தமிழ்மக்கள் தாமாகவே நன்கறிந் திருந்தமை தெளியக் கிடக்கின்றதன்றோ? தமிழ் நாட்டின்கண் வழங்கும் அறபது ஆண்டுகளுக்குத் தமிழ் மக்கள் வடமொழிப் பெயர்களைப் புனைந்திருப்பினும், வியாழ மண்டிலச் சுழற்சியை ஆராய்ந்துகண்டு அவ்வாற்றால் அவ்வறுப தாண்டுகளை வகுத்தமுறை தமிழ்மக்கட்கே உரித்தாதல், மேற் காட்டிய ஆங்கில ஆசிரியர் நடுவுநின்று ஆராய்ந்துரைக்கு முறை யால் இனிது பெறப்படுகின்றதன்றோ? இவ்வாறு லாராய்ச்சி யால் வெளிப்பட்ட உண்மையைக் கருத்தூன்றிப் பார்ப்ப வர்க்கு, வட சொற்களையுங் குறியீடுகளையும் உடைமை பற்றித் தமிழர்க் குரியவைகள் ஆரியர்க் குரியவாதல் செல்லாமை நன்கு விளங்கும். எனவே, வெறும் பெயர்களையுங் குறியீடுகளையுங் கண்டு மயங்கி உண்மையைத் திரித்துணராமல், அதனை உள்ள வா றுணர்தல் மெய் யறிவினர்க்கு இன்றியமையாத கடமையா தலுந் தானே போதரும். என்றித்துணையும் விரித்து விளக்கிய வாற்றாற், பழைய 'தொல்காப்பிய நூலுட்' காணப்படும் 'ஓரை' என்னுஞ்சொல் வான்வீட்டைக் குறிக்குந் தூய தமிழ்ச் சொல் லாய்ப் பண்டைத் தமிழரால் வழங்கப்பட்டுவந்த தொன்றாவ தூஉம், தமிழர்பால் வந்து 'பகல்வழி'யளவினைக் கற்றுணர்ந்த யவனராகிய கிரேக்கரே அதனைப் பல தமிழ்ச்சொற்களோடு அத னையுங் கற்றுப் போய்த் தாம் வரைந்த வானூல்களுள் எழுதி வைப்பாராயினரென்பதூஉம் நன்கு புலனாதலின், அவ் 'ஓரை' எனுஞ் சொல்லைக் கிரேக்க மொழியெனப் பிறழவுணர்ந்து, அவ் வாற்றால் 'தொல்காப்பியம்' கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்றான் இயற்றப்பட்டதாதல்வேண்டுமெனக் கரைந்தாருரை பொருந்தா வுரையாதல் காண்க. மேலும், 'ஓரை' என்னும் இத் தமிழ்ச் சொல் கிரேக்க மொழியில் 'ஓர்' எனப் பெரும்பாலுந் தமிழ் வடிவத்தோடு எழுதப்படுதலையும்* நினைவிற் பதித்தல்வேண்டும்.

* A. Weber's 'The History of Indian Literature,' p. 254.

இச் சொல்லைக் கிரேக்கரிட மிருந்து கடன்வாங்கிய வடநாட்டு ஆரியரே அதன் தமிழ் வடிவத்தைத் திரித்து 'ஹோரா' என எழுதினர் என்க.

இனிப், பாண்டியஅரசர் வழங்கிய'வட்டெழுத்துக்க'ளின் பிறப்பையும், அவற்றாற் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் காலத்தையும் ஆராயும் முகத்தால், 'தொல்காப்பிய' காலத்தைக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற் படுப்பித்தார் உரைகள் ஆராயற் பாலன. தமிழ்நாட்டில் வழங்கிய வட் டெழுத்துக்களைப் பற்றியும், இவ் விந்திய நாடெங்கும் வழங்கிய அசோக எழுத் துக்களைப் பற்றியும் யாம் இற்றைக்கு இருபத்தோராண்டுகட்கு முன்னமே ஆராய்ந்து, அவ் வாராய்ச்சியைக் கி-பி கசூ0சு-ஆம் ஆண்டு வெளிப்போந்த 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்' என்னும் எமது நூலில் வரைந்திட்டாம். அதற்கு எட்டாண் டுகள்கழித்துக் கி. பி. கசூகச இல் ஆங்கிலத்தில் வெளியிடப் பட்டதாகிய 'தமிழாராய்ச்சிகள்' (Tamil Studies) என்னும் நூலின்கண் அதன் ஆக்கியோரான சீனிவாசஐயங்கார் வட் டெழுத்துக்களைப் பற்றிய எமதாராய்ச்சியினை முற்றுந் தழுவி, வட் டெழுத்துக்கள் தமிழர்க் குரியனவே யன்றி வடநாட்டில் வழங்கிய 'பிராமி' எழுத்துக்களின் திரிபாகா வென்றும், இற் றைக்கு மூவாயிரத்தைந்நூறாண்டுகட்கு முன்னமே தமிழரும் பினீசியர் எகுபதியரும் வாணிகவாழ்க்கையிற் கலந் துறவாடின ராகலின் எகுபதிய ரறிந்த எழுத்துமுறையைத் தமிழரும் அந் நாளிலேயே அறிந்தவரா யிருத்தல் வேண்டுமென்றும், இவ் வெழுத்து முறையைத் தமிழரிடமிருந்தே இந்திய ஆரியர் கற் றுணர்ந்தவராதல் வேண்டுமென்றும், ம ப என்னும் எழுத்தின் வடிவங்கள் பிராமி அசோக எழுத்துக்களிலும் வட்டெழுத்துக் களிலும் வேறுபட் டிருத்தலே இதற்குச் சான்றாமென்றும், ஆசிரியர் தொல்காப்பியனார் உரைக்குந் தமிழ் எழுத்தின் வடி வங்கள் வட்டெழுத்துக்களின் வடிவோடு ஒத்திருத்தல்போற் பிராமி எழுத்துக்களின் வடிவோடு ஒத்திராமையால் தொல்காப்

பியனூர் காலத்திற்கு முன்னமே வட்டெழுத்துக்கள் தமிழ்நாட்டின்கண் வழங்கினவாதல் வேண்டுமென்றும் நன்காய்ந்து வலிய சான்றுகள் பலவற்றால் தமிழ் எழுத்துக்களின் பழமையை இனிது விளக்கிக்காட்டி யிருக்கின்றார்*. அவர்கொண்ட முடிபே எமது முடிபுமா மாகலானும், இவ்விந்தியநாட்டு எழுத்தின் வடிவங்களை நன்காய்ந்துகண்ட 'ரிஸ்டேவிட்ஸ்,' 'தாமஸ்,' 'பர்னல்' முதலான ஐரோப்பிய ஆசிரியர் நடுநின்றாராய்ந் துரைக்கும் உரையும் எமது முடிபோடு ஒருங்கொத்து நிற்றலானுந் தமிழ் வட்டெழுத்துக்கள் தமிழர்க்கே உரியவாய்த் தொல்காப்பியனூர் காலத்துக்கு முன்னே தொட்டு வழங்குந் தனித்தமிழெழுத்துக்களே யல்லாமல், அவை வட வாரியர் வழங்கிய பிராமி எழுத்துக்களினின்றும் வந்தன அல்லவென்பது கடைப்பிடித் துணர்தல்வேண்டும். தமிழ் வட்டெழுத்துக்கள் ஆறாயிர ஆண்டுகளாய் வழங்குவனவாகப், பிராமி யெழுத்துக்களோ இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு உட்பட்ட வழக்கமே யுடையனவாயிருத்தலாற், பிராமியெழுத்துக்களே தமிழ் வட் டெழுத்துக்களைப் பார்த்துச் செய்யப்பட்டன வாகல் வேண்டு மல்லது, வட்டெழுத்துக்கள் பிராமி யெழுத்துக்களைப் பார்த்துச் செய்யப்பட்டனவாகல் ஒரு சிறிதுஞ் செல்லாதென்க.

அற்றேற், கி-பி எட்டாம்நூற்றாண்டிற்குமுன் வட்டெழுத்துக்களாற் செதுக்கப்பட்ட ஒரு கல்வெட்டாயினும் இத்தென்றமிழ்நாட்டின்கட் காணப்படாமை யென்னையெனிற்; கி-பி எட்டாம் நூற்றாண்டிற்கு முன்னே நீண்டு சென்ற பெருங் காலத்திலேதான் தமிழருந் தமிழ் மன்னரும் மிகச் சிறந்த நாகரிக வாழ்க்கையி லிருந்தனர்; அக்காலத்திலேதான் தனித்தமிழ் மொழி எழில்நலங் கனிந்து தன் சுடரொளி விரிந்து வீறித் திகழ்ந்தது; அஞ்ஞான்றிருந்த தமிழ்ப்புலவர்கள் மெய்யறிவு சான்ற மேன்மக்களாய்ப் பலகலைத் துறைகளிலும் அறிவுநிரம்பி

* See 'Tamil Studies,' pp. 113–131.

அவ்வத்துறைகளினும் அளவிறந்த விழுமிய நூல்களியற்றி இத் தமிழகத்தை அறிவொளியால் துலங்கச் செய்தனர்; அப் பண்டைநாளில் ஏனை நாடுகளிலிருந்த ஏனை மக்களெல்லாம் நாகரிகத்திலும் வளத்திலுங் குறைந்தாராய்த் திருந்திய அறிவின்றி வருந்துநிலையி லிருந்தமையின் அவரும் அவர்தம் மன்னருந் தமிழகத்தைக் கைப்பற்றமாட்டாராயினர். அதனால், தமிழகந் தனக்குப் பகையாவார் எவருமின்றித் தன் வேந்தர் பெருமக்களின் வெண்கொற்றக்குடை நீழலில் அமைதியுற் றிருந்தது; எங்குங் கல்வியுங் கைத்தொழிலும் உழவும் மலிந்திருந்தன; நூல்களும் நூலாராய்ச்சி செய்வார் தொகையும் பெருகிக்கிடந்தன; எல்லாநூல்களும் ஏடுகளில் எழுதப்பட்டு எங்கும் பரந்து வழங்கின. அரசர்களின் ஆண்மையும் புகழும் விளங்கப் பாடிய பாட்டுக்களும், அவர்தம் ஈகையுங் கொடையும் வரலாறும் விரித்த நூல்களும் ஏடுகளிற் பொறிக்கப்பட்டு எங்கும் நிலவினமையாலும், இவ் வேட்டுச் சுவடிகள் அழிந்துபடுதற்குரிய நிகழ்ச்சிகள் ஏதுமே அஞ்ஞான்று நிகழாமையாலும் அவை தம்மைக் கருங்கற்களிற் செதுக்கிவைக்க வேண்டுமென்னும் எண்ணம் பண்டைத் தமிழ் மன்னர்க்குங் கற்றோர்க்கும் ஏனைக் குடிமக்கட்குந் தோன்றாமலே போயிற்று. அதனாலே தான் கி-பி எட்டாம் நூற்றாண்டிற்கு முற்சென்ற பழந்தமிழ்க் காலத்தில் வட்டெழுத்தால் ஆக்கிய கல்வெட்டு ஒன்றுதானும் இல்லாதாயிற்று. இதனை முன்னரே 11-ஆம் பக்கத்திலும் எடுத்துக் காட்டினேம். மற்று, வடநாட்டிற் குடிபுகுந்த பழந்தமிழரோ தென்னாட்டவரைப்போல் நாகரிகத்தில் அத்துணைச் சிறவாமையானுந், தம் நாட்டகத்தே அடுத்தடுத்துப் புகுந்த ஆரியரானுங் கிரேக்கரானும் ஊணரானுந் தொடர்பாக அலைக்கப்பட்டு அவ்வலைப்பினால் தம் அரும்பொருள்களையும் நாடுநகரங்களையும் நூற்சுவடிகளையும் இடையிடையே இழக்கலான்மையானும் அங்கிருந்த மன்னர்களும் பிறருந் தம் ஆண்மைச் செயல்களையும் பிற வரலாறுகளையும் எளிதிற் சிதைந்துபோம்

பனையேடுகளிற் பொறித்துவைப்பாமற் கருங்கற்களிற் செதுக்கி வைக்க வேண்டியவரானார். அதனாற் கல்வெட்டுகள் முதன் முதல் வடநாட்டின்கண்ணேதான் தோன்றுவவாயின. கி-பி இரண்டாம் நூற்றாண்டிற்குப்பின் தென்னாட்டின்க ணிருந்த தமிழ்வேந்தர்களின் ஆற்றலும் ஆண்மையுஞ் சுருங்கவே வடக்கிருந்த மன்னர்கள் மெல்லமெல்லத் தமிழ்நாட்டின்கட் புகுந்து தமிழ் மன்னர்களைவென்று அதனைக் கைக்கொள்வா ராயினர். இங்ஙனமாக இத்தென்னாட்டின்கட் பெருங்குழப்பங்கள் நிகழ்வுழித் தமிழ்மக்கள் தமக்குரிய அரும்பொருள்களையும் நாடு நகரங்களையும் ஏட்டுச் சுவடிகளையும் இழந்துவரலானார். வடக்கிருந்துவந்த பல்லவ அரசர்களுந் தமது வழக்கப்படி தம் ஆண்மைச் செயல்களையும் பிறவற்றையுங் கருங்கற் சுவர்களில் ஆங்காங்குப் பொறித்துவைப்பாராயினர். அப் பல்லவர்காலத்தும் அதற்குப் பின்னும் இத் தமிழகத்திலிருந்த தமிழரசர்களும் அவ்வழக்கத்தைத் தாமுங் கைப்பற்றி எடுகளினும் நிலைபெறுயுள்ள கல்வெட்டுகளை அமைப்பாராயினர். தமிழ்நாட்டின்கட் கி-பி மூன்றும் நூற்றாண்டிற்குப்பின் கல்வெட்டுகள் உண்டான வரலாறு இங்ஙனமாகலின், இஃதறியாமல் அம் மூன்றாம் நூற்றாண்டிற்குமுன் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றுதானும் இல்லாமைபற்றி, வட்டெழுத்துக்களை அஞ்ஞான்று வழங்கிற்றில வெனக் கரைவாருரை பொருந்தாப் புல்லுரையாமென்க. நாகரிகம் மிக்க இந்நாளிற் காகிதச் சுவடிகளில் எத்தகைய வரலாறும் நூலும் எழுதிவைப்பாரையே காண்டுமன்றி, அவை தம்மையெல்லாங் கருங்கற் பலகைகளிலேயே பொறித்துவைப்பாரைக் காண்கிலேம்; இடைப்பட்ட காலத்து வழக்கம்பற்றிக் கருங்கற்களில் நினைவுக்குறிகளை வரைந்தமைப்பார் இஞ்ஞான்று ஒரு சிலரேனும் உளராதல்போலப், பண்டைக்காலத்துத் தமிழ் நாகரிகமாந்தரிலும் "பெயரும் பீடுமெழுதி அதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்"* நாட்டும் வழக்கம் நிகழ்ந்து வந்

* அகநானூறு, கஙக.

தமை பழைய நூல்களிற் புலனாயினுங், கி. பி இரண்டாம் நூற்றாண்டிற்குமுன் அங்ஙனம் நாட்டப்பட்ட நடுகல் ஒன்றுதானும் இதுகாறுங் காணக்கிடையாமையின், அவ் வியல்பினை இனைத்தென்றுணர்தல் இயலாதென்றுவிடுக்க. மேலும், இத் தென்றமிழ் நாட்டின்கட் பழைய நகரங்கள் இருந்து அழிந்துபோன இடங்களை அகழ்ந்து, அவற்றின் கீழ்ப் புதைந்து கிடக்கும் பொருள்களை மேற் கொணர்ந்து ஆராய்வார் இன்மையின், பண்டைக் காலத்து நடு கற்களின் இயல்பினை அவ்வாராய்ச்சியின்றி முடிவுகட்டுதல் இயலாதென்பதுங் கருத்திற் பதிக்கற்பாற்று. அசோகமன்னன் காலத்திலேயே அவனுக்குக் கீழடங்காமல் அவனை யொத்தநிலையி லிருந்த சேர சோழ பாண்டியர்களாந் தமிழ்வேந்தரின் அரசியல் மாட்சி அவ்வசோகமன்னன் வெட்டுவித்த கல்வெட்டுக்களிலேயே நுவலப்பட் டிருக்கின்றது; அத்துணைச் சிறந்த அத் தமிழ்மன்னர்தம் நாகரிக அரசியல் எழுத்துக்களின் உதவியின்றி நடைபெறுதல் இயலாதென்பதும் ஓர்ந்துணரற்பாற்று. மேலும், வட் டெழுத்துக்களாற் பொறிக்கப்பட்ட பழைய கல்வெட்டுகள் கிடையாவாயினும், அவ் வெழுத்துக்களின் வடிவினைத் தெளிய விளக்கும் மிகப் பழைய தொல்காப்பியநூல் உண்மையின், இதனினுஞ் சிறந்த சான்று பிறிதொன்று வேண்டுமோ வெனவுங் கூறிமறுக்க. கி. பி எட்டாம் நூற்றாண்டுமுதல் தமிழ்நாட்டில் வழக்கத்துக்குவந்த கல்வெட்டுகள் அந் நூற்றாண்டிற்குமுன் அந் நாட்டின்கட் காணப்படாமையினையே ஒரு பெருஞ்சான்றாய்க் கொண்டு, ஏனைப் பழைய உண்மைத் தமிழ்நூற் சான்றுகளை யெல்லாம் புறந்தள்ளி, அவ்வாற்றால் தமிழ்மொழி கி. பி எட்டாம் நூற்றாண்டிற்குமுன் ஓர் ஒழுங்குபட்டநிலையை எய்தவில்லையெனக் கரையும் பார்ப்பனர், அவ்வாறு கரைதல் தமக்குந் தமக் குரியதெனக் கொள்ளும் வடமொழிக்குமே கேடு பயத்தலை யுணர்ந்திலர். என்னை? தனிச் சமஸ்கிருத மொழியிற் பொறிக்கப் பட்ட கல் வெட்டுகள் எல்லாங் கி. பி இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டனவேயன்றி,

அதற்கு முற்பட்டது அவற்றுள் ஒன்றுதானும் இன்மையின்,* சமஸ்கிருத மொழியும் அவ் விரண்டாம் நூற்றாண்டிற்குமுன் ஓர் ஒழுங்குபட்டநிலையை எய்தவில்லையென்பதும், அம்மொழியிற் பழைய நூல்களெனக் கூறப்படும் இருக்கு, எசுர் முதலிய வேதங்களும் பிராமணங்களும் பிறவு மெல்லாம் பிற்றை ஞான்றைப் பார்ப்பனர்களாற் பழையனபோற் புனைந்து கட்டப்பட்டனவேயன்றி உண்மையில் அவை கி-பி இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டனவேயா மென்பதும் முடிக்கப் படுமாகலின் என்க. கல் வெட்டுகளை மட்டுஞ் சான்றாகக் கொண்டு தமிழ்ப் பழமையைக் குறைக்க மடிகட்டி நிற்கும் பார்ப்பனர்க்கு, அவர் கொண்ட அம் முறையே அவர்தம் வடநூற் பழமையைக் குறைத்து, உண்மைக்கு மாறாய்ப் பெரியதொரு தலைதடு மாற்றத்தினை விளக்கக் காண்டலிற், பழைய உண்மைநூற் சான்றுகளே பண்டைக்கால நிலையினை உள்ளவாறு அளந்தறிதற்குக் கருவியாதல் தெளிந்து கொள்க. எனவே, கி-பி எட்டாம் நூற்றாண்டிலிருந்து இத் தமிழ்நாட்டில் வழங்கிய தமிழ் வட்டெழுத்துப் பட்டையங்களை மட்டுஞ் சான்றாகக் கொண்டு, அவற்றிற்குப் பல்லாயிர ஆண்டு முற்பட்ட தொல்காப்பிய நூலின் காலத்தை அளக்கப் புகுதல் 'நரிவால் கொண்டு கடலாழம் பார்க்கப் புகுத'லோடு ஒத்து நகையாடற் பாலதாமென விடுக்க. இனித் தொல்காப்பியத்தி னுதவிகொண்டே வட் டெழுத்துக்களின் காலந் துணியப்படுவதன்றி, வட் டெழுத்துப் பட்டையங்களி னுதவிகொண்டு தொல்காப்பியகாலந் துணியப்படா தென்பதுங் கடைப் பிடிக்க.

இன்னுங், குமரிநாடு கடல்வாய்ப்படாது நிலவியகாலத்தில் தொல்காப்பியம் இயற்றப்பட்டதா மென்பதற்கு, அந் நூலின் கண் உள்ள குறிப்புகள் பலவுமே நன்கு சான்று பகர்கின்றன. அவற்றுட் சில எடுத்துக்காட்டுதும்: ஆசிரியர் தொல்காப்பியனார் வெறுமணல் வெளியாகிய பாலை நிலத்தை "நடுவு நிலைத்

* See Prof. Rhys Davids' Buddhist India, pp. 134, 135.

திணை" எனவும், அந் நிலத்தின்கண் வேனிற்காலத்து நண்பகற் கொடுமையே மிகுந்திருக்கும் எனவுங் கூறுகின்றார்.* நாற்புறத் துங் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலப் பகுதி களாற் சூழப்பட்டு, அவற்றிடையே மிக அகன்று நீண்டு விரிந்து கிடப்பதாகிய வெறுமணல் வெளிக்கு அவர் "நடுவுநிலைத்திணை" என்று பெயர் கூறுமாற்றை உற்றாராயுங்கால், அத் தகைய தொரு பெரு மணல்வெளி அவர் காலத்தில் இருந்ததாகல் வேண்டுமென்பது புலனும். இஞ் ஞான்றுள்ள இத் தமிழ்நாட் டின்கண், நாற்புறமும் நால் நிலங்களாற் சூழப்பட்டு இடையே பெரிதும் விரிந்து நீண்டு வேனிற்கொடுமை மிகுந்த அத்துணைப் பெரியதொருமணல்வெளி எங்கேனும் உளதோவெனஆராயின், அவ்வியல்பின தொன்று உளதென்பது புலனாகவில்லை. வெம் மை மிகுந்த நடுக்கோட்டிற்கு(Equator)இஞ் ஞான்றைத் தமிழ் நாடு மிக எட்டியிருத்தலின் அவர் கூறியதொரு வேனிற்காலக் கொடுமையும் இங்குப் புலனாகவில்லை. ஆகவே, தொல்காப்பிய னார்கூறிய பெருமணல்வெளியும், அதன்கண்உண்டாம் வேனில் அழற்சியும் நடுக்கோட்டை யடுத்த நிலப் பகுதியிலேதான் இருந்தனவாதல் பெறப்படும். அந் நிலப்பகுதி இஞ்ஞான்று இந்தியமாக்கடலின்கீழ் அமிழ்ந்தி நிற்பினுந், தொல்காப்பியனார் இருந்த ஞான்று அது பெரியதொரு நிலப்பரப்பாய்க் குமரிநா டெனப் பெயர்பெற்றிருந்ததென உணர்ந்துகொள்க. அந் நிலப் பரப்பி னிடையே யிருந்த பெரும் பாலைநிலமே அவரால் 'நடுவு நிலைத்திணை' எனச் சுட்டப்பட்டதாகும் என்பது.

அதுவேயுமன்றித், தொல்காப்பியனார், "ஒட்டகம் அவற் றோடு ஒருவழி நிலையும்" என்னும் மரபியற்சூத்திரத்தில் (கஅ), 'ஒட்டகம்' என்னும் விலங்கினைக் குறிப்பிட் டிருக்கின்றார். தமதுகாலத்திருந்த நூல்களிற் பெருவரவினவாய் வழங்கிய சிற் றுயிர்களின் ஆண் பெண் அவற்றின் பிள்ளைகளை எவ் வெச்

* தொல்காப்பியம், அகத்திணையியல், கூ-ஆஞ் சூத்திரம்.

சொற்களால் வழங்குதல் மரபோ அம் மரபினை அவர் முறைப் படுத்திச் சொல்லுதற்கண் ஒட்டகம் என்னும் விலங்கும் அவ ரிருந்த காலத்துமக்களாற் பெரிதும் பயன்படுத்தப்பட்டதொன் றென்பது தெற்றென விளங்காநிற்கும். ஒரு பெரும் பாலை நிலத்தைச் சூழவுள்ள மக்களே அம் மணல்வெளியை ஊடுருவிச் சென்று வாணிகம் நடாத்துவர். அவ்வாறவர் அம் மணல்வெளி யை ஊடுருவிச் செல்லுதற்கே, அந் நிலத்தில் இயற்கையே யுண் டாய் உயிர்வாழும் ஒட்டகம் என்னும் விலங்கினைப் பயன்படுத் தாநிற்பர். இவ் வுண்மை, இஞ் ஞான்றை வட ஆப்பிரிக்காவி லுள்ள சகாரா என்னும் பெரும் பாலைநிலத்தைச் சூழவுள்ள மக்கள் ஒட்டகத்தின் உதவியையே கொண்டு வாணிகம் நடாத்து மாற்றால் நன் குணரப்படும். இவ்வாறு பாலைநிலத்திற்கு இயற் கையா யுள்ள விலங்காய்ப், பாலைநிலத்தைச் சூழவுறையும் நாக ரிக மக்களால் வாணிக வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படுத்தப் படும் ஒட்டகத்தைத் தொல்காப்பியனார் கூறுதல் கொண்டு, அவர் காலத்திற் குமரிநாட்டினிடையே கிடந்த பாலைவெளியை, அதனைச் சூழ இருந்த பண்டைத் தமிழ்மக்கள் ஒட்டகங்களி னுதவியாற் கடந்துசென்று வாணிகம் நடாத்தினமை தெளியப் படும். இஞ்ஞான்றைத் தமிழ்நாட்டில் அத்தகைய பெரும் பாலை வெளியும், அதன்கண் இயங்கும் ஒட்டகமும் இல்லாமையின், அவ் விலங்கினைக் காட்சிப் பொருட்டாக வன்றி ஊர்தியாகப் பயன்படுத்துவார் யாருமில ரென்க. எனவே, ஒட்டகம் என் னும் விலங்கும் அதன்பெயரும் பண்டைத் தமிழ்மக்கட் குரி யனவே யல்லாமல் வடவாரியர்க்கு உரியன ஆகாமையால், அவர் அவ் விலங்கின் பெயராய் வழங்கும் 'உஷ்ட்ர:' என்னுஞ்சொல், 'ஒட்டகம்' என்னுந் தமிழ்ச் சொல்லின் திரிபாதல் துணியப் படும். இவ் வொட்டகம் என்னும் விலங்கு தெற்கே நடுக்கோட் டைச் சார்ந்த வெய்ய பாலைநிலங்களி லன்றிக், குளிர்மிகுந்த வட நாடுகளில் உயிர்வாழ்வது அன்மையின், இது தென்னாட்டவர்க் கே யுரித்தாதல் திண்ணம். இங்ஙனமாகக் குமரிநாட்டிலிருந்த

பெரும் பாலைநிலத்தையும், அதனூடுசென்று வாணிகம் நடாத்திய பண்டைத் தமிழர் அம் மணல்வெளியைக் கடத்தற்குப் பயன்படுத்திய 'ஒட்டகம்' என்னும் விலங்கையும் ஆசிரியர் தொல்காப்பியனார் நன்குகுறிப்பிடுதலின், அவரும் அவரியற்றிய தொல்காப்பியமுங் குமரிநாடு கடல்வாய்ப் படுதற்குமுன் இருந்தமை தேற்றமாம். என்றிதுகாறுந் தொல்காப்பிய காலத்தைப் பற்றி யெழுந்த ஆராய்ச்சியின் முடிபாகத், 'தொல்காப்பியங்' குமரிநாடு கடல்கொள்ளப்படும் முன், அதாவது இற்றைக்கு நாலாயிரத்தைந்நூ றாண்டுகட்கு முன்னும், அதற்கும் முன்னே பாரதப்போர் நிகழ்ந்த காலத்து உடனிருந்த 'முரஞ்சியூர் முடிநாகராயர்,' 'பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி,' 'நெட்டிமையார்,' 'நெடும்பல் லியத்தனார்' முதலான தலைச்சங்கப் புலவர் சிலர்க்குமுன் அதாவது இற்றைக்கு ஐயாயிரத்து ஐந்நூறி யாண்டுகட்கு முன்னும் இயற்றப்பட்ட மிகப் பழையதொரு தனித்தமிழ்நூலாதல் பெறப்பட்டது. பெறவே, அது தலைச்சங்க காலத்து நூலாகுமே யல்லாமற், குமரிநாடு கடல்வாய்ப் புக்கபின் எழுந்த இடைச்சங்க காலத்து நூலாதல் செல்லா தென்பதுந் தானேபோதரும். போதரவே, அதனை இடைச்சங்ககாலத்து நூலென்ற **இறையனாரகப் பொருள்** உரைப்பாயிர வுரைக்கூற்று ஆசிரியர் நக்கீரனார் உரைத்த தாகாமையும், அஃது உண்மை வரலாறு அன்மையுந் தாமே பெறப்படும். இறையனாரகப்பொருள் முகத்துள்ள 'நூற்பாயிரவுரை,' 'உரைப்பாயிரவுரை' என்னும் இரண்டுள் நூற்பாயிரவுரை முற்றும் நக்கீரனாரே கூறியதாதலும், அதன்பிற் போந்த உரைப்பாயிரவுரை நக்கீரனாரால் உரைக்கப்படாமல் அவர்தம் மாணாக்கர் வழிவந்த பிறரொருவரால் உரைக்கப்பட்டதாதலும் பகுத்துக் காட்டி விளக்கியவழி, உரைப்பாயிரவுரையுட் போந்த வரலாற்றுக் குறிப்புகள் மெய்யோடு பொய்யும் இடைமிடைந்தனவாயிருத்தலைப் பகுத்துக் காட்டுவான் புகுந்து அதன்கண் மெய்யாவன இவை யெனவும் பொய்யாவன இவை யெனவும்

நிரலே இதுகாறுங் காட்டிவந்தன போக, எஞ்சி நிற்பனவுங் காட்டுகின்றாம்.

இனி, இடைச் "சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத் தென்பது; அக்காலத்துப் போலும் பாண்டியனுட்டைக் கடல் கொண்டது" என்னுங் குறிப்பு உண்மை வரலாறு தெரிப்ப தொன்றேயாம். குமரிநாடுகடல்கொண்டது சிறிதேறக்குறையக் கி-மு உ000-த்திலா மென்பதை மேலே 478-ஆம் பக்கத்தில் விளக்கிக் காட்டினமாகலின், அப் பெருங் கடல்கோளுக்குப் பின் பாண்டிமன்ன ரரசு ஓர் ஒழுங்குபெற்றுத் திரும்பவுந் தமிழ்ச்சங்கங் கூட்டப்படுதற்கு மூன்று நான்கு நூற்றாண்டுகள் சென்றிருத்தல் வேண்டும். ஏனென்றால், இரண்டாங் கடல் கோள் ஒன்று இலங்கையிற் பாண்டுவாசான் அரசுபுரிந்த கி-மு ஐந்தாம் நூற்றாண்டிலும், மூன்றாங் கடல்கோ ளொன்று கி-மு மூன்றாம் நூற்றாண்டிலும் நிகழ்ந்தமை இலங்கைத்தீவின் வர லாற்றிற் குறிக்கப்பட் டிருத்தலின் இடைச்சங்கங், கி-மு ஐந் தாம் நூற்றாண்டில் நிகழ்ந்த கடல்கோளுடன் முடிவடைந் திருத்தல் வேண்டுமாகலானும், இடைச்சங்கம் நிகழ்ந்தகாலம் ககஅ0-ஆண்டுகளாகுமென மேலே 473-ஆம் பக்கத்தில்விளக் கிக் காட்டினமாகலின் கிறித்து பிறப்பதற்கு முற்சென்ற அவ் ஐந்நூறாண்டுகளோடு இவ் விடைச்சங்க காலத்தையுங் கூட்டக் கி-மு கசூஅ0-ஆம் ஆண்டை யடுத்து இடைச் சங்கந் தோன்றி யிருத்தல் வேண்டுமாகலானும் என்பது. அற்றாயினும், மூன் றாங் கடல்கோள் நிகழ்ந்த கி-மு மூன்றாம் நூற்றாண்டையே இடைச் சங்கத்தின் இறுதிக் காலமாய்க் கொள்ளலாகாதோ வெனிற், கூறுதும்; இரண்டாங் கடல்கோள் நிலப்பரப்பை மிகு தியும் விழுங்கிச் சென்ற தொன்றாயின், அந் நிலப்பரப்பின்கண் நடைபெற்ற சங்கமும் அதனோடு உடனழிந் திருக்கவேண்டுமா கலின் அது பின்னுங் கி-மு. மூன்றாம் நூற்றாண்டு வரையி லிருந்ததெனக் கோடலாகாது. மற்று அக் கடல்கோள் அத் துணைப் பெரியதன்றாக, மூன்றாங்கடல்கோளே பெரியதொன்றா

மாயின் இடைச்சங்கம் கி. மு மூன்றும் நூற்றாண்டிலேதான் முடிவடைந் திருத்தல் வேண்டும்; அஃதெங்ஙன மாயினுங், கி-மு ஐந்தாம் நூற்றாண்டுமுதல் மூன்றும் நூற்றாண்டுவரையிற் சென்ற இருநூறாண்டுகளில் இரண்டு கடல்கோள் நிகழ்ந்ததனை உற்றுக் காணுமிடத்து, இந்நிலவுலக அமைப்பிற் பேரிடர் பயப் பனவாகிய பெரு மாறுதல்களும் பெருங் குழப்பங்களும் அப் போது அதன் தென்பகுதியில் நிகழ்ந்தமை தெளியப்படும். அவ்வாறு அப்பெருந் துன்பநிகழ்ச்சிகள் நடைபெறத் துவங்கு தற்கு ஓர் அறிகுறி யாகவே கி-மு ஐந்தாம் நூற்றாண்டில் ஒரு சிறு கடல்கோள் நிகழலாயிற்றெனக் கொள்ளினும், அச் சிறு கடல்கோளை யடுத்துத்தோன்றிய பெருந் துன்ப நிகழ்ச்சியி னிடையே இடைச்சங்கம் இருந்ததாயினும் அஃது அப்போது செவ்வனே நடைபெற்ற தாகாது. ஆகவே, இடைச்சங்கங் கி-மு ஐந்தாம் நூற்றாண்டில் ஒடுங்கிற்றெனக் கொள்ளினும், அல்ல தது கி-மு மூன்றும் நூற்றாண்டில் ஒடுங்கிற்றெனக் கொள் ளினும் ஈண்டைக்காவதோர் இழுக்கில்லை. கி-மு மூன்றும் நூற்றாண்டில் அது முடிவடைந் தெனக் கொள்ளின், கி-மு ௨௦௦௦-த்தில் நிகழ்ந்த முதற்கடல்கோளுக்குப்பின் ஐந்நூறாண் டுகள் கழித்து இடைச்சங்கந் துவங்கலாயிற்றென்று கொள்ளல் வேண்டும். இனி, அவ் விடைச்சங்க மிருந்து தமிழாராய்ந்த இடங் கபாடபுரம் என்ற உரைத்தொடரிற் 'கபாடபுரம்' என் னுஞ்சொல் வட சொற்றொடரா யிருத்தலானும், இடைச்சங்கம் நடைபெற்ற அப் பழையகாலத்தே அத்தகைய வட சொற் றொடர் வழங்கினமைக்குச் சான்று இல்லாமையானும், அக் 'கபாடபுரம்' என்னும் பெயர் வடமொழியில் வான்மீகி இயற் றிய இராமாயணத்தின்கட் காணப்படுதலின் அவ் இராமாயண கதை இத் தமிழ்நாட்டின்கட் டெரியத் துவங்கிய கி-பி முதல் நூற்றாண்டிற்குப் பின்னன்றி அதற்குமுன் அப் பெயர் இங்கு வழங்குதலாகாமையானும் அச்சொற்றொடர் நக்கீரனார் எழுதிய தாகாது. அற்றேற் 'கபாடபுரம்' இருந்தது பொய்யோ வெனிற்,

பொய்யன்று; என்னை? அவ் வடமொழிப் பெயராற் கூறப்பட்ட அப் பழந்தமிழ் நகரம் பண்டைநாளில் 'அலைவாய்' என்னுந் தூய தமிழ்ப்பெயரால் வழங்கப்பட்டதாகும். 'அலைவாய்' என்னுஞ் சொல் 'அலையையுடைய கடலைநோக்கும் வாயில்' எனப் பொருடந்து, அவ்வாயிலையுடைய பாண்டியனது தலைநகருக்குப் பெயராயிற்று. இத் தூய தமிழ்ச்சொல்லின் மொழிபெயர்ப்பாகவே 'கபாடபுரம்' என்னும் வடமொழிப்பெயர் வான்மீகியாராற் குறிக்கப்பட்டது. 'கபாடம்' என்பது 'வாயிற்கதவு' எனவும், 'புரம்' என்பது நகரமெனவும் பொருடருவதாகும். "பொன் நிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்துமணிகளால் ஒப்பனை செய்யப்பட்டதாயும், பாண்டியர்க்கு இசைந்ததாயுமுள்ள கவாடத்தை வானரவீரர்காள் பார்க்கக் கடவீர்கள்" என்று* சுக்கிரீவன் கூற்றாகவைத்து வான்மீகியார் கூறுதல் காண்க. இவ் 'அலைவாய்' நகரிற் பழந்தமிழ்த் தெய்வமாகிய முருகன்கோயி லிருந்தமை "அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே" என்று நக்கீரனார் 'திருமுருகாற்றுப்படை'யிற் கூறுமாற்றால் அறியப்படும். பழைய அலைவாய் நகர் கடல்கொண்டழிந்தபின், அந் நகரைக் கவர்ந்த கடலின்கரைக்கண் உள்ள 'திருச்செந்தூரில்' அம் முருகன்கோயில் அமைக்கப்படலாயிற்றென்க. எனவே, கபாடபுரத்தின்கண் இடைச்சங்கம் இருந்ததென்னும் உரை நக்கீரருரை யன்றாயினும், அதிற் போந்த வரலாறு மெய்வரலாறேயாமென ஓர்க.

இனிக், கடைச்சங்கம் நடைபெற்ற ஞான்று பாண்டிநாட்டிற் பன்னீரியாண்டு மழைவளங் குன்றிப் பெரியதொரு வற்கடந்தோன்ற மன்னுயிர்கள் மடிந்தனவாகலின், அச் சங்கம் அவ்வற்கடம் நீங்கும்வரையிற் கலைந்து அது நீங்கியபின் திரும்பக் கூடிற்றென அவ்வுரைப்பாயிரங் கூறும் வரலாறு உண்மையாகவே காணப்படுகின்றது. பாண்டிநாட்டைவிட்டு வேறு சேய நாடுகளுக்குச் செல்லாத நம் தமிழாசிரியன்மார் பன்னீரியாண்டு

* செந்தமிழ், ஏழாந்தொகுதி, மூன்றாம்பகுதி, கஉஅ-ஆம்பக்கம்.

உயிர்களை வருத்திய அவ் வற்கடத்தைப் பாண்டிநாட்டின்கண் நிகழ்ந்ததொன்றாகவைத் துரைப்பினும், அக்கொடிய வற்கடஞ் செய்மைக்கண்ணுள்ள வடநாடுகளிலும் அப் பன்னீரியாண்டு நிகழ்ந்ததென்பது வடமொழியிலுள்ள சமண்நூலாராய்ச்சியால் இனிது புலனாகின்றது. கிறித்து பிறப்பதற்குமுன் மூன்றாம் நூற்றாண்டிலிருந்த 'பத்ரபாகு' என்னுஞ் சமண்முனிவர் காலத்தில் அக்கொடிய வற்கடம் பன்னீரியாண்டு நிகழ்ந்ததென வடநாட்டின்கண் இயற்றப்பட்ட சமண்நூலொன்று கூறுதலால்*, அஃது அஞ்ஞான்று வடநாடு தென்னாடு முழுவதூஉம் பரவியிருந்தமை புலனாம். கி-பி இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகிய மணிமேகலையிலும்,

"பன்னீ ராண்டு பாண்டிநன் னாடு
மன்னுயிர் மடிய மழைவளம் இழந்தது" என (கச, நருடு-நசு) இவ் வற்கடகாலங் குறிப்பிடப்பட் டிருத்தலின், இது மணிமேகலை காலத்திற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னமே தென்னாட்டின்கண்ணும் நிகழ்ந்தமை ஐயமின்றித் துணியப்படும். இனிச், சமண்முனிவரான 'பத்ரபாகு' என்பவர் கி-மு மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தவரென்பது வரலாற்று நூலாசிரியரால் துணியப்பட் டிருத்தலின், அம் முனிவர்காலத்தில் நிகழ்ந்ததாகிய அக்கொடிய வற்கடமுங் கி-மு மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்தமை தெளியப்படும். அவ் வற்கடகாலத்திற்கு முன்னிருந்த கடைச்சங்கம், அவ் வறட்சிக் காலத்திற் கலைந்ததென்பதனாற், கி-மு ஐந்தாம் நூற்றாண்டின் ஈற்றில் நிகழ்ந்த இரண்டாங் கடல்கோளுடன் ஒடுங்கிய இடைச்சங்கத்திற்குப்பின் ஓரைம்பது ஆண்டுகளாவது கழித்துத்தான் கடைச்சங்கங் கூட்டப்பட்டதாகல் வேண்டும். மூன்றாங் கடல்கோளும் பன்னீரியாண்டு வற்கடமும் ஒருங்குதோன்றிய பேரிடரான காலத்திற் கலைந்த கடைச்சங்கத்திற்குப் பின், அவ்

---

* Introduction to Jaina Sutras by Dr. Hermann Jacobi, vol. I, p. xliii.

விடர் நீங்கிய காலத்தில் மீண்டுங் கூட்டப்பட்டதாகிய சங்கத்
தை நான்காஞ் சங்கமென்றுரையாமற், கடைச்சங்கமே யென்
றுரைத்த லென்னையெனின்; கடைச்சங்கம் அவ்வாறு கலைந்த
தும் மீண்டு கூட்டப்பட்டதும் ஓரரசனது ஆட்சிக் காலத்தி
லேயே நிகழ்ந்தனவென்று அவ் வுரைப்பாயிரமே தெளிவாகக்
கூறுதலால், ஓரரசனாலேயே கலைத்துக் கூட்டப்பட்ட அது வெவ்
வேறு சங்கங்களாகாமல் ஒரே சங்கமாகவைத்து வழங்கப்படுவ
தாயிற் றென்க. இவ்வாற்றால், மூன்றாம்முறை தோன்றிய
கடல்கோள் இலங்கைத்தீவைச்சேர்ந்த நூறாயிரங் கடற்றுறைப்
பட்டினங்களையுந், தொள்ளாயிரத்தெழுபது செம்படவர் குப்
பங்களையும், நானூற்றெழுபது முத்துச்சலாபத் தார்களையுங்
கொள்ளைகொண்டு போயினும்*, அஃது இத் தமிழ்நாட்டின்
தென்பகுதியை அத்துணை மிகுதியாய் வாய்ப்பெய்துகொள்ள
வில்லை யென்பதூஉம், அதனால் அப்போதிருந்த பாண்டியவேந்
தன் தானுந் தன் நாடும் அழிந்துபடாமற் கொடிய அவ் வற்
கடத்தினால் மட்டுந் துன்புற்று அச்சங்கத்தை அது நீங்குங்கா
றுங் கலைத்து அது நீங்கியபின் மீண்டுங் கூட்டினானென்ப
தூஉம், அதுபற்றியே அம் மூன்றாஞ்சங்கங் கடைச்சங்கமென
ஒரு பெயரே பெறலாயிற்றென்பதூஉம் அறியப்படும். மற்றுத்,
தலைச்சங்க இடைச்சங்கங்களோ முதற் கடல்கோள் இரண்
டாங் கடல்கோள்களால் வாய்ப்பெய்து கொள்ளப்பட்ட பெரிய
நாடுநகரங்கள் மன்னர்கள் மக்களோடு ஒருங்கழிந்துபோனமை
யின், அவற்றை யொருதொடர்புபடுத்துவார் இல்லையாய் ஒழிய,
அவை ஒரு சங்கமென ஒன்றாய் வைத்து வழங்கப்படா
வாயினவென்பது. இனி, இடைச்சங்கம் அழிந்துபட்ட கி-மு
ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிக்குப்பின் அதன் இடையிற்றுவங்
கிய கடைச்சங்கங் கி-மு மூன்றாம் நூற்றாண்டின்முதலில் ஒரு
காற் கலைந்து மீண்டுங் கூடிப், பின் கி-பி இரண்டாம் நூற்றாண்
டின் ஈறுவரையில் நடைபெற்று முடிவெய்தியதாகலின் அதன்

* See P. Arunachalam's 'Sketches of Ceylon History,' pp. 8, 9.

முழுக்காலவெல்லை அறுநூற்றைம்ப தாண்டுகளே யாகின்றன. மேலே 473-ஆம் பக்கத்திற் கடைச்சங்கம் நடைபெற்ற முழுக் காலவெல்லை ௲அ௦-ஆண்டுகளென்று கணக்குச் செய்யப்பட்ட தாயினும், இப்போது ஆராய்ந்து பெறப்பட்ட முடிபினால், அதன் முழுக்காலவெல்லை 650-ஆண்டுகளே யாதல் தெளியற் பாற்று; அற்றேல், இது முன்னதனோடு முரணுதோவெனின் முரணாது; என்னை? ஆண்டு, அரசர் ஒருவர்க்கு ஒருகுத்து மதிப்பாக இருபதாண்டு வைத்து நாற்பத்தொன்பதின்மர்க்கும் ௲அ௦-ஆண்டுகள் கணக்குச் செய்யப்பட்டன; ஆனால், அதனை நடாத்திய அவ்வரசர் நாற்பத்தொன்பதின்மரிற் பலர் குறைந்த வாழ்நாளுடையராய்ச் செல்லுதலும் இயல்பேயாகலின், அக் கணக்கு இப்போது 650-ஆண்டுகளில் வந்து ஓர் உறுதிப்பட்டு முடியலாயிற்றென்க.

இன்னும், 'இறையனாரகப்பொருள்' வந்த வரலாறு தெரிக்கும் உரைப்பகுதியும் ஆசிரியர் நக்கீரனார் உரைத்ததாகாது. என்னை? அதன்கட் காணப்படுங் குறிப்புகள் பல பொருந்தா தனவாயிருத்தலின். அப்பொருந்தாக் குறிப்புகள் யாவையோ வெனிற் காட்டுதும்: 'பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றபின், மழை மிகப்பெய்து நாடு செழித்தமையிற், கலைத்த கடைச்சங் கத்தைத் திரும்பக் கூட்டலுறும் பாண்டியன் "நூல்வல்லாரைக் கொணர்க" என ஒற்றரை எல்லாப் பக்கமும் போக்க, "எழுத் ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார்." அதனால் அரசன் கவலை பெரி துடையனாக, அவற்கு இரங்கி ஆலவாயமர்ந்த அவிர்சடைக் கடவுள் அறுபது சூத்திரங்களாலாய இச் சிறுநூலை ஆக்கி, அதனை மூன்று செப்பேட்டிலெழுதித் தான் அமர்ந்த இருக் கையின்கீழ் இட, அதனைக் கோயிற் பூசகன் கண்டெடுத்துக் கொணர்ந்து அரசன்பாற் காட்ட, அதனை அரசன் தன்பால் மீண்ட அந் நூல்வல்லார் கைக்கொடுத்து, அதற்கு உரைகாண்க

மீவன, அவரும் அதனை ஏற்றுப்போய் உரைகண்டுழி, ஒருவ ருரைத்தவுரை மற்றொருவ ருரைத்தவுரையொடு மறுதலைப் பட்டு, உண்மைப்பொருள் இதுதான் என்பது துணியப்படாதா யொழியப், பின்னர் இறைவனருளாற் பெற்ற உருத்திரசன்ம ரால் நக்கீரனாருரைத்தவுரையே மெய்யுரையெனத் துணிந்தார்.' என்பது இந் நூல்வரலாற்றின் சுருக்கமாகும். இவ்வரலாறு கொண்டு, பன்னீரியாண்டு வற்கடம் நேர்தற்குமுன் நடைபெற்ற கடைச்சங்கத்திருந்த புலவரனைவரும் பொருளதிகாரம் வல் லுநராயிருந்தன ரென்பதூஉம், அவ் வற்கடத்தின்பிற் றிரும் பக் கூட்டப்பட்ட கடைச்சங்கத்திற் போந்த புலவரே பொரு ளதிகாரவுணர்ச்சி நன்குவாயாதவராயினாரென்பதூஉம்அறியப் படும். பன்னிரண்டு ஆண்டுகட்குமுன் கலைந்து பின்னர் அது திரும்பக் கூட்டப்படுதற்குள் முன்னிருந்த புலவரனைவரும் மடிந்து போயினாலன்றிப் பொருளதிகார வுணர்ச்சி இல்லையா யொழிதல் ஏலாதன்றே! திரும்பக் கூட்டப்பட்ட அக் கடைச் சங்கத்திற் பொருளதிகாரம் வல்லார் எவரும் இருந்திலராயின், அகப்பொருளிலக்கணமாகிய 'இறையனாரகப்பொருளைப்' பாண் டிய மன்னன் அவர் கைக்கொடுத்து அதற்குப் பொருள்காணச் சொல்லுதலும், அவருள் ஒருவராகிய நக்கீரனார் அதற்கு மெய் யுரை கண்டாரென்றலும் யாங்ஙனம் பொருந்தும்? முன்னரே பொருளதிகார வுணர்ச்சி நன்கு வாயாதவராயின் நக்கீரனார் அதற்கு அத்துணை விழுமியதொரு விரிவுரை யுரைத்து அகப் பொருளிலக்கணங்க ளெல்லாம் ஒருங்கெடுத்துத் தெளித்தல் யாங்ஙனங் கைகூடும்? பொருளதிகார வுணர்ச்சி யிலராயின், தொல்காப்பியப் பொருளதிகாரத்திலிருந்து பல சூத்திரங்களைத் தமதுரையில் நக்கீரனார் எடுத்துக் காட்டி விளக்குதல் என்னை? என்று இவ்வாறெல்லாந் தடை நிகழ்த்துவார்க்கு, அவ் வரலாறு உண்மையன்றுதல் தெற்றென விளங்காநிற்கும்.

மேலும், இறைவனே அந்நூலை இயற்றித் தந்தா னென் பதும் நம்புதற் குரித்தன்றாம். மக்களறிவு விளங்குதற்குக்

கருவிகளான பல அமைதிகளை வகுத்து, அவ்வாற்றான் அவ ரறிவினுண் ணின்று அதனை யியக்கி, அம் முகத்தால் அம்மக்க டாமே பல அரும்பெரு நூல்களையும் புதுமைகளையும் ஆக்கு மாறு இறைவன் புரிந்துவருதலைக் காண்கின்றாமே யன்றி, அவன்றானே நூல்களையும் புதுமைகளையும் ஆக்குதல் யாண்டுங் கண்டாமில்லை. மேனாட்டு வெண்மக்கள் நிலத்திலும் நீரிலும் வானிலுஞ் செல்லுமாறு அமைத்திருக்கும்பொறிகளின்புதுமை களைக் காண்பவர்க்குக், கடவுளன்றி மக்களும் இங்ஙனம் இவற் றைச் செய்தல் இயலுமோ என்று இறும்பூது எழாநிற்கும். இத்தகைய புதுமைகளெல்லாம் மக்களறிவினாற் செய்யப்படுவ னவாயிருக்க, இவற்றோடொத்த அருமைப்பாடு இலவாய், மக்க ளியற்கை உலக வியற்கைகளை யுள்ளவாறு ஆராய்ந்துவிளக்கும் ஆராய்ச்சியொன்றேயுடைய 'இறையனாரகப்பொருள்' போன்ற நூல்கள் மட்டும் இறைவனால் ஆக்கப்பட்டன வென்றல் ஒரு சிறிதும் நம்பற்பால தன்றாம். ஆகவே, பொய்யும் புரட்டும் நிறைந்த கதைநூல்களையுங் கூட இறைவன் வாய்மொழியெனக் கூசாதுரைக்கும் பிற்காலத்துப் பொய்யர் மலிந்த புராண காலத் திலே, இக் கதையுங் கட்டிவிடப்பட்டதொன்றாகல் வேண்டுமே யல்லாது, பொய்யா நாவினரான நக்கீரர் முதலான சங்கப்புலவர் காலத்தில் இக்கதை வழங்கியதாகாது. தொல்காப்பியப் பொரு ளதிகாரத்திலுள்ள 'களவியல்,' 'கற்பியல்' என்பன மிக விரிந்து கிடத்தலின், அவற்றைச் சுருக்கி அறபதுசூத்திரத்தில் ஒருசிறு நூலை எவரோ ஒரு சிறந்த புலவர் இயற்றி, அதனைப் பனையேட் டிற் பொறித்துவைப்பிற் செல்லரித்துவிடுமென அஞ்சிச், செப் பேட்டிற் பொறித்துவைத்தா ராகல்வேண்டும். அஃது ஆல வாய்க் கோயிலில் இறைவன் திருவுருவத்தின்கீழ் வைக்கப்பட் டிருந்ததனை உற்றுநோக்குமிடத்துப், பண்டொருகாலத்திருந்த அக் கோயிற் பூசகரொருவராதல், அல்லதவர்க்கு நேயரான பிற ரொருவராதல் அந் நூலை யியற்றினாராகல் வேண்டும். பின்னர் அஃது இறைவன் திருவுருவத் தவிசின்கீழிருந்துஎடுக்கப்பட்ட

ஏதுவினுல், அஃது இறைவனுலேயே இயற்றப்பட்டதாகுமெனக் கருதிவிடலானுர். பாண்டியனது கவற்சிகண்டு இறைவனே யியற்றினனுயின், உடனே வெளிப்படுக்கப்படுவ தாகிய அந் நூலைச் செல்லுக் கஞ்சிச் செப்பேட்டிற் பொறிக்க வேண்டுவது இன்றும். செப்பேட்டிற் பொறிக்கப்பட்டதென்பது கொண் டே அது பண்டிருந்த புலவரொருவரால் ஆக்கப்பட்ட தென் பது போதரும்.

இங்ஙனங் கண்டெடுக்கப்பட்ட இறையனுரகப்பொருள் என்னும் நூல் திட்பநுட்பஞ் செறிந்து, பரந்த தொல்காப்பியப் பொருளிலக்கணச் சுருக்கமாய், அவ் விலக்கணப் பொருளைத் தெளித்துரைக்கும் பெற்றிகண்டே, பாண்டிமன்னன் அதனை வழங்குவித்தற்பொருட்டு அதற்கொரு நல்லுரை காணுமாறு புலவரை ஏவினுன். ஒரு நூலுக்குப் பலர் உரை வகுக்குங்கால், அப்பலருரையும் ஒன்றேடொன்றுவ்வாம லிருத்தல் எங்கும் நிகழும் இயற்கை நிகழ்ச்சியேயாம். இனி, அவ்வுரைகள் பலவற் றுள்ளுஞ் சிறந்ததொன்றனைத்தெரிந்தெடுத்தல் பேரறிவுவாய்ந்த சான்றேர்க்கு எளிதிற் கைகூடுவதேயாகவும், இதன் பொருட் டுத் தெய்வத்தன்மை மிக்க ஓர் ஊமைப்பிள்ளையி னுதவியைத் தேடினுரென்றல், பின்வந்த புராண காலத்தவர் கட்டிவிட்ட கதையேயாகுமல்லால், உண்மைப் பேரறிவுசான்ற சங்கப்புலவர் குழாத்திற்குச் சிறிதும் அடாது. அப் புலவர் பெருமக்கள் தம்முள் இகலாமைப் பொருட்டுத், தம்மாற் பெரிது பாராட் டப்பட்ட 'உருத்திரசன்மர்' என்னும் நடுநிலைதிறம்பாப் புலவர் பெருமானை அவற்றுள் விழுமியவுரை இதுவெனத் தேற்றும் நடுவராக எல்லாரும் ஒருப்பட்டு வைத்து, அவர் தம்மால் நக் கீரனுருரையே அந்நூலுக்கு மெய்யுரையெனக் கண்டாரென்க. இவ் வுண்மை நிகழ்ச்சியே பிற்போந்த புராண காலத்தவரால் திரித்துரைக்கப்பட்ட தாகலின், இவ் வுரைப்பாயிரப் பகுதி நக்கீரனுருரைத்த தன்றென்பது ஒருதலை.

இனி, இவ் 'இறையனாரகப்பொரு'ளுக்கு நக்கீரனார் தாம் உரைத்த உரையைத் தம் மகனார் கீரவிகொற்றனார்க்கு விளக்கிச் சொல்லி அதனை அவர்கைக் கொடுத்தார்; கீரவிகொற்றனார் அங்ஙனமே அதனைத் தம் மாணாக்கர் தேனூர் கிழார்க்கு விளக்கிச் சொல்லி அதனை அவர்கைக் கொடுத்தார்; அவர் அதனைப் படியங் கொற்றனார்க்குக் கொடுத்தார்; படியங்கொற்றனார் செல்வத் தாசிரியர் பெருஞ்சுவனார்க்கும், அவர் மணலூராசிரியர் புளியங் காய்ப் பெருஞ்சேந்தனார்க்கும், அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங் குமரனார்க்கும், அவர் திருக்குன்றத் தாசிரியர்க்கும், அவர் மாதவளனார் இளநாகனார்க்கும், அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்குமாக அதனை விளக்கி யுரைத்து அவ்வுரையினை இங்ஙனம் வழிவழியே வழங்குவித்தார் என்னும் உரைப் பகுதியும் நக்கீரனார் உரைத்ததாகாது; என்னை? நக்கீரனார் தமக்குப் பின்வந்த பத்துத் தலைமுறைப் புலவரை முன்னெடுத் துரைத்த லாகாமையால். ஒரு தலைமுறைக்கு முப்பதாண்டு வைத்துக் கணக்குச் செய்யின், இப் பதின்மர்க்கும் முந்நூ றாண்டுகளாகும். இறுதிக்கண் நின்ற முசிறியாசிரியர் நீலகண்டனார் ஆசிரியர் நக்கீரனார்க்கு முந்நூறாண்டு பிற்பட்டு வந்தோ ராகையால், அவரே இப் பத்துத் தலைமுறைகூறும் உரைப் பகுதியினைச் சேர்த்தாராகல் வேண்டுமென்பது.

மேலும், பன்னீரியாண்டு வற்கடம் நிகழ்ந்ததும், அது நிகழ்ந்த ஞான்று கடைச்சங்கங் கலைக்கப்பட்டு அது நீங்கியபின் திரும்பக் கூட்டப்பட்டதும் உண்மையேயாயினும், அவ்வாறது பெயர்த்துங் கூட்டப்பட்டுழி 'இறையனாரகப்பொருள்' கண்டெடுக்கப்பட்ட தென்றாலும், அப்போததற்கு நக்கீரனார் முதலான ஆசிரியர் உரைகண்டா ரென்றாலும் மெய்யாகா. ஏனெனில், அவ் வற்கடமுங் கடைச்சங்கங் கலைத்துக் கூட்டப்பட்டதும் மேலே காட்டியவாறு கிறித்துபிறப்பதற்கு இருநூற்றைம்பதாண்டுகளின் முன் நிகழ்ந்தனவாகும்; மற்று, ஆசிரியர் நக்கீரனாரோ கிறித்து பிறந்த முதல்நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்

தோராதலை மேலே 412-ஆம் பக்கத்தில் விளக்கிக்காட்டினேம். தமது உரை அரங்கேறியது உக்கிரப்பெருவழுதியின் அவைக் களத்திலேயாம் என்று நக்கீரனாரே கூறுதலானும், அவ்வுக்கிரப் பெருவழுதி யென்பான் 'கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியே' யாவனென மேலே 423, 424-ஆம் பக்கங்களிற் காட்டப்பட் டிருத்தலானும், இவ்விருவர் காலமுங் கி-பி முதல் நூற்றாண்டிற்குமேற் செல்லாமையானுங் கி-பி முதல் நூற்றாண் டில் நிகழ்ந்த இந் நிகழ்ச்சிகளைக், கி-மு மூன்றாம் நூற்றாண்டில் நிகழ்ந்த வற்கடகாலத்தை யடுக்கவைத்துரைக்கும் அவ்வுரைப் பகுதி பெரியதொருதலைதடுமாற்றத்தை விளைக்கக் காண்டலின், அது பிற்காலத்தவர் எழுதி நுழைத்ததே யல்லாமல் நக்கீரனார் உரைத்த தன்றென ஓர்க. இவ்வாறாக, ஆக்கியோன் பெயர் முதலிய நூற்பாயிர வுறுப்புகள் பதினொன்றனையும் விளக்கிச் சொல்லும் நக்கீரனாரது பாயிரவுரைக் கிடையே மடுக்கப்பட்ட உரைப்பாயிரவுரை, நக்கீரனார்தம் மாணாக்கர்மரபில் வந்த பின் னையோர் ஒருவராற் சேர்க்கப்பட்டதாதல் தெளிந்துகொள்க. "அது பாயிரத்துள்ளே உரைத்தாம்" என நக்கீரனார் தமதுரை யிற் குறிப்பிட்டவை, தாம் உரைத்தநூற்பாயிரவுரையிலுள்ளன வற்றையே சுட்டக் காண்டுமென்றிப், பிறர் அதனிடையே செரு கிய உரைப்பாயிரத்தி லுள்ளவற்றை யல்லாமையால், நக்கீரனார் தம் அவ்வுரைக்குறிப்புக் கொண்டு பாயிரவுரை முற்றும் நக்கீர னாரே யெழுதியதாமென்றார் கூற்று, அவ்வேறுபாடுகளைப் பகுத் தறிய மாட்டார்தங் கூற்றாயினவாறு கண்டுகொள்க; இதனை முன்னரும் உரைத்தாம்.

இனி, முதற்சூத்திரவுரையினீற்றில் 'என்மனார்' என்பதற் குச் சொன்முடிபு கூறிய உரைப்பகுதியும் நக்கீரனா ருரைத்த தன்றென்பது மேலே 463-ஆம்பக்கத்தில் விளக்கிக்காட்டினும்; அங்கே அதனைக் காண்க.

இனி, இறையனாரகப் பொருட் சூத்திரங்களுக்கு நக்கீர னார் உரைத்த உரைக்கிடையே அவர் தம்மால் மேற்கோள்க

ளாகக் காட்டப்பட்ட செய்யுட்கள், 'அகநானூறு,' 'ஐங்குறு நூறு,' 'குறுந்தொகை,' 'நற்றிணை,' 'கலித்தொகை,' 'கூத்தநூல்,' 'திருக்குறள்,' 'காக்கைபாடினியம்,' 'தொல்காப்பியம்' முதலான தமிழ்ச்சங்க நூல்களினின்று எடுக்கப்பட்டனவாகும். அகநானூற்றிலிருந்து எட்டுச் செய்யுட்களும், ஐங்குறு நூற்றிலிருந்து மூன்று செய்யுட்களுங், குறுந்தொகையிலிருந்து பதினெட்டுச்செய்யுட்களும், நற்றிணையிலிருந்துபன்னிரண்டு செய்யுட்களுங், கலித்தொகையிலிருந்து இரண்டு செய்யுட்களுங், கூத்தநூலிலிருந்து ஒருசெய்யுளுங், திருக்குறளிலிருந்து ஐந்து செய்யுட்களுங், காக்கைபாடினியத்திலிருந்து ஒரு சூத்திரமுந், தொல்காப்பியத்திலிருந்து முப்பத் திரண்டு சூத்திரங்களும், பெயர்தெரியாத ஏனைப் பல பண்டை நூல்களிலிருந்து நாற்பத்தாறு செய்யுட்களும் ஆக நூற்றிருபத்தெட்டுச் செய்யுட்கள் அவ்வுரைப் பொருளை நன்கு விளக்குதற்கு மேற்கோள்களாக அவர் தம்மால் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. இங்ஙனங் காட்டப்பட்ட இப் பழந்தமிழ்ப் பாக்களே உரைப்பொருளை மாணுக்கன் இனிது தெளிந்து கொள்ளுதற்குப் போதுமாவனவாம்; இவற்றின் வேறாக மேலும் பல செய்யுட்களை யெடுத்துக் காட்டுதல், வேண்டாகூறல் மிகைபடக்கூறல் கூறியதுகூறல் என்னுங் குற்றங்கட் கிடனாதல் அவ்வுரை மேற்கோள்களை நுணுகி யாராய்வார்க்குத் தெற்றென விளங்கும். இதற்குச் சான்றாக ஈண்டு ஒன்றெடுத்துக் காட்டுதும்: எழில்நலங் கிளர்ந்த ஒரு குமரிபாற் காதல் கைம்மிக்கு மெலிந்து வந்த தன் தலைமகனை நோக்கி அவன்பாங்கன் அவற்கு உற்றதுவினவ, "நெருநல் இவ் வகையார் ஒருவரைக் கண்டேற்கு என்னுள்ளம் பள்ளத்து வழி வெள்ளம்போல ஓடி இவ்வகைத் தாயிற்றென்று சொல்லும்; அதற்குச் செய்யுள்" (௩-ஆஞ் சூத்திரஉரை),

"சிறுவெள் ளரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு

இளையள் முளைவாள் எயிற்றள்
வளையுடைக் கையள் எம் அணங்கியோளே" (குறுந் தொகை ௧௧௬); இதன்கட்போந்த உரைக்கு எடுத்துக்காட்டிய இச் செய்யுளும் மற்றொரு குறுந்தொகைச் செய்யுளும் உரையாசிரியன் கூறிய பொருளை விளக்குதற்குச் சாலுந் தன்மையவாயிருக்கின்றன. இவ்வா றிருப்பவும், மேற்காட்டிய குறுந் தொகைச் செய்யுட் பொருளையே கொண்ட "அளையா ரரவின் குருளை அணங்க," "அலையார் கழன் மன்னர்," "பொரு நெடுந் தானைப் புல்லார் தம்மை" என மேலும் மூன்று செய்யுட்கள் கூறியது கூறலாய் எடுத்துக் காட்டப்பட் டிருக்கின்றன. தாம் எடுத்துக்காட்டிய குறுந்தொகைப் பாக்களினாலேயே இனிது விளங்கும் அப் பொருளுக்கு நக்கீரனார் மேலும் பல செய்யுட்களை யெடுத்துக் காட்டிக் கூறியதுகூறல் மிகைபடக்கூற லென்னுங் குற்றங்களுட் படுவாரல்லர். ஆசிரியர் நக்கீரனார் இத் தகைய குற்றங்களுட்படும் நீரரல்லர் என்பது, அவர்மிக நுணுகியாராய்ந் தெழுதும் இவ் வுரையில் ஒரு சொல்லாயினும் வேண்டா கூறலாய் நில்லாமல் எல்லாம் ஒன்றேடொன்று தொடர்புற்று ஒன்றற்கொன்று இன்றியமையாதனவாய் நிற்றலை உற்று நோக்குவார்க் கெல்லாம் நன்கு விளங்கும். இங்ஙனமே தாங் கூறும் உரைப் பொருள்கட்கு அவர் மேற்கோள்களாக எடுத்துக் காட்டிய பழந்தமிழ்ப் பாட்டின் பொருளையே நுதலும் பலப்பல கட்டளைக் கலித்துறைப் பாக்கள் ஆங்காங்கு வேண்டா கூறலாய்ச் செருகப்பட்டிருத்தலை ஆராய்ந்து காணவல்ல அறிவு மதுகை யுடையார், அக் கலித்துறைச் செய்யுட்களும் அங்ஙனமே 'சிலப்பதிகாரங்' கானல்வரியினின் றெடுத்துக் காட்டப்பட் டிருக்கும் எழு செய்யுட்களும் நக்கீரனாராற் காட்டப்பட்டன ஆகாமையினைத் தெற்றென அறிந்துகொள்வர். மேலும், இக் கட்டளைக் கலித்துறைப்பா நக்கீரனார் இருந்த கி-பி முதல் நூற்றாண்டில் வழங்கியதூஉம் அன்று; அது முதன்முதல் வழங்கத் துவங்கிய தெல்லாங் கி-பி இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்

குப் பின்னரேயாம்; கி-பி மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பழந்தமிழ் நூல்களில் ஓரிடத்தாயினும் இக் கட்டளைக் கலித் துறைப் பாவினைக் காண்டல் இயலாது. ஆகவே, வேண்டா கூறலாய் இவ் வுரையின்கட் போந்த கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் அத்துணையும், நக்கீரனார்க்குப் பல நூற்றாண்டுகள் பிற்பட்டுவந்த ஒருபுலவராற் செய்து சேர்க்கப்பட்டனவாகுமே யல்லாது, நக்கீரனாரால் எடுத்துக்காட்டப்பட்டன ஆகாவென்று தேர்ந்து கொள்க.

அற்றேல் அஃதாக, மாணிக்கவாசகப் பெருமான் கி-பி மூன்றாம் நூற்றாண்டில் இருந்தனராயின், அவர் அருளிச்செய்த 'திருச்சிற்றம்பலக்கோவையா' ரில் அகப்பொருட் டுறைகளை விளக்குங் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் மலிந்து கிடக்கவும், அவைதம்மை விடுத்து அவ் வகப்பொருட் டுறைகளையே நுதலும் வேறு முந்நூற் றிருபத்தொன்பது கட்டளைக் கலித் துறைச் செய்யுட்களைப் புதியவாய்ப் படைத்து, அவற்றை அப் பின்வந்த புலவர் அவ் விறையனாரகப்பொருளுரையி னிடையிடையே செருகிவிட்ட தென்னையெனிற், கூறுதும்: இக் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் முந்நூற்றிருபத் தொன்பதிலும் புகழ்ந்துபாடப் பெறுவோன் ஆண்மைமிக்க ஒரு பாண்டிய வேந்தனே யாவன்; அவ் வேந்தன் பெயர்கள்: உசிதன், பராங்குசன், பஞ்சவன், பூழியன்மாறன், நெடுமாறன், அரிகேசரி, வரோதயன், விசாரிதன், அதிரியன், நேரியன், வானவன்மாறன், இரணாந்தகன், சத்துருதுரந்தரன், விசயசரிதன், கலிமதனன் முதலிய பலவாகச் சொல்லப் படுகின்றன. அவன், பாழி, விழிஞம், கோட்டாறு, ஆற்றுக்குடி, பூலந்தை, சேவூர், நறையாறு, கடையல், நெல்வேலி, வல்லம், மணற்றிமங்கை, வெண்மாத்து, களத்தூர், நாட்டாறு, நெடுங்களம், குளந்தை, சங்கமங்கை, வாட்டாறு, மேற்கரை முதலான பத்தொன்பது ஊர்களில் நடந்த பெரும் போர்களிற் சேரமன்ன னொருவனை

அடுத் தடுத்து வென்றமை இக் கலித்துறைச் செய்யுட்களிற் பலகாலும் உயர்த்துச் சொல்லப்படுகின்றது. இவ் வாற்றால் இப் பாண்டிவேந்தனுக்கு, அவன்காலத் திருந்த சேர மன்ன னொருவனே பெரும் பகைவனு யிருந்தமை அறியப்படும். ஈதிங் ஙனமாகவுங், "கோடன் மலர்ந்து" என்னும் ௩௨௩-ஆஞ் செய் யுளிற் 'பொன்னி நாடன்' என்னும் ஒரு சொற்றொடர் காணப் படுதல் கொண்டு, அவன்காலத்துச் சோழமன்னனொருவனையும் இவன் வென்றானெனப் பொருள் பண்ணினாரும் உளர்*. "பாழிவென்ற, ஆடல் நெடுங்கொடித் தேர்அரிகேசரி அந்தண் பொன்னி, நாடன் பகைபோல் மெலிகின்ற தென்செய்ய நன்னு தலே" என அச் செய்யுளிற் போந்த அடிகள் "பாழியென்னும் ஊரிற் போர்க் களத்தே வெற்றிகொண்ட ஆடுதலை யுடைய நீண்டகொடிக் கட்டிய தேரினையுடைய அரிகேசரி' எனவும், 'அழகிய குளிர்ந்த காவிரியினையுடைய நாட்டுக்குத் தலைவன்' எனவும், 'அத்தகைய தலைவற்குப்பகையாயினர் மெலிவடைதல் போலச் செவ்விய நன்னுதலையுடைய இந் நங்கையும் மெலி வடைத லென்னை?' எனவும் பொரு டருதலின், 'அரிகேசரி,' 'பொன்னிநாடன்' என்னும் இருபெயரும் ஓரரசன் மேலவாயே வருதல் வெள்ளிடை மலைபோல் விளங்கற்பாற்று. இச் செய் யுளிற் குறிப்பிடப்பட்ட பாண்டி மன்னன் தனது பாண்டி நாட்டுக்கே யன்றிச் சோழநாட்டுக்குந் தலைவனாயிருந்தனனென் னும் அத்துணையே இதன்கட் பெறப்படுகின்றதல்லாமல், இவன் சோழமன்னனைவென்றானென்பதும் அதனாற் பெறப்படவில்லை. சோழ நாட்டுக்குந் தலைவ னென்றமையானே அது பெறப்படு மா லெனின், அஞ் ஞான்றைச் சோழ மன்னற்கு அரசுக் குரிய புதல்வன் இல்லையாய்ப் புதல்வியொருத்தியே இருந்தனளாயின், அப் புதல்வியை மணந்துகொண்ட முறையால் அப் பாண்டி வேந்தன் சோழ நாட்டுக்குந் தலைவனாதல் கூடுமாகலின். அந்

* Dr. Krishnaswami Aiyangar in his 'The Beginnings of South Indian History,' p. 267.

நாட்டி னுரிமை அவற்குச் சொல்லியதே கொண்டு அவன் சோழனை வென்று னென்றல் பொருந்தாதென மறுக்க.

இனி, இப் பாண்டிவேந்தன் பெயர்கள் பலவற்றுள் 'நெடுமாறன்' என்பதும் ஒன்றாய்க் காணப்படுதலானும், இவன் 'நெல்வேலி'யிற் போர்புரிந்து பகைவரைத் தொலைத்தா னென்பது சொல்லப்படுதலானுந், திருஞான சம்பந்தப் பெருமான் காலத்தவனும் நெல்வேலிச் செருக்களத்தில் வந்தெதிர்ந்த வடபுல மன்னரைச் சாய்த்தவனுமாகிய 'நின்றசீர் நெடுமாற பாண்டியனே' இறையனாரகப்பொரு ளுரையி னிடையிடையே செருகப்பட்ட கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களிற் குறிப்பிடப் பட்டவ னவனென்று கொள்வாரும் உளர். அது பொருந்தாது. நின்றசீர் நெடுமாறன் நெல்வேலிப் போர்க்களத்திற் சாய்த்தது வடக்கிருந்துபடைதிரட்டிவந்தவடுகமன்னரையேயாம்; அஃது,

"ஆயவர சளிப்பார்பால் அமர் வேண்டி வந்தேற்ற
சேயபுலத் தெவ்வரெதிர் நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடன்முடுகும் பரிமாவின் பெருவெள்ளங்
காயுமதக்களிற்றினிரைபரப்பியமர்கடக்கின்றார்" எனவும்,

"இனையகடுஞ் சமர்விளைய இகலுழந்த பறந்தலையிற்
பனைநெடுங்கை மதயானைப் பஞ்சவனார் படைக்குடைந்து
முனையழிந்த வடபுலத்து முதன்மன்னர் படைசரியப்
புனையுநறுந்தொடைவாகை பூழியர்வேம் புடன்புனைந்து"

எனவும் போந்த பெரியபுராணச் செய்யுட்களால் (நின்றசீர் நெடுமாற நாயனார், ௬, எ) நன்குணரப்படும். மற்று, இறையனாரகப்பொரு ளுரைக் கலித்துறைகளிற் சுட்டப்பட்ட பாண்டியனோ நெல்வேலிப் போர்க்களத்திற் றொலைத்தது இன்னாரை யென்பது சொல்லப்படவில்லை; வாளா,

"நீடிய பூந்தண் கழனி நெல்வேலி நிகர் மலைந்தார்
ஓடிய வாறுகண் டொண்சுடர் வைவே லுறைசெறித்த
ஆடியல் யானை அரிகேசரி" (௨௨) என்று பொதுப்படப்

பகைவரை ஒட்டினெனென்னு மளவே சொல்லப்பட் டிருக்கின்

றது. நெல்வேலியில் அவனால் முறிவுண்ட பகைவர் பெயர் குறிக்கப்பட்டிலதேனும், விழிஞம், கோட்டாறு, ஆற்றுக்குடி, பூலந்தை, சேவூர், நறையாறு, கடையல் முதலான போர்க்களங்களில் அவனாற் றொலைவுண்டோன் ஒரு சேரமன்னனே யென்பது அடுத்தடுத்து விளக்கமாய்ச்சொல்லப்படுதலின், நெல்வேலி முதலான ஏனைப் பறந்தலைகளிலும் அப் பாண்டியனாற் றோல்வியுற்றோன் ஒரு சேரமன்னனே யாவனன்றி வடபுலமன்னன் ஆகான். ஆகவே, நெல்வேலிப் போரில் வென்றான் என்னுங் குறிப்பு ஒன்றேகொண்டு, இறையனாரகப்பொரு ளுரைக் கலித்துறைப் பாக்களில் மொழியப்பட்டோன் 'நின்றசீர் நெடுமாறனே' யென்றல் பெரிதும் பிழைபடுவ துடைத்தாம்.

இனிச், சின்னம னூரிலும் வேள்விக் குடியிலுங் கண்டெடுக்கப்பட்ட பட்டையங்களானே இந் நின்றசீர் நெடுமாற பாண்டியனுக்கு முன்னே 'செழியன் சேந்தன்,' 'மாற வர்மன் அவநி சூளாமணி,' 'கடுங்கோன்' எனப் பெயரிய பாண்டிய அரசர் மூவர் அரசு புரிந்தமை அறியக் கிடக்கின்றது. அம் மூவரில் நடுநின்ற 'அவநி சூளாமணி' என்னும் பாண்டியனுக்கும் 'மாறன்' என்னும் பெயர் உண்மை தெளியப்படுதலானும், நடுக் காலத்துச் சமண் தமிழ்க்காப்பியங்களுள் மிகச் சிறந்ததாகிய 'சூளாமணி' என்பது இப் பாண்டிமன்னன் பெயரால் இவன்மகன் 'செழியன் சேந்தன்' காலத்தில் ஆக்கப்பட்டதனை உற்றுநோக்கு மிடத்து அவ் 'அவநி சூளாமணி மாறன்' தமிழ் மொழிக்கண் மிக்க அன்புடையனாய் அதனை வளர்த்தலில் நிரம்பக் கருத்தூன்றி நின்றமை புலப்படுதலானும் 'இறையனாரகப் பொருளுரை'யின் இடையிடையே செருகப்பட்ட கட்டளைக் கலித்துறைச்செய்யுட்கள் அத்துணையும், அவனது தமிழ்ப் பற்றினையும் அவன்றன்பேராண்மையினையும் பாராட்டுதற்பொருட்டு அவனது அவைக்களத்துப் புலவரொருவராற் பாடப்பட்டமை துணியப்படும். இவ் அவநிசூளாமணிமாறன் காலத்திற் றமிழ் மொழி மதுரையில் மிகவுஞ் செழிப்புற் றிருந்த தென்பது,

"வண்டுறை வார்பொழில் சூழ்நறையாற்றமன் ஓடவைவேல்
கொண்டுறை நீக்கிய தென்னவன் கூடற் கொழுந்தமிழின்
ஒண்டுறை மேலுள்ளம் ஓடியதோ அன்றி யுற்றதுண்டோ
தண்டுறைவா சிந்தைவாடிட என்னீ தளர்கின்றதே" என்னும்

உரு-ஆங் கலித்துறைச் செய்யுளிற் கூறப்படுதலாலும், அவன் தமிழ்மொழியுணர்ச்சியிலும் நிரம்பி யிருந்தானென்பது "உரை யுறை தீந்தமிழ் வேந்தனுசிதன்" (உ), "பாவணை யின்றமிழ் வேந்தன் பராங்குசன்" (கரு), "ஆய்கின்ற தீந்தமிழ் வேந்த னரிகேசரி" (உஅ), "அந் தீந்தமிழ்நர் கோமான்" (ருo), எனப் பலகாலும் அவன் அக் கலித்துறைச் செய்யுட்களிற் பாராட்டப் படுதலாலும் நன்கு தெளியப்படும். இவ் வவநி சூளாமணி மாற னுக்கும், இவன்றன் பேரனுகக் கருதப்படும் நின்றசீர் நெடுமாற னுக்கும் இடையில் அறுபதாண்டுகளாவது சென்றதாகல்வேண் டும். நின்றசீர் நெடுமாறன் கி-பி ஏழாம் நூற்றாண்டின் துவக் கத்திலேயே இருந்தமை கல்வெட்டுக்களாற் றுணியப்பட்டிருத் தலின், அவற்குப் பாட்டனை அவநி சூளாமணி மாறன் கி-பி. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியி லிருந்தானாதல்வேண்டு மென் பதுந் தானேபெறப்படும். இம் மன்னர்பிரான் காலத்திற் றமிழ் மொழிப் பயிற்சியும் ஆராய்ச்சியும் மிக்குஓங்கவே,அஞ்ஞான்று பெரிதுபயிலப்பட்டுவந்த இறையனாகப்பொருளுரையி னிடை யிடையே, அப் பாண்டிமன்னன்மேற் பாடிய கலித்துறைச்செய் யுட்கள் எல்லாவற்றையும் அவற்றைப் பாடிய புலவரே சேர்த்து விட்டாரென்க. இவ்வாற்றால், இப் பாண்டிவேந்தன் 'இறைய னாகப் பொருளுக்கு' ஆசிரியர் நக்கீரனா ரியற்றிய சாலச் சிறந்த தமிழுரைப் பயிற்சியை மிகப் பரவவைத்தா னென்பதூஉம், அது பற்றியே அவன்காலத்துப் புலவரொருவர் அவன்மேற் பாடிய அக் கலித்துறைச் செய்யுட்களை அதன்கட் சேர்க்கலா யினா ரென்பதூஉம் அறியற்பாலன. மாணிக்கவாசகப் பெரு மான் அருளிச்செய்த 'திருச்சிற்றம்பலக் கோவையா'ரின் அகப் பொருட் கலித்துறைகள் சைவசமயத் தெய்வமாகிய சிவபெரு

மான் மேலவாய் வருதலிற் பொதுநூலாகிய இறையனர் களவியலுரையில் அவற்றை யெடுத்துக்காட்டுதல் நடுவன்ருகலானும், அல்லது அவற்றையெடுத்துக்காட்டலுறின் அக்களவியலுரைப் பயிற்சியை வளர்த்துத் தமிழையோம்பித் தம்போன்ற தமிழ்ப் புலவரைப் புரக்கும் அவ் வேந்தர் பெருமானைப் பாராட்டுதற்கு விழைந்ததங்கருத்து நிரம்பாமையானும் அப்புலவர் அவ்வரசன் மேற் பாடிய கலித்துறைச் செய்யுட்க ளவ்வளவையும் அவ்வுரையின்கட் சேர்த்துவிடலாயினரென்று தெளிந்துகொள்க.

இனி, இறையனரைகப்பொருள், உ-ஆஞ் சூத்திரவுரையில் 'நயப்பு' என்பதற்கு ஆசிரியர் நக்கீரனர் உரைத்த உரையினிடையே செருகப்பட் டிருக்கும்,

"வேறுமெனநின் றிகன்மலேர் தார்விழிஞத்துவின்போய்த்
ஏறுந்திறங்கண்டகோன்றென்பொதியில்இரும்பொழில்வாய்
தேறுந்தகையவண்டேசொல்லுமெல்லியல் செந்துவர்வாய்
நாறுந் தகைமையவே யணியாம்பல் நறுமலரே"

என்னுஞ் செய்யுளும் அதனுரையும் அவர்தம்மால் வரையப்பட்டன ஆகா. 'நயப்பு' என்பதற்கு நக்கீரனுரைத்தஉரைப்பொருளையே இச் செய்யுள் தன்கட்கொண்டு நிற்கின்றது. 'நயப்பு' இன்னதெனவிளக்கித் தாம்கூறிய உரைக்குப்பின் அவர்தம்மாற் காட்டப்பட்ட மேற்கோள் "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் பழைய 'குறுந்தொகைச்' செய்யுள் ஒன்றேயாம். இக் குறுந்தொகைச் செய்யுட் பொருளே அடங்கிய மேலும் ஐந்து கலித்துறைச் செய்யுட்கள் வேண்டா கூறலாய்ப் பின்னும் ஈண்டுச் சேர்க்கப்பட் டிருத்தலே உற்றுநோக்குமிடத்து, இவை யெல்லாமும், இவற்றுட் சிலவற்றிற்குப் போந்த வுரைகளும் நக்கீரனர் கண்டவுரைபுட்படுவன அல்லவென்பது நன்கு புலனும். இங்ஙனமே, பிறராற் பிற்காலத்தே சேர்க்கப்பட்ட கலித்துறைச் செய்யுட்களைப் பற்றிய பிற உரைக்குறிப்புகள் சிற்சிலவும் அச் செய்யுட்களைச் சேர்த்தவர் தம்மாலேதாம் எழுதி உடன் சேர்க்கப்பட்டனவாதல் வேண்டுமென் றுணர்ந்துகொள்க. அவை

யெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டலுறின் இதுபின்னும் விரியும். இவ் வளவில், ஆசிரியர் நக்கீரனார் இறையனாரகப் பொருளுக் குரைத்த ஒப்புயர்வில்லா விழுமிய உரையி னிடையிடையே பிறராற் பின்றைக்காலத்தே சேர்க்கப்பட்டவை: நக்கீரனாரது அவ் வுரைவந்த வரலாறு தெரிக்கும் உரைப் பகுதியும், இடையிடையே மேற்கோள்க ளாக வேண்டாகூறலாய்க் காட்டப்பட் டிருக்குங் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் அவ்வளவும், அக் கலித்துறைச் செய்யுட்கள் ஒரு சிலவற்றிற்கு எழுதப்பட் டிருக்கும் ஒருசிலஉரைகளும் உரைக் குறிப்புகளுமே என்பது பிரித்தெடுத்துக் காட்டப் பட்டமையால், இச் சிறுபகுதிகள் ஒழிய ஏனை உரைப்பெரும்பகுதிமுற்றும் அதனிடையே விராய பழைய சங்கச்செந்தமிழ்ச் செய்யுள் மேற்கோள்களும் ஆசிரியர் நக்கீரனார் வரைந்தனவேயா மென்பது கடைப்பிடிக்க.

இனிச், 'சேரன் செங்குட்டுவன்' நூலார், 'இறையனாரகப் பொரு' ளுரையினிடையே சேர்க்கப்பட் டிருக்குங் கலித் துறைச் செய்யுட்களிற் போந்த 'அரிகேசரி பராங்குசன்' என் பான் கி-பி எஎ0-இலிருந்த 'ஜடில பராந்தக'னுக்குத் தந்தையே யாவ னென்றும், அவன்மேற் பாடப்பட்ட கலித்துறைச் செய் யுட்களை எடுத்துக்காட்டிய 'களவியலுரை' அவ்வாற்றாற் கி-பி எட்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதே யாகுமென்றும், நக்கீர னார் செய்த அவ்வுரை வாய்ப்பாடமாகப் பத்துத் தலைமுறை சொல்லப்பட்டுவந்து பத்தாந் தலைமுறையாகிய கி-பி எட்டாம் நூற்றாண்டிலேதான் எழுத்துருவடைந்தமையின் அப் பத்துத் தலைமுறைக்கும் முந்நூறாண்டு கூட்ட நக்கீரனார் இருந்தது கி-பி ஐந்தாம் நூற்றாண்டே யாகல் வேண்டுமென்றுங் கூறிய கூற் றினைச் சிறிதாராய்வாம்.

செப்புப் பட்டையங்களிற் குறிப்பிடப்பட்ட 'அரிகேசரி பராங்குசன்' என்னும் பாண்டிமன்னன் குழும்பூரினுஞ் சங்கர மங்கையிலும் பல்லவ அரசர்களை முறியடித்தவன் என்னுந் துணையே சொல்லப்பட் டிருக்கின்றது; மற்று 'இறையனாரகப்

பொருளுரை'க் கலித்துறைச் செய்யுட்களிற் புகழ்ந்து பாடப்பட்ட 'அரிகேசரி பராங்குச நெடுமாறன்' என்னும் அவநி சூளாமணி பாண்டியனே பாழி, விழிஞம், சங்கமங்கை, நெல்வேலிமுதலான பத்தொன்பதூர்களிற்சேரனொருவனைச் சிதைத்தான் என்னுந் துணையே சொல்லப்பட்டிருக்கின்றது. செப்புப் பட்டையத்திற் கண்ட அரிகேசரி பாண்டியன் நெல்வேலியிற் போர் புரிந்து சேரனொருவனை வென்றானென அச் செப்புப் பட்டையங்களுள் ஒன்றாயினுங் குறிக்கக்காணோம்; பல்லவரை வென்ற செப்புப்பட்டையப் பாண்டியனையுஞ், சேரனைவென்ற களவியலுரைக் கலித்துறைப் பாண்டியனையும் ஒருவராக நாட்டுதற்குச் சான்று ஒன்றுதானுங் காணப்படாதாகவும் அவ்விருவரையும் ஒருவரென அஞ்சாது கூறத் துணிந்த செங்குட்டுவன் நூலாரது துணிபை என்னென்பேம்! அற்றன்று, செப்புப் பட்டையத்திற் குறிக்கப்பட்ட 'சங்கர மங்கை' என்னும் ஊரே களவியலுரைக் கலித்துறையிற் 'சங்கமங்கை' எனக் கூறப்பட்டதென உரையாமோவெனின், அவ்வாறுரைத்தற்குத்தான் சான்றென்னை? அரிகேசரி பாண்டியன் சங்கரமங்கையில் வென்றது பல்லவஅரசரையேயாம்; மற்று, அவநிசூளாமணிபாண்டியனே சங்கமங்கையிலும் ஏனைப் பல போர்க் களங்களிலும் வென்றது ஒரு சேர மன்னனையேயாம்; களவியலுரைக் கலித்துறைச் செய்யுட்கள் ௩௨௯-இல் ஓரிடத்தாயினும் அவன் பல்லவரை முறியடித்தானென்பதுஞ் சொல்லப்படவில்லை; அவன் போர்புரிந்த பத்தொன்பது ஊர்ப் போர்க்களங்களிற் 'குழும்பூர்' ஒன்றாதலுங் காணப்படவில்லை. ஆகவே, சங்கரமங்கை, குழும்பூர் என்னும் இடங்களிற் பல்லவரை முறியடித்த 'அரிகேசரி பராங்குச மாற வர்மனும்,' பாழி, விழிஞம், சங்கமங்கை, நெல்வேலி முதலான பத்தொன்பதூர்ப் பறந்தலைகளிற் சேர மன்னன் ஒருவனை வென்ற 'அவநி சூளாமணி நெடுமாறனும்' வெவ்வேறு காலத்திருந்த வெவ்வேறு பாண்டி மன்னரே யாவரல்லது, அவ் விருவரும் ஒருவராகாமை உள்ளங்கை நெல்லிக்

கனிபோல் தெள்ளிதின் விளங்கற் பாலதாம். அல்லதூஉங் களவியலுரைக் கலித்துறைச் செய்யுட்களில் நுவலப்பட்ட பத்தொன்பதூர்ப் பெரும் போர்களில் ஓரிடத்தாயினும் பல்லவ அரசர் மொழியப்படாமையின், இத்தென்னாட்டின்கட் பல்லவ ராட்சி நிலைபெறுதற்குமுன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையே அக் கலித்துறைச் செய்யுட்கள் மொழிகின்றன வென்பது திண்ணமாம். அக் கலித்துறைச் செய்யுட்கள் அத்தனையும் ஒரு பாண்டிவேந்தன் மேலனவாய்ப் பாடப்பட் டிருத்தலை உற்று நோக்குவார் எவர்க்கும், அவை அவ்வரசனாற் புரக்கப்பட்ட ஒரு புலவரால் அவ் வேந்தன் காலத்திலேயே இயற்றப்பட்டனவாதல் வேண்டுமென்பது புலனாகாநிற்கும். கி-பி எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் 'அரிகேசரி பராங்குச மாறவர்மன்' என்னும் ஒரு பாண்டியனும், கி-பி ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியில் நெல்வேலிக்கண் வில்வேலியை முறியடித்த 'அரிகேசரி மாறவர்மன்' என்னும் ஒருபாண்டியனும், கி-பி ஆறாம்நூற்றாண்டின் முற்பாதியில் 'அவநி சூளாமணி மாறவர்மன்' என்னும் ஒரு பாண்டியனும் ஆகப் பாண்டிமன்னர் மூவர் 'மாறன்' என்னும் பெயருடையராய் அரசுபுரிந்தமை செப்புப் பட்டையங்களான் அறியக் கிடக்கின்றது. 'மாறன்,' 'அரிகேசரி,' 'பராங்குசன்' என்னும் பெயர்கள் பாண்டிவேந்தர் பலர்க்குப் பொதுவாகக் காணப்படுதலால், அப் பெயர்களைமட்டுங் கொண்டு இன்னார் இன்னகாலத் திருந்தனர் எனத் துணிவது இழுக்குடைத்தாம். அவ்வம் மன்னர் செய்த ஆண்மைச் செயல் வரலாறுகளையும் பிறவற்றையுங் கருவியாகக்கொண்டு இவர் இன்னகாலத் திருந்தனரெனத் துணிவதே வாய்வதாகும். மேற்காட்டிய பாண்டிவேந்தர் மூவரில் எவ்வெவர்காலத்திற் செந்தமிழ்ப்பயிற்சி மிக்கு நிகழ்ந்ததென்று ஆராயும் வழி, 'அவநி சூளாமணி மாறன்' றன் ஆட்சிக் காலத்திலும், அவன்மகன் 'செழியன் சேந்தன்' காலத்திலுமே அஃதவ்வாறு செழிப்புற்றுத் திகழ்ந்த தென்பது, 'சூளாமணி' என்னுஞ் செந்தமிழ்க் காப்பியம் முன்னையோன்

பெயரால் இயற்றப்பட்டு அவன் மகன் சேந்தனது அவைக்களத்தே அரங்கேற்றப் பட்டமையினை,

"நாமண் புரைக்குங் குறையென்னினும் நாம வென்வேற்
றேமாண் அலங்கற் றிருமால் நெடுஞ் சேந்தனென்னுந்
தூமாண் தமிழின் கிழவன் சுடரார மார்பிற் [றே"*
கோமான் அவையுள் தெருண்டார் கொள்ளப்பட்ட தன்

என அக் காப்பியமே நன்கெடுத்துக் கூறுமாற்றால் இனிது விளங்கும். இவ் இருபாண்டி வேந்தர்க்குப்பின் அரசுசெலுத்திய நின்றசீர்நெடுமாறபாண்டியன் காலத்தில் தமிழ் அங்ஙனஞ் சிறப்புற்றிருந்த தென்பது எதொரு நூற்சான்றானும் பெறப்படாமையானும், அப் பின்னையோன் காலத்தில் அது சிறப்புற் றிருந்ததாயின் அவ்வாறு நூற்சான்று சிறிதும் இல்லையாய் ஒழியாதாகலானும் அப் பின்னையோன்காலத்திலெல்லாந் தமிழ் மொழிப் பயிற்சி குன்றிச், சமண் சைவ மதப் போராட்டமே எங்கும் ஆர்ப்பெடுத்துப் பரவலாயிற்றென்க; செழியன் சேந்தனுக்குப் பின்வந்த 'நின்றசீர் நெடுமாற' பாண்டியன் காலத்தில் திருஞானசம்பந்தப் பெருமானுக்குஞ் சமண் முனிவர்க்கும் இடைநிகழ்ந்த வழக்கே இதற்கு ஒருபெருஞ் சான்றாம். ஆகவே, நின்றசீர் நெடுமாற பாண்டியன் காலத்திற்குமுன் அரசுபுரிந்த 'செழியன் சேந்தன்' காலத்திலும், அவனுக்குத் தந்தையாகக் கருதப்படும் 'அவநி சூளாமணி மாறன்' காலத்திலும் மட்டுமே தமிழ்மொழிப் பயிற்சி வளங்கெழுமி நின்றமை தமிழ்நூல்களாற் றெளியக் கிடத்தலின், இறையனாரகப் பொருளுரைப் பயிற்சியும், அவநி சூளாமணி மாறன்மேற் பாடப்பட்ட கலித்துறைச் செய்யுட்கள் அவ்வுரையி னிடையிடையே செருகப்பட்டமையும் அவ் விருவருஞ் செங்கோ லோச்சிய கி-பி ஆறும் நூற்றாண்டினிடையிலேதான் நிகழ்ந்ததாகல் வேண்டுமேயல்லாமற், 'செங்குட்டுவன்' நூலார் கூறியபடி கி-பி எட்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்தன ஆகா. இவ்வாற்றால் செப்புப் பட்டையங்

* சூளாமணி, பாயிரம், ௩.

களிற் குறிக்கப்பட்ட 'சங்கரமங்கை'யுங், களவியலுரைக் கலித் துறைச் செய்யுட்களில் மொழியப்பட்ட 'சங்க மங்கை'யும் வெவ்வே றூர்களாகக் கொள்ளப்படல் வேண்டுமென்பதும், அங்ஙனமன்றி அவை யிரண்டும் ஒன்றேயென்று கொள்ளப் படினும் அதன்கண்நிகழ்ந்த போர்கள் இரண்டாய் ஒன்று அவநி சூளாமணி மாறனுக்கும் ஒரு சேரமன்னனுக்கும் இடைநிகழ்ந் ததேயாக, மற்றொன்று அரிகேசரி பராங்குச மாறனுக்கும் பல் லவ அரசர்க்கும் இடை நிகழ்ந்ததாய் வெவ்வேறு காலத்தன ஆகுமென்பதுந் தாமே போதரும் என்க.

இனி, நக்கீரனார் இயற்றிய களவியலுரை பத்துத் தலை முறை வாய்ப்பாடமாக வந்து, பத்தாந்தலைமுறையாகிய கி-பி எட்டாம் நூற்றாண்டிலேதான் எழுத்துரு வெய்திற் றென்ற 'செங்குட்டுவன்' நூலாரது கூற்றுப் பெரியதொரு பிழைபா டுடைத்தாம். வடக்கிருந்த ஆரிய மாந்தரே கி-பி மூன்றாம் நூற் றாண்டு வரையில் தம்முடைய நூல்களை எழுத்திலிட்டு எழுதத் தெரியாதவர்களாய், அவற்றை வாய்ப்பாடமாகக் கிடைகூட்டி நெட்டுருப்பண்ணி இடர்ப்பட்டோ ராவர். மற்றுத், தமிழ்மக்க ளோ தொல்காப்பியனார்இருந்த ஆறாயிர ஆண்டுகளுக்குமுன்னே தொட்டுத் தமது மொழியையும் அம்மொழி நூல்களையும் எழுத்திலிட்டு எழுதத் தெரிந்த நாகரிக வாழ்க்கையினராய் இருந்தன ரென்பதையும், அவர் வழங்கிய எழுத்துகள் வட் டெழுத்துகளேயா மென்பதையும் மேலே 587-ஆம் பக்கத்தி லிருந்து 592-ஆம் பக்கம்வரையில் வைத்து விளக்கிக்காட்டி யிருக்கின்றோம். அங்ஙனம் எழுத்தெழுதத் தெரிந்த பண்டைத் தமிழறிஞர் தம்முடைய நூல்களையெல்லாம் பனை யேடுகளில் எழுதிவைத்துப் பயின்று வந்தனரே யன்றி, வட வாரியரைப் போற் கிடைகூட்டிப் பயின்று அவைதம்மை முற்றும் உருச் செய்து இடர்ப்பட்டாரல்லர். தமிழர்க்கும்ஆரியர்க்கும் பண்டே யுரிய இவ் விருவேறு நூற்பயிற்சி முறையினியல்பு, எழுத் தெழுதத் தெரிந்த இஞ்ஞான்றும் அவ்வாரிய வழக்கத்தைப் பின்

பற்றிய பார்ப்பனர் அதனைவிடமாட்டாராய்க்கிடைகூட்டித் தம் நூல்களை நெட்டுருச்செய்து வருதலாலும், தமிழறிஞர் அவ்வா றின்றித் தமது பழைய வழக்கப்படியே தம்நூல்களையெல்லாம் பனையேடுகளில் எழுத்திட் டெழுதிப் பயின்று வருதலாலுந் தெற்றென விளங்காநிற்கும். அதுவேயுமன்றிக், களவியலுரைப் பாயிரமே "இவ் வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின்கீழ் இட்டான்" என மொழி தலால், 'இறையனாரகப்பொருட்'சூத்திரமும் அவற்றினுரையும் ஆக்கப்பட்ட பழைய நாளிலேயே தமிழ்நூல்கள் எழுத்திட் டெழுதப் பட்டமை ஐயுறவின்றித் துணியப்படும். படவே, களவியற் சூத்திரமும் உரையும் பத்துத் தலைமுறை வரையில் வாய்ப்பாடமாகவே வந்ததென்று பண்டைநூற் சான்றகட்கெல் லாம் முரணாகத் துணிபுரைநிகழ்த்திய 'சேரன் செங்குட்டுவன்' நூலாரதுகோள் புரைபட் டழிந்தமைகாண்க. அற்றேல், நக்கீர னார் தாமெழுதிய அக் களவியலுரையைத் "தம் மகனார் கீரங் கொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர் கிழார்க் குரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க் குரைத்தார்" என்றற் றொடக்கத் தனவாகப் போந்த சொற்றொடர்க்கருத் தென்னையெனின்; இக் காலத்திற் பல்லாயிரக் கணக்கான நூல்களை அச்சிற் பதித்துப் பரப்புவிக்கும் அச்சுப் பொறிகளும் அச் செழுத்துக்களுந் தாள்களும் உளவாயினாற் போல, அக்காலத்து அக் கருவிகள் இன்மையின், அஞ்ஞான் றிருந்த நல்லிசைப்புலவரொருவர் தாம்இயற்றியநூலைத் தாம் எழுதியவாறேபிழைபடாமல் வழங்கு வித்தற்பொருட்டுத், தாம் அறிந்த கற்றார் ஒருவர்க்கு அந்நூலைப் பாடஞ் சொல்லிவைத்து, அந்நூற் பொருளைப் பிறர் தமக்குத் தோன்றியவாறு திரித்துணர்ந்து அத் திரிபுணர்ச்சிக்கு இசைய அதன்கண் உள்ள சொற்களையுஞ் சொற்றொடர்களையும் மாற் றிப் பிழைபடுத்தா வண்ணம், தமதுண்மைக் கருத்துத் தெரித் துரைப்பர். அவ்வாறு அந் நூலாசிரியன் வாய் அந் நூலின் மெய்ப்பொருளுணர்ந்தவர், அதனைத் தாம் கேட்டுணர்ந்தவாறே

தாம் அறிந்த மற்றொருவர்க்கோ அல்லது பலர்க்கோ அதனைப் பாடஞ்சொல்லி வைப்பர். இங்ஙனமாக ஓராசிரியன் இயற்றிய நூல் அவன் கருத்தை வழுப்படாமல் அறிவிக்குங் கருவியாய் அவன் வழிவந்த மாணக்கருள் ஒருவர் ஒருவர்க் குரைப்ப வரும் வரிசையினையே "நக்கீரனார் தம்மகனார் கீரங்கொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர்க் கிழார்க் குரைத்தார்" என்றற் றொடக்கத்துச் சொற்றொடர்கள் அறிவுறுத்துவதன்றி, எழுத் தெழுதத் தெரியா ஆரிய மாந்தர் தம் நூல்களைத் தம்மவர்க்கு வாய்ப்பாடமாகச் சொல்லிவைத்தல்போல், நக்கீரனார் முதலியோ ருந் தத்தம் மாணக்கர்க்கு அதனை வாய்ப்பாடமாய்ச் சொல்லி வைத்தாரென அறிவுறுத்துவன அல்ல. ஏனெனிற், பண்டே எழுத்தெழுதத் தெரிந்த தமிழர்க்குள் அங்ஙனம் வாய்ப்பாட மாகச் சொல்லிவைக்கும் வழக்கம் இல்லாமையானும், அன்றி அவ் வழக்கம் இருந்ததென நாட்டுதற்கு ஏதொரு சான்றுங் காணப்படாமையானும் என்பது. அது கிடக்க.

இனிக், களவியலுரை உரைக்கப்பட்டு வந்த மாணக்கரின் காலவரிசை பத்தாந் தலைமுறைக்கண் நின்ற முசிறியாசிரியர் நீலகண்டனாரொடு முற்றுப் பெறுதலின், அவ்வுரை நீலகண்ட னார் காலத்திலேதான் எழுத்துருப் பெற்று ஏட்டிலெழுதப் பட்டதென்றும், அங்ஙனம் அஃது எழுதப்பட்ட காலம் அவ் வுரையி னிடையிடையே எடுத்துக் காட்டாய்ப் போந்த கலித் துறைச் செய்யுட்களிற் புகழப்பட்டவனுங் கி-பி எட்டாம்நூற் றாண்டின் முற்பகுதியி லிருந்தவனுமாகிய 'அரிகேசரி பராங்குச மாறவர்மன்' காலத்திற்கும் பிற்பட்டதே யாகற்பாலதென்றுஞ் 'செங்குட்டுவன்' நூலார் கூறினர். பத்தாந் தலைமுறைக்கண் வந்த நீலகண்டனாரொடு நக்கீரனா ருரையின் வழிவந்த மாணக் கர்மரபு முற்றுப் பெறுதலால், அம் மாணக்கர் வரிசையினைக் கூறும் உரைப்பகுதி மட்டும் நீலகண்டனார் எழுதியதா யிருக்க லாம். ஆனால், நீலகண்டனார் காலத்திலேதான் அவ்வுரை எழுத் துருப் பெற்றதென்பதற்குச் சான்றென்னை? தொல்காப்பியனார்

காலந்தொட்டே தமிழ் நாட்டகத்துத் திகழ்ந்த தமிழ்ச் சான்றோர்கள் தம்முடைய நூல்களை எழுத்திட் டெழுதிப் பயின்று வந்தார்களென்பதற்கே நூற்சான்றுகள் இருக்கக்காண்டுமன்றி, அவர்கள் அவற்றைவாய்ப்பாடமாக ஓதிவந்தார்களென்பதற்குத் தினைத்தனைச் சான்றும் இன்மையின், நீலகண்டனார் காலத்திலேதான் அவ்வுரை எழுத்துருப் பெற்றதெனப் பிழையாகப் பொருள்பண்ணிக்கொண்ட 'சேரன் செங்குட்டுவன்' நூலாரது உரை பெரும்பிழைபாட்டுரையேயா மென்க.

இனிக், களவியலுரையி னிடையிடையே செருகப்பட்டுள்ள கலித்துறைச் செய்யுட்களிற் புகழ்ந்துபாடப்பெற்றவன் கி-பி ஆறும் நூற்றாண்டின் முற்பாதியிலிருந்த 'அவநிசூளாமணி மாறனே' யல்லாது, அவனுக்கு நான்கு தலைமுறை பிற்பட்டு வந்து கி-பி எட்டாம்நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த 'அரிகேசரி பராங்குச மாறவர்மன்' அல்லனென்பதை மேலே நன்கு விளக்கிக் காட்டினமாதலால், அவ்வரசனைப் பின்னோனாக மாறுபடுத்திச் சொல்லிய செங்குட்டுவன் நூலாரதுரை பெரியதொரு தலைதடுமாற்ற வுரையேயாமென விடுக்க.

இனி, அப் பாண்டி மன்னன்மேற் பாடப்பட் டிருக்குங் கலித்துறைச் செய்யுட்களை அவ்வுரையினிடையிடையே சேர்த்தவர், நக்கீரனார்தம் மாணாக்கர் வழியில் வந்த நீலகண்டனாரே யாவரென்பதுபடச் 'செங்குட்டுவன்' நூலார் மொழிந்ததற்குச் சான்றியாது என்றாராய்வுழிச் சான்றேதும்புலப்படக்காணேம். சான்றேதுமின்றித் தமக்குத் தோன்றியவா றெல்லாம் எழுதிவிடுதல்தான் வரலாற்றுரை போலும்! மற்று, அக் கலித்துறைச் செய்யுட்கள் அவ் அவநி சூளாமணி மாறனது அவைக்களத்திருந்த ஒரு புலவராற் செய்து அவ்வுரையினிடையே சேர்க்கப்பட்டனவாதல் வேண்டுமே யல்லாமல், நக்கீரனார்தம் மாணாக்கர் வழிவந்த நீலகண்டனாராற் சேர்க்கப்பட்டன ஆகாவென்பது முன்னரே விளக்கப்பட்டது. ஆசிரியர் நக்கீரனார் கி-பி முதல் நூற்றாண்டின் முற்பகுதியி லிருந்தாரென்பதை மேலே 412-

ஆம் பக்கத்திற் பல சான்றுகள்காட்டி விளக்கியிருக்கின்றேம். ஆகவே, அவர்தம் மாணுக்கர் மரபிற் பத்தாந் தலைமுறைக்கண் நின்ற நீலகண்டனுர் கி-பி நான்காம் நூற்ருண்டின் நடுவிலிருந்தாராகற் பாலார். நக்கீரனுர் கண்ட களவியலுரைப் பாயிரத்தினிடையே அவருரைவந்தவரலாறு தெரிக்கும் உரைப்பாயிரப் பகுதி இந் நீலகண்டனுரால் எழுதி அதன்கட் சேர்க்கப்பட்டதோ, அன்றி அந் நீலகண்டனுர்க்கும் முற்போந்த மாணுக்கரால் எழுதிச் சேர்க்கப்பட்டதோ, இன்னதுதானென்று துணிந்து சொல்லுதற்குச் சிறிதும் வாயிலில்லை. அஃதெங்ஙனமாயினும், ஆரியர் நடையைப் பின்பற்றிய பார்ப்பனர் பொய்யும் புரட்டும் நிரம்பக் கட்டிவிட்ட புராணகதைகள் தமிழ் நூல்களில் மெல்ல மெல்லப் புகத் தொடங்கிய கி-பி இரண்டாம் நூற்ருண்டிற்குப் பின்னரேதான் அப் புராணகதைகளோடொத்த புளுகுகள் பல விரவிய அவ் வுரைப்பாயிரப் பகுதி எழுதி அதன்கண் நுழைக்கப்பட்டதாகல்வேண்டு மென்பதுமட்டுந் திண்ணம். ஏனைக் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் முந்நூற் றிருபத்தொன்பதும், அவற்றுட் சிலவற்றிற்குப் போந்த உரைகளும் உரைக் குறிப்புகளுமோ நீலகண்டனுர்க்கு இருநூற்ருண்டு பிற்பட்டுவந்த 'அவநிசூளாமணி மாறன்' றன் அவைக்களத்துப் புலவரொருவரால் இயற்றி அவ் வுரையின்கட் சேர்க்கப்பட்டன வாதல் வேண்டுமென்று பகுத்துணர்ந்துகொள்க. இவ்வாருக, அக்கலித் துறைச் செய்யுட்களை அவ்வுரையின்கட் கோத்தவர் நீலகண்டனுர் அல்லரென்பது பெறப்படவே, கி-பி நான்காம் நூற்ருண்டின் கண்ணதான அவரதுகாலத்தைக் கி-பி எட்டாம் நூற்ருண்டின் கண்ணதாகச் சான்றேதுமின்றிப் பிழைத்துணர்ந்து, அவ் வாற்ருல் ஆசிரியர்நக்கீரனுரைக் கி-பி ஐந்தாம் நூற்ருண்டிற் படுப்பிக்க விழைந்த 'சேரன்செங்குட்டுவன்' நூலாரது விழைவு நிரம்பாது ஏமாற்றம் அடைந்தமை காண்க. நக்கீரனுர் இருந்தகாலங் கி-பிஐந்தாம்நூற்ருண்டாகாமல் முதல்நூற்ருண்டாகவேபலவாற்ருனுந்திண்ணமாய்ப்பெறப்படுதலால், அவரும்அவரோடொருங்

கிருந்த தமிழ்ச் சான்றோரும் நடைபெறுத்திய கடைச்சங்க மிருந்த காலமுங் கி-பி ஐந்தாம் நூற்றாண்டாகாமற் கி-பி இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகவே பெறப்படும் என்பது.

இனிச், 'சேரன் செங்குட்டுவன்' நூலார் மேற்காட்டியவாறெல்லாம் பிழைபாடாகத் தாம் செய்துகொண்ட செய்யுட் பொருள்களாலும், உண்மைகளை மாறுபடுத்திக்கொண்ட மாறுபாட் டுரைகளாலும், ஒன்றை மற்றொன்றாகக் கருதிய திரிபுணர்ச்சியாலுங் கடைச்சங்க காலத்தைக் கி-பி ஐந்தாம் நூற்றாண்டின்கட் படுப்பிக்க முயன்று அம் முயற்சியில் முற்றும் இழுக்கியவாற்றினை விரித்து விளக்கிக், கடைச்சங்ககாலங் கி-பி இரண்டாம்நூற்றாண்டிற்கு முற்பட்டதாதலை நிறுவினும். அவர் அம்மட்டி லமையாது, 'சிலப்பதிகாரத்'திற் போந்த சில குறிப்புகளைப் பொறுக்கியெடுத்து அவற்றிற்குத் தம் மனம்போனவாறு பொருளுரைத்து அவ்வாற்றால் வடநாட்டு மன்னர் சிலரிருந்த கால வாராய்ச்சியினைத் தம் கருத்துக்கிணங்கத் திரித்து அது கொண்டு கடைச்சங்ககாலம் ஐந்தாம் நூற்றாண்டின்கட் படுமென்றார். ஆகலின், அதனையும் ஆராய்ந்து அவர்கொண்ட முடிபு பொருந்தாமை காட்டுதும்.

சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ வடிகட்குத் தமையனும், பேராண்மையிற் சிறந்த சேர வேந்தனும் ஆகிய **செங்குட்டுவன்** கண்ணகியின் உருவஞ் சமைத்தற்கு இமயமலையினின்றும் ஒரு கருங்கற் றுண்டு கொண்டுவருதற் பொருட்டுந், தென்றமிழ் மன்னரை இகழ்ந்துபேசிய வட ஆரிய மன்னராங் **கனக விசயர்** என்பாரை வென் றடக்குதற் பொருட்டும் வடநாடு நோக்கிப் படையெடுத்துச்சென்றானென்பதும், அங்ஙனம் அவன் சென்றகாலத்து அவனுக்கு உதவிசெய்த நண்பரான ஆரியமன்னர் 'நூற்றுவர் கன்னர்' எனப்படுவரென்பதுஞ் சிலப்பதிகாரங், கால்கோட் காதையிற் சொல்லப்பட் டிருக்கின்றன. வட ஆரியமன்னரில் நூற்றுவர் கன்னரே சேரன் செங்குட்டுவனுக்குச் சிறந்த நண்பரென்பது,

"வேற்றுமையின்றி நின்னொடு கலந்த
நூற்றுவர் கன்னரும்" எனப்போந்த அடிகளாலும் (கால்கோட் காதை, கசஅ, கசகூ), இவன் வடக்கே சென்று கங்கைப் பேரியாற்றைக் கடக்க வேண்டுழிக் அக் கங்கையாற்றுப் பக்கத் திருந்தநாடுகளில் அரசுபுரிந்த அந் நூற்றுவர்கன்னர் அவனுக்கு மரக்கலன்கள் பலவற்றைக்கொடுத் துதவிசெய்து, அவற்றால் அவன் தன்படையொடும் அவ்வியாற்றைக் கடந்து அதன் வடகரை சேர்ந்த வழி அவ் வாரியமன்னர் அவனை எதிர்கொண்டு தமது நாட்டுக்கு அழைத்துச் சென்றனரென்பது,

"கங்கைப் பேரியாற்றுக் கன்னரிற் பெற்ற
வங்கப் பரப்பின் வடமருங் கெய்தி,
ஆங்கவர் எதிர்கொள அந் நாடுகழிந்து" எனப் போந்த அடிகளாலும்(களகூ-களஅ), அங்ஙனஞ்சென்ற செங்குட்டுவன் தன்னைஎதிர்த்த கனகவிசயரையும் அவனுக்குத் துணைப்போந்த ஆரிய மன்னரையும் வென்று இமயத் தெடுத்த கருங்கற்றுண்டை அக்கனகவிசயர்முடிமேலேற்றித்தென்னாடுநோக்கிப்பெயர்கையில் தனக்கு உதவிசெய்த நண்பரான 'அந் நூற்றுவர் கன்னரை' அவர்தம் நாடுநோக்கிச் செல்கவென ஏவினனென்பது,

"ஆரிய மன்னர் ஐயிரு பதின்மரைச்
சீர்கெழு நன்னாட்டுச் செல்கவென்றேவி" என்னும் அடிகளாலும் (நீர்ப்படைக் காதை, களள, கஎஅ), அதன்பின் தென்றமிழ்க் குடநாட்டிற் றன்வஞ்சிமா நகர்க்குத் திரும்பிய செங்குட்டுவன் தான் கொணர்ந்த கருங்கற் றுண்டிற் கண்ணகியின் உருவமைத்து அதற்கென்று கட்டுவித்த கோயிலில் அதனை நிறுத்திவிழாவெடுத்தஞான்று, அவன் போரிற்றொலைத்துச் சிறையாய்க் கொணர்ந்த ஆரியமன்னரையும் அவர்போல் முன்னரே சிறைக்கணிருந்த ஏனைமன்னரையுஞ் சிறையினின்றுஞ் சிறைவீடுசெய்ய அம்மன்னருங், குடகநாட்டின் கொங்கரும்,மாளுவ நாட்டின் வேந்தரும், இலங்கைத்தீவின் வேந்தனான கயவாகுவும் வந்து அக்கண்ணகியி னுருவத்தை வணங்கினரென்பது,

"அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னருங்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தருங்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீகென்றே வணங்கினர் வேண்ட" என்னும் அடிகளாலும் (வரந்தரு காதை, கடுஎ-கசுஉ) இவற்றை யெல்லாம் உடனிருந்து கண்ட இளங்கோவடிகளே சிலப்பதிகாரத்தில் விளங்கக் கூறியிருக்கின்றார். இவர்கூறிய இவ் வுண்மைவரலாற்றுக் குறிப்புகளிற் 'கன்னர்' என்னும் அரசர் நூறுபேருங் கங்கை யாற்றின் வடகரையை யடுத்துள்ள நாடுகளில் அரசாண்ட ஆரிய மன்னராதலும், ஏனை 'மாளுவ வேந்தர்' என்பார் கங்கை யாற்றுக்குத் தெற்கே நெடுந் தொலைவில் உளதாகிய நருமதை யாற்றங்கரையை யடுத்து 'ராஜபுதனத்'தின் தென்பகுதிக்கண் விரிந்ததாகிய மாளுவ நாட்டை ஆண்டோராதலும், இவ்விரு வேறு அரசரும் வெவ்வேறு நாட்டினரும் வெவ்வேறு இனத்தினருமாவரேயல்லது இவ்விருவரும் ஒருவரே யென ஒன்றபடுத்துரைத்தற்குத்தினைத்தனைச்சான்றும்இளங்கோவடிகள் அருளிச் செய்த இவ்வரலாற் றுரைகளில் இல்லையாதலும் இவை தம்மை ஆயுந் தமிழறிஞர் எவரும் நன்குணர்வர்.

ஈதிங்ஙனமாகவுஞ்'செங்குட்டுவன்'நூலார், இளங்கோவடிகள் குறித்த 'மாளுவ வேந்தரும்,' 'நூற்றுவர் கன்னரும்' வேறு வேறல்லர் ஒரு வகுப்பினரே யென்றுங், கி-பி ருடுO-ஆம் ஆண்டிற் சமுத்திரகுப்தன் இம்மாளுவநாட்டின்மேற் படையெடுத்து வந்த ஞான்று இம் மாளுவவேந்தர் தமது மாளுவநாட்டைப் பல பிரிவுகளாகப் பகுத்து அவற்றின்கண் அரசுபுரிந்து வந்தன ரென்றுங், கண்ணகிகோயிலிற் செங்குட்டுவன் விழவெடுத்த நாளில் அவனுக்குச் சிறந்த நண்பரான நூற்றுவர்கன்ன ரென்

பார் வராதிராராகலின் அவர் அப் பெயராற் குறிக்கப்படா விடினும் அப்போது வந்திருந்தவராகச் சொல்லப்பட்ட மாளுவ வேந்தரே அந் நூற்றுவர்கன்ன ராதல்வேண்டு மென்றும், அதனாற் செங்குட்டுவன்காலங் கி-பி ஐந்தாம்நூற்றாண்டேயாகற் பாலதென்றுங் கூறினார்.

மாளுவவேந்தரும், நூற்றுவர்கன்னரும் வேறல்லர் என்பதனை நாட்ட இவர்காட்டிய இரு சான்றுகளுட், சமுத்திரகுப்தன் படையெடுத்துவந்த ஞான்று மாளுவநாடு பலபிரிவுகளாக வகுக்கப்பட்டு அரசர் பலரால் ஆளப்பட்டதென்பதொன்று. ஆனால், இவர் இதற்கு மேற்கோளாக எடுத்துரைத்த ஆங்கில வரலாற்று நூலாசிரியர் இவருரைக்கும் வண்ணமே யுரைப்பக்காணேம். அவ் வாங்கில ஆசிரியர் "பஞ்சாபி கீழைஇராசபுதனம் மாளுவ நாடென்பன பெரும்பாலுங் குடியரசு முறையில் உயிர்வாழ்ந்த குடியினர் அல்லது இனத்தவரின் ஆளுகையில் இருந்தன"* எனவும், "சமுத்திரகுப்தன் ஆண்ட நாட்டின் எல்லைப்புறத்திருந்த மாளுவரும் மற்றைக் குடியினருந் தமதாட்சியில் வைத்திருந்த தேயங்கள் தனது பேராளுகையினுள் எடக்கப்பட்டதுடன் (இரண்டாஞ் சந்திரகுப்தனது) வெற்றி நிறைவெய்திய நடுக்காலங் கி-பி ௩௯௫-ஆம் ஆண்டாகக் கொள்ளப்படலாம்."† எனவும் மொழிதல்கொண்டு, சமுத்திரகுப்தனும் அவன் மகன்

* "The Panjab, Eastern Rajputana, and Malwa for the most part were in possession of tribes or clans living under republican institutions" Dr. Vincent A. Smith's 'The Early History of India,' 1914, p. 286.

† "The year 395 may be assumed as a mean date for the completion of the conquest, which involved the incorporation in the empire of the territory held by the Malavas and other tribes, who had remained outside the limits of Samudragupta's dominion." Ibid, p. 291.

இரண்டாஞ் சந்திரகுப்தனும் அரசுசெலுத்திய கி-பி நான்காம் நூற்றாண்டில் மாளுவநாடானது குடியரசின்கீழிருந்ததென்பது பெறப்படுகின்றதே யல்லாமல், அப்போது அது வேந்தராட்சி யின்கீ ழிருந்ததென்பது சிறிதும் பெறப்படக் காணேம். மற்று, ஆசிரியர் இளங்கோவடிகளோ, சேரன் செங்குட்டுவன் எடுப் பித்த கண்ணகி விழவுக்கு மாளுவநாட்டிலிருந்து வந்த அரசரை “மாளுவவேந்தர்” என்றே விளக்கமாய்க்கூறுகின்றார். ஆகவே, ‘செங்குட்டுவன்’ நூலார் தாம் எடுத்துக்காட்டிய ஆங்கில வர லாற்று நூலாசிரியரதுரை தமது கருத்துக்கு முழுதும் மாறாய் நிற்றலை அறிந்துகொள்ளாமை இரங்கற்பால தொன்றாம். ஆங் கிலத்திலுள்ள அந்நூலைத் தமிழொன்றே கற்றார் அறியாராத லால், அந்நூலைக் காட்டியாயினுந் தமது வழுக்கொள்கையினை நாட்டிவிடலாமென அவர் எண்ணினர்போலும்!

இனிச், சமுத்திரகுப்தன் காலத்தும் அவன் மகன் சந்திர குப்தன் காலத்தும் மாளுவநாடு குடிமக்கள் பலர் ஒருங்குகூடி நடாத்திய குடியரசின்கீ ழிருந்தமை, அவரெடுத்துக் காட்டிய ஆங்கிலஆசிரியர் வரைந்த வரலாற்றுநூலினாலேயே தெற்றெனப் புலனாதலின், இளங்கோவடிகள் குறித்த மாளுவவேந்தர் அக் குடியரசு நடாத்திய குடிமக்கள் ஆகாமை சிறிதறி வுடையார்க் கும் விளங்கற்பாலதே யாம். அற்றேல், இளங்கோவடிகள் குறித்த அம் மாளுவ வேந்தர்தாம் யாரோவெனிற்; கனிஷ்க மன்னனைத் தலைவனுய்க் கொண்டு காந்தாரத்தில் அரசுபுரிந்த குஷான்குடிப் பேரரசர்க்குக் கீழடங்கி மாளுவநாட்டை ஆண்ட அரசர் ‘சகசத்திர பதிகளே’ ஆவர். இவர்களுட் சிறந்த அரச னாய்த் திகழ்ந்தவன் ‘முதலாம்ருத்ரதாமன்’ என்பவனே யாவன்; இவன் கி-பி. கநுO-ஆம் ஆண்டையடுத்துக் ‘கிர்நார்’ ஊர்க் கற் பாறையில் வெட்டுவித்த கல்வெட்டு ஒன்றால் இவன் கி-பி இரண் டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியி லிருந்தமை துணியப்படும்*. அவனுக்குப் பின்னும் அரசர் அறவர் மாளுவ நாட்டின் தலை

---

* Ibid, p. 132.

நகராகிய 'உச்சயினி'யில் அரசு புரிந்தமையுங், கி-பி மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியோடு, இச் சகசத்திரபதி யரசரின் மரபும் இவரோடு ஒருகாலத்தினராகிய ஆந்திர அரசரின் மரபும் அற்றுப்போனமையும் ஆங்கில ஆசிரியரான வின்செண்ட் சிமித் என்பவரால் நன்கெடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன*. மேலே 86-ஆம் பக்கத்திற் காட்டப்பட்டபடி கி-பி கஎக முதல் கசுரு வரையில் இலங்கையில் அரசாண்ட முதற் கயவாகு என்னும் வேந்தனும் சேரன் செங்குட்டுவன் எடுப்பித்த கண்ணகி விழவுக்கு வந்திருந்ததனை, அவரோடு உடனிருந்த ஆசிரியர் இளங்கோவடிகளே சிலப்பதிகார, வரந்தருகாதை, கசும0-ஆம் அடியில் விளங்கக்கூறுதலின், அவ் விருபத்திரண்டு ஆண்டுகளில் மாளுவ நாட்டின்கண் அரசுபுரிந்த 'ஜீவதாமன்,' 'முதல் ருத்ரசிம்மன்,' 'முதல் ருத்ரசேனன்' என்னுஞ் சகசத்திரபதி அரசர் மூவரில் எவனேனும் ஒருவனும், அக்காலத்தில் மாளுவத்தை யடுத்த மேல்நாடுகளுக்கு அரசரான ஆந்திரர் அச்சத்திரபதியரசரோடு உறவு கலந்தபிற் றோன்றிய ஆந்திர மன்னனான 'கௌதமீபுத்ர யஜ்ஞஸ்ரீ' என்னும் வேந்தனுமே அக் கண்ணகி விழவுக்கு வந்திருந்தாராகற்பாலர். அவரையே இளங்கோவடிகள் அவர்தம் உறவுரிமை பற்றி 'மாளுவவேந்தர்' எனப் பலர்பாற் சொல்லாற் குறித்தாராகல் வேண்டும். இவ்விருமன்னர் வந்தமை பற்றியே இவரை இளங்கோவடிகள் இங்ஙனம் பலர்பாற் சொல்லாற் கிளந்திருக்க, இவ் வுண்மையினை நன்காய்ந்து பார்க்கும் ஆங்கில நூலறிவுமதுகை யின்றி, 'வேந்தர்' என்னும் அச் சொல்லைக் கண்ட துணையானே, அதற்கு 'நூற்றுவர் கன்னர்' எனப் பிழையாகப் பொருள்செய்து, அப் பிழையையே தமது பொருந்தாக் கொள்கைக்கு ஒரு பெரும் பற்றுக்கோடாய்க்கொண்ட 'செங்குட்டுவன்' நூலார் செயல், நீரில் அமிழ்ந்துவோன் மரக் கோடென நினைந்து ஒரு சிறுதுரும்பினைத் தாவிப்பற்றிய செயலோடு ஒப்பதாய் முடிந்தமைகாண்க.

* Ibid, p. 218.

இனி, அவர் அவ் விருவேறு வேந்தரையும் ஒன்றுபடுத்தற்குக் காட்டிய நுண்ணறிவின்திறத்தை என்னென்பேம்! செங்குட்டுவனுக்குச் சிறந்த நண்பரான 'நூற்றுவர் கன்னர்' அவ் வேந்தன் எடுப்பித்த கண்ணகி விழவுக்கு வாராதிரார் ஆகலின், அதற்கு வந்திருந்தவராகச் சொல்லப்பட்ட மாளுவ வேந்தரே அந் நூற்றுவர்கன்னராதல் வேண்டுமென்னுஞ்'செங்குட்டுவன்' நூலாரது உய்த்துணர்ச்சி எவ்வளவு நுண்ணிது! எவ்வளவு ஆழ்ந்தது! "வேற்றுமையின்றி நின்னொடு கலந்த, நூற்றுவர் கன்னர்" எனவும், "கங்கைப் பேரியாற்றுக் கன்னரிற் பெற்ற" எனவும், "ஆரியமன்னர் ஐயிருபதின்மரை" எனவுஞ் செங்குட்டுவனுக்கு நட்பரசரான அவரைத் தாம் மொழிய வந்துழியெல்லாங் 'கன்னர்,' 'நூற்றுவர்,' 'ஐயிருபதின்மர்' என்னும் பெயர்களால் ஐயுறுதற் கிடனின்றி விளங்கக் குறிப்பிட்டுவந்த ஆசிரியர் இளங்கோவடிகள், இவ் வோரிடத்துமட்டும் அவரை 'மாளுவவேந்தர்' என முன்பின் மொழிந்திலாத வேறொருபெயராற் குறிப்பரோவெனவும், அவ்வாறுகுறித்தற்கு ஏதுவென்னையெனவும், எத்துணைப் பெரியாருந் தாங் கருதியவற்றைத் தாங் கருதியவாறே செய்துமுடிக்க இயலாவாறு மாறுனநிகழ்ச்சிகள் வலிகொண்டு நிகழும் இஞ்ஞாலத்தில் 'நூற்றுவர் கன்னர் வாராதிரார்' என நீர் அங்ஙனந் துணிந் துரைத்தற்குக் கொண்ட சான்று எப்பெற்றிய தெனவும் வினவுவார்க்குச் 'செங்குட்டுவன் நூலார்' தமது நுண்ணறிவுகொண்டு எங்ஙனம் இறுப்பரோ அஃதிறைவனே அறியற்பாலான்! யாம்ஆராய்ந்தமட்டில்இவரது நூலிலிருந்து இவ் வினக்களுக்கு விடை ஒருசிறிதும் பெறப்படாதென்பது திண்ணம். கங்கையாற்றின் வட கரைக்கண் அரசாண்ட நூற்றுவர் கன்னரை ஆசிரியர் வேறியாண்டும் மாளுவ வேந்தரென உரைப்பக் காணுமையானும், மாளுவ நாடென்பது கங்கையாற்றுக்குத் தெற்கே நெடுஞ் சேய்மைக்கண் உளதாகிய நருமதை யாற்றங்கரையை யடுத்துளதாகலின் அதன்கண் அஞ்ஞான்று அரசுவைகிய வேந்தர் வேறென்பதே

வரலாற்று நூலாற் புலப்படுதலானும் அம் மாளுவவேந்தரே நூற் றுவர்கன்ன ராவரென்றல் சிறிதும் அடாதவுரையாம் என்பது.

அற்றேற் கண்ணகிவிழவிற்குவந்திருந்தஅரசரில்நூற்றுவர் கன்னர் மொழியப்படாமை யென்னையெனிற், கூறுதும். தென் றமிழ்நாட்டுச் சேரன்செங்குட்டுவ வேந்தற்கு உற்ற நண்பராயி ஞர் வட ஆரியமன்னர் நூற்றுவர் கன்னர் மட்டுமே யென்பது மேலெடுத்துக்காட்டிய இளங்கோவடிகளின் கொழுந்தமிழுரை களால் நன்கு விளங்காநிற்கும்; அவரை யொழிந்த ஏனை வட ஆரியமன்னர் அவனைப் பகைத்திருந்தமையும், அது பற்றியே அவன் அவர்மேற் படையெடுத்துச் சென்றமையுங் கூட அவ் வாசிரியர் மொழிகளாற் புலனுகின்றன. இங்ஙனமாகத் தென் றமிழ்நாட் டரசனுன செங்குட்டுவற்கு நண்பராகித், தம் இனத் தவரான ஆரியமன்னரைப் பகைத்துநின்ற நூற்றுவர்கன்னர்க்கு வடநாட்டில்உள்ள அவ் ஆரியமன்னரோடு எவ்வளவு போராட் டம் இருந்ததாகல்வேண்டும்! நெடுஞ் சேய்மைக்கண் உளதாகிய தென்னுட்டிலிருந்து, தமது வடநாடு நோக்கிப் படை திரட்டி வந்த செங்குட்டுவ வேந்தற்கு அந்நூற்றுவர் கன்னர் எவ்வளவு உதவிகள் செய்து, தம் மிருவர்க்கும் மாற்ருரான அவ் ஆரிய மன்னரைப்போரில்வென்றிருத்தல்வேண்டும்! அவ்வாறு பேருத விகள் செய்து பெரும்போர் நிகழ்த்தி வெற்றிகண்ட பேராண் மையில் எத்தனை ஆயிரம் படைஞரும் எத்தனை ஆயிரம் யானை குதிரைகளும் அவர் மடியக்கொடுத்திருத்தல்வேண்டும்! எத்தனை நூருயிரம் பொருட்டிரள்களை அவர் இழந்தாராகல் வேண்டும்! இங்ஙனமெல்லாந்தம்படைகளையும்பொருளையும் இழந்து தமது அரசியல் வலிகுறைந்த நிலையி லிருக்கையில், அதனைத் திரும்ப வலிபெறுத்தும் முயற்சியைக் கைவிட்டு, அடுத்து நிகழ்ந்த கண் ணகி விழவுக்கு அந் நூற்றுவர் கன்னர் எங்ஙனம் வரக்கூடும்? அன்றி வந்திருப்பரேற் சீர்குலைந்த நிலையிலுள்ள அவர்தம் அரசி யல் அவரில்லாத காலத்தில் வேறு மாற்றரசரால் எளிதிற் கைப் பற்றப் படுமன்றே? இவ் வியல்புகளை நன் குணர்ந்துபார்த்தே

செங்குட்டுவன் வெற்றிவேந்தனுய்த் தனது தென்னுடுநோக்கித் திரும்புகின்றுழி, உற்ற நண்பரான அந் நூற்றுவர் கன்னரைத் தன்னேடுடனழைத்துவராமல், அவரை அவர்தம் நாடுநோக்கிச் "செல்கவென்றுஏவி," அவ்வாற்றுல் அவர் வலிகுறைந்த தமது அரசியலைப் பெயர்த்தும் வலிபெறுத்துதற்கு இடஞ்செய்தான். ஆகவே, அந்நூற்றுவர் கன்னர் செங்குட்டுவ வேந்தன் உடன் பாடு பெற்றே கண்ணகிவிழவுக்கு வாராராயினுரென்பது சிறிது கருத்தொருங்கி நோக்க வல்லார்க்கும் புலனுகற் பாலதேயாம். இவ்வுண்மையினை ஆராய்ந்துபார்க்கும் வன்மையின்றிச் 'சேரன் செங்குட்டுவன்' நூலார் கண்ணகிவிழவுக்கு வந்திருந்தோரில் நூற்றுவர்கன்னர் சொல்லப்படாமை ஒன்றேகொண்டு, அதற்கு வந்திருந்த மாளுவவேந்தரை அந்நூற்றவர் கன்னராகப் பிழைத் துணர்ந்தது சிறிதும் பொருந்துவ தில்லாப் போலியாராய்ச்சி யாமெனவிடுக்க. எனவே, மாளுவ வேந்தரென ஆசிரியராற் குறித்தோதப்பட்டார் 'நூற்றுவர்கன்னர்' அல்லரென்பதூஉஞ், சமுத்திரகுப்தனும் அவன்மகன் சந்திரகுப்தனும் அரசுபுரிந்த கி-பி நான்காம் நூற்றுண்டில் மாளுவநாடு குடியரசின்கீ ழிருந் ததேயன்றிவேந்தராட்சியின்கீழிருந்ததன் றென்பது வரலாற்று நூல்களால் நன்கறியக் கிடத்தலின் அஃது அரசராட்சியி லிருந்தது கி-பி மூன்றும் நூற்றுண்டின் நடுவுக்கு முன்னரே யாமென்பதூஉம், அந்நூற்றுண்டின்நடுவுக்குமுற்சென்ற காலத் தில் மாளுவநாட்டை அரசுபுரிந்த அரசர் வரிசையிற் கண்ணகி விழவுக்கு வந்தவராகக் கொள்ளப்படுதற் குரியார், முதற் கய வாகுவென்னும் இலங்கைவேந்தன் காலத்தவரான சகசத்திர பதியரசர்மூவரில்ஒருவனும் அவற்குறவினனுன 'கௌதமீபுத்ர யஜ்ஞஸ்ரீ' என்னும் ஆந்திர மன்னனுமே யாவரென்பதூஉம், அவரதுகாலங் கி-பி கஎ௬-க்கும் கஃ௬-க்கும் இடைப்பட்டதே யாகலின் அதன்கண் அழிந்துபட்ட கடைச்சங்கங் கி-பி இரண் டாம் நூற்றுண்டின் நடுவுக்கு முற்பட்டதேயாகல் வேண்டு மென்பதூஉந் திண்ணமாய்ப் பெறப்படும். ஆதலால், இவ்

வுண்மை முடிபுக்கு மாறுகச் 'சேரன் செங்குட்டுவன்' நூலார் அதனைக் கி-பி ஐந்தாம் நூற்றூண்டின்கட் படுப்பிக்க விழைந்து செய்த போலியாராய்ச்சி பொருந்தா தொழிந்தமைகாண்க.

இனிச், 'சிலப்பதிகாரம்,' 'மணிமேகலை' என்னும் பெருந் தமிழ்ப் பாட்டுடைச் செய்யுட்கள் இயற்றப்பட்ட காலத்தை வகுத்தற்கும், அதன்வழியே அதற்குமுன் நிலவிய கடைச்சங்க காலத்தை வகுத்தற்கும் நுறுங்கா வைரவாள்போல் நின்று உதவிபுரிவதாகிய இலங்கைமன்னன் முதற்கயவாகுவின் காலங் கி-பி இரண்டாம் நூற்றூண்டின் பிற்பாதியிற் படுவதாதலை வரலாற்று நூலாசிரியரெல்லாரும் ஒருப்பட்டுரைக்கக் காண்டலிற், கடைச்சங்க காலத்தைக் கி-பி ஐந்தாம் நூற்றூண்டிற் படுப்பிக்க விழைந்த தமது கருத்துக்கு அது முழுமாறுய் நின்று தமதாராய்ச்சியினை இருகூறுய்ப் போழ்ந்து அவ் வாராய்ச்சி உள்ளீடில்லா வெறும் புரையாய் இருத்தலைக் காட்டுத லுணர்ந்த 'செங்குட்டுவன்' நூலார் அவ் வைரவாளினையும் நுறுக்கி விடுதற்கு முயன்று, அம்முயற்சி கைகூடாவாறு அஃது அதனையும் ஈர்ந்து பாழ்படுத்த, அதனால் அவர் செயலற்றுக் கரைந்த கையறவுரைப் பெற்றியுஞ் சிறிதுகாட்டுதும். இலங்கையரசரின் வரலாறுகளை யுரைக்கும் பொருட்டுப் புத்த குருமார்களால் வரையப்பட்ட 'மகாவம்சம்' என்னும் நூலின்கண், முதற் கயவாகு வேந்தன் சேரன் செங்குட்டுவன் காலத்திருந்தனன் என்பதனைக்காட்டுங் குறிப்பு எதுங் காணப்படவில்லையென்று'செங்குட்டுவன்'நூலார் கூறினர். புத்த சமயத்தினனாகிய அம்மன்னவன் கண்ணகியென் னும் ஒரு கற்புடைமாதைத் தெய்வமாய்க்கொண்டு வழிபட்டா னாயின், அதனைச் சொல்லுதலிற் புத்த குருமார்க்கு விருப்பு நிகழாமை இயற்கையேயாம். அவர் அது சொல்லாமையே பற்றிக் கயவாகுவேந்தன் செங்குட்டுவன் காலத்தினன் அல்ல னென்றல் யாங்ஙனம் பொருந்தும்? செங்குட்டுவனால் எடுப்பிக் கப்பட்ட கண்ணகிவிழவுக்குக் கயவாகுவேந்தன் சென்றதை யுந், திரும்பி அவன் இலங்கைக்குவந்தபோது கண்ணகி யணிங்

திருந்த பொற் சிலம்பினைக் கொணர்ந்து தனது வெற்றியினை நினைவுகூர்தற் பொருட்டு ஆண்டுகடோறும் அவன் நடப்பித்த கொண்டாட்டவிழவில் அப் 'பத்தினிதேவி'யின் வழிபாட்டைச் சிறந்தெடுத்து வைத்ததையும், இன்றுங்கூடச் சிங்களவர்கள் அறங்கூறும் மன்றில் அச் சிலம்பைத் தொட்டுச் சூளுரைப்பதையும் நன்கெடுத்துக் காட்டி, முதற் கயவாகுவேந்தன் சேரன் செங்குட்டுவன் காலத்தினனேயாவனென்று திரு அருணசலம் அவர்கள் தாம் பெரிதாராய்ந் தெழுதிய 'இலங்கை வரலாற்றின் முதற் குறிப்புகள்'* என்னும் நூலில் இனிது விளக்கி யிருக்கின்றார்கள். கயவாகுமன்னன் கண்ணகி வழிபாட்டினை இலங்கைக்குக் கொண்டுசென்ற வரலாறு 'மகாவம்சத்'திற் குறிக்கப் படாவிடினும், அம் மகாவமிசத்தைப்போலவே பழையனவாய் இலங்கை வரலாறக ளுரைக்கும் 'ராஜரத்நாகரி,' 'ராஜாவளி' என்னும் நூல்களில் அது குறிக்கப்பட் டிருத்தலினாலன்றே† அருணசலம் அவர்கள் தாம் எழுதிய அந்நூலில் அக் குறிப்பினை நன்கெடுத்து விளக்குவாராயினர்கள். இவ்வாற்றால் முதற் கயவாகுவேந்தன் சேரன் செங்குட்டுவன் காலத்தினனேயாவனென்பதும், அதனால் அவனுஞ் செங்குட்டுவனுங் கி-பி இரண்டாம் நூற்றாண்டில் இருந்தவரே யாவரென்பதும், ஆகவே செங்குட்டுவனைக் கி-பி ஐந்தாம் நூற்றாண்டிற் படுப்பிக்க முயன்ற 'செங்குட்டுவன்'நூலாரது முயற்சி 'ஆடிக்காற்றி னிடைப்பட்ட பஞ்சுத்துய்' போற் பயன்படாது பறந்தோடிப் போயிற்றென்பதும் வைரத் தூணென நாட்டப்பட்டமை காண்க.

இனித், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தவனான 'திதியன்'என்னுந் தமிழ்மன்னனையுங், கி-பி சகூ0-இல் இலங்கையை அரசாண்ட 'ததியன்'

---

* 'Sketches of Ceylon History' by P. Arunachalam, M. A., (Cantab), 2nd edition, p. 22.

† See also Dr. S. Krishnaswami Aiyangar's 'The Beginnings of South Indian History,' p. 210 and first foot-note.

என்னுந் தமிழ்மன்னனையுஞ் 'செங்குட்டுவன்' நூலார் ஒன்று படுத்துரைத்து, அதனைத் தமது கோட்பாட்டுக்கு ஒருபெருஞ் சான்றாகக் காட்டித் தமதாராய்ச்சியினை முடித்திட்டார். 'ததியன்' எனும் பெயர்வாய்ந்த மற்றொருதமிழரசன் கி-மு கூ0-இல் இலங்கையை ஆண்டவன் என்பது அருணாசலம் அவர்களால் தமது 'இலங்கைவரலாற்று முதற்குறிப்புகள்' என்னும் நூலில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது*. 'செங்குட்டுவன்'நூலார் தாமும் அதனையே யெடுத்துக் காட்டினார். ஆகவே, 'ததியன்' எனப்பெயர்பூண்ட இலங்கைத்தமிழ்மன்னர் இருவரில் ஒருவன் கி-மு கூ0-இலும், மற்றொருவன் அவற்கு ஐந்நூறாண்டுபிற்பட்டுக் கி-பி சகூ0-இலும் இருந்தமை புலனாகாநிற்கும். மற்றுத், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனே கி-பி முதல்நூற்றாண்டிலிருந்தவனென்பதை மேலே 431-ஆம் பக்கத்தில் விளக்கிக் காட்டினாம். ஆதலால், அப் பாண்டியன் காலத்தவனாய்த் தமிழ்நாட்டிலிருந்த 'திதியன்' என்னும் அரசனுக்கும், அவனுக்கு ஒரு நூற்றாண்டுமுன்னும், நான்கு நூற்றாண்டுகள் பின்னும் இலங்கையிலிருந்து அரசாண்ட 'ததியன்' எனப் பெயர்பூண்ட அரசரிருவர்க்கும் ஏதொரு தொடர்புங் காண்கிலம். திதியனுக்குந் ததியனுக்கும் பெயரொற்றுமை தானும் இலது. வரலாற்றுநூலில், வெறும் பெயரொற்றுமையொன்றேகொண்டு ஒரு முடிபுசெய்தல் பொருந்தாதெனப் பல்காலுங் கரையாநிற்குஞ் 'செங்குட்டுவன்' நூலாரே, அப்பெயரொற்றுமைதானும் இல்லாத 'திதியன்,' 'ததியன்' என்னும் அரசர் இருவரையும் ஒருவரெனத் துணிந்துரைப்பது நகையாடுதற்கே ஏதுவாம். வெவ்வேறிடங்களிலும் வெவ்வேறு காலங்களிலும் இருந்த அவ்விருவரையும் ஒருவரெனக்கோடற்குப் பிற குறிப்புக்கள்தாமும் இலவாகவும், இயைத்து ஒன்று படுத்தற்கு இயலா அவ் விருவரையும் இயைத்து ஒன்று படுத்தப் புக்கது, 'மொட்டைத் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிப்

* 'Sketches of Ceylon History,' List of Kings facing p. 25.

போடுவதோடு' ஒப்பதா மன்றி மற்றென்னை? இங்ஙனமாகக், கி-பி முதல் நூற்றுண்டில் தமிழ்நாட்டின்க ணிருந்த 'திதியன்' என்னும் அரசற்குங், கி-பி ஐந்தாம் நூற்றுண்டில் இலங்கையி லிருந்த 'ததியன்' என்னும் அரசற்குந் தொடர்புகாட்டுதல் எவ் வாற்றானும் இயலாதாகலின், தமது வெற்றெண்ணமே கருவி யாய்க்கொண்டு கடைச்சங்க காலத்தைக் கி-பி ஐந்தாம் நூற் றுண்டிற் படுப்பிக்கப்புகுந்த 'செங்குட்டுவன்' நூலாரது முயற்சி, வானத்தின்கண் ஓவியம் வரையப் புகுந்தார்தம் முயற்சியோ டொத்து வறிதானமை காண்க. என்றிதுகாறும் ஆராய்ந்து காட்டியவாற்றாற், கடைச்சங்ககாலஞ் 'செங்குட்டுவன்' நூலார் கூறியபடி கி-பி ஐந்தாம் நூற்றுண்டின்கட் படுவதன்றாய்க், கி-பி இரண்டாம் நூற்றுண்டிற்கு முன்னதாவது ஐயுறவுக்கு இட னின்றித் துணியப்படுதலிற், கி-பி மூன்றும் நூற்றுண்டின்க ணிருந்த மாணிக்கவாசகப் பெருமான் "உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழின்றுறை" என்று அச்சங்கத்தைக் குறிப் பிட்டு அருளிச்செய்தது சாலவும் வாய்ப்புடைத்தாய் மலைமேற் கட்டிய அரண்போல் நாட்டப்பட்டமை தெளிந்துகொள்க.

இனித், திருத்தொண்டத் தொகையில் திருவாதவூரடிகள் குறிப்பிடப்படவில்லை யென்றும், அதன்கட் சொல்லப்பட்ட 'பொய் யடிமையில்லாத புலவர்' என்பார் கடைச்சங்கத்திருந்து தமிழாராய்ந்த 'கபிலர்,' 'பரணர்,' 'நக்கீரர்' முதலான புலவர் கூட்டத்தவராகிய தொகை யடியாரே யாவரல்லால் தனி யடியா ராகிய திருவாதவூரடிகளாதல் செல்லாதென்றுந், திருவாதவூரர் தமது காலத்துக்கு முந்தியவராளுற் சுந்தரமூர்த்திகள் தாம் அருளிய அத் திருத்தொண்டத் தொகையில் அவரைச் சொல் லாது விடார் என்றும், ஆகவே சுந்தரமூர்த்திகள் இருந்த கி-பி எட்டாம் நூற்றுண்டிற்குப் பின்னரேதான் திருவாத வூரடிகள் இருந்தாராகல் வேண்டுமென்றுந் 'தமிழ் வரலாறு' உடையார் கூறிய பகுதியினை ஆராய்வாம். திருத்தொண்டத் தொகையிற் போந்த 'பொய்யடிமை யில்லாத புலவரைத்' தனி யடியாராகக்

கொள்ளாமல் தொகை யடியாராகக் கொள்ளல்வேண்டு மென்ப தற்கு இவர் காட்டிய சான்று என்னையெனிற்,

"கூட்டம் ஒன்பானே டறபத்து மூன்று தனிப்பெயரா
ஈட்டும் பெருந்தவத்தோர் எழுபத்திரண்டு" என்று நம்பி யாண்டார் நம்பிகள் தாம்பாடிய 'திருத்தொண்டர் திருவந்தாதிச்' செய்யுளில் 'தொகையடியார் ஒன்பதின்மர்' எனவுந், 'தனியடியார் அறுபத்துமூவர்' எனவுங் கூறியதேயாம். சுந்தரமூர்த்தி நாயனர் இருந்தபோது அவரோடு உடனிருந்து அவரது கருத்தை அவர்பாற் கேட்டறிந்தவராயின், அல்லது அவர் தம் மாணக்கர் மரபில்வந்த ஒருவர்பால் அதனை உசாவி யறிந்தவராயின் நம்பியாண்டார் நம்பிகள் கொண்ட பொருளே நாயனர் கருத் தென்றல் வாய்வதாகும். சுந்தரமூர்த்தி நாயனரோ கி-பி எட்டாம் நூற்றுண்டின் ஈற்றி லிருந்தவர்; நம்பி யாண்டார் நம்பிகளோ அவர்க்குப்பின் இரு நூறுண்டுகழித்துக் கி-பி பத்தாம் நூற்றுண்டின் ஈற்றில் இருந்தவர். ஆதலால், நம்பிகள் நாயனர் கருத்தை அவர்பால் நேரேயிருந்து கேட்டவர் அல்லரென்பது புலனும். அங்ஙன மில்லையாயினும், நாயனர்தம் மாணக்கர் மரபில்வந்த ஒருவர்பால் நம்பிகள் அதன் பொருளைக் கேட்டாரோ வென்றுல், திருத்தொண்டர் திருவந்தாதியின் முதற்கண் உள்ள,

"பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதேம் மரபுசெயல் [தனைச்
பன்னஅத் தொண்டத் தொகைவகை பல்கும் அந்தாதி
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணை துணையே"

என்னுஞ் சிறப்புப்பாயிரச் செய்யுளால் நம்பிகள் அங்ஙனம் அதனை ஒருவர்பாற் கேட்டவ ரல்லர், திருநாரையூரி லுள்ள பொல்லாப் பிள்ளையார் அருளால் அதனை யுணர்ந்தவராவ ரென்பது பெறப்படும். கடவுளிடத்து அன்புமிக்கவர் செய்த ஒருநூலைக் கடவுளே அருளிச்செய்ததாகக் கூறுவது பிற்காலத்தவர் வழக்கமாகும். ஆகவே, திருத்தொண்டத் தொகையிற் போந்த 'பொய்

யடிமையில்லாத புலவரை' நம்பிகள் தொகை யடியாராகப் பொருள் செய்து கொண்டது தம துள்ளத்திற் பட்டபடியே யாம்; அவர் அவ்வாறு செய்து கொண்ட பொருளே சுந்தர மூர்த்தி நாயனாரதுகருத் தென்பது அடாது. என்னை? சுந்தர மூர்த்தி நாயனார் 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதனால் இறைவனைப் பாடிய புலவர் கூட்டத்தினையே கூறல் கருதினாராயின், அவர் திருத்தொண்டத் தொகையின் பத்தாஞ் செய்யுளிற் "பரமனையே பாடுவா ரடியார்க்கும் அடியேன்" என்று மீண்டும் அதனையே கூறுவாரல்லர். ஆகவே, 'பொய்யடிமையில்லாத புலவர்' என எழாஞ்செய்யுளிலும், 'பரமனையே பாடுவார்' எனப் பத்தாஞ்செய்யுளிலுங் கூறப்பட்ட அவ்விருவேறு சொற்றொடர்களுக்கும் ஆசிரியன்கொண்ட பொருளைத் துணிதற்கு, அச் சொற்றொடர்கள் நிற்கும் இடங்களின் இயல்புணர்தலே கருவியாகும். 'பொய்யடிமையில்லாத புலவர்' என்னுஞ் சொற்றொடர் நிற்குஞ் செய்யுளிற் சொல்லப்பட்ட 'புகழ்ச் சோழர்,' 'நரசிங்க முனையரையர்,' 'அதிபத்தர்,' 'கலிக்கம்பர்,' 'கலியர்,' 'சத்தியார்,' 'ஐயடிகள் காடவர்கோன்' என்னும் ஏனை நாயன்மார் எழுவருந் தனி யடியாரே யல்லால், தொகையடியா ரல்லர்; தனியடியாரைச் சொல்லும் இச் செய்யுளிற் 'பொய் யடிமையில்லாத புலவர்' என்ப தொன்றுமட்டுந் தொகையடியாரைச் சுட்டுமென்றல் ஆக்கியோன் கருத்துக்கு மாறுவதாம். மற்றப், 'பரமனையேபாடுவார்' என்னுஞ் சொற்றொடர் நிற்குஞ் செய்யுளிற் போந்த 'பத்தராய்ப் பணிவார்கள்,' 'சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்கள்' 'திருவாரூர்ப்பிறந்தார்கள்,' 'முப்போதுந் திருமேனி தீண்டுவார்,' 'முழுநீறு பூசிய முனிவர்;' 'அப்பாலும் அடிச் சார்ந்தார்' என்னும் அடியார் அறுவருமோ தொகையடியாரே யாதல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்த தொன்றும். "தில்லைவா ழந்தணர்" என்னும் முதற்பாட் டொன்றிற் றவிரத், தனி யடியாரைக் கூறும் ஏனையொன்பது செய்யுட்களில் எங்குந் தொகையடியாரை இடைமடுத்து ஆசிரியன் உரைப்பக் காண

கிலம். தொகையடியாரை ஒருங்குதொகுத்துக் கூறும் "பத்த ராய்ப் பணிவார்கள்" என்னும் ஓரே செய்யுளில் வேறுதனி யடியாரை இடைப்புகுத்து ஆசிரியன் மொழியவுங் காண்கிலம். ஆகவே, தனியடியாரைக் கூறும் பாட்டுக்களில் தொகையடி யாரையுந், தொகையடியாரைக் கூறும்பாட்டில் தனியடியாரை யும் மொழிதல் சுந்தரமூர்த்தி நாயனர்க்குக் கருத்தன்மை தெள் ளிதிற் புலனுகின்றதன்ருே? அற்றேல், "தில்லைவாழந்தணர்" என் னும் முதற்பாட்டின் முதலில் தொகையடியாரும், அதன்பிற் றனியடியாரும் மொழியப்படுத லென்னையெனிற்கூறுதும். சிவ பிரான் றிருவடிக்கண் மெய்யன்புடையராய் ஒழுகிய திருத் தொண்டரைப்பாடுதற்குச் சுந்தரமூர்த்திகள் விழைவுமீதூர்ந்து நின்றவழிச், சிவபிரானே "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க் கும் அடியேன்" என்று முதலடி யெடுத்துக்கொடுத்துத் திருத் தொண்டத்தொகை பாடுமாறு அவர்க்குக் கட்டளையிட்டரு ளின ரென்பது,

"தொல்லைமால் வரைபயந்த தூயாடன் றிருப்பாகன்
அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்என்
றெல்லையில்வண் புகழாரை யெடுத்திசைப்பாமொழியென்ருர்"

எனவுந்,

"தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளாற்றிருத்தொண்டத்தொகையானதிருப்பதிகம்
உம்பர்பிரான் ருனருளும் உணர்வுபெற வுலகேத்த
எம்பெருமான் வன்றெண்டர் பாடியவ ரெதிர்பணிந்தார்"

எனவுஞ் சேக்கிழார் பெருமான் (தடுத்தாட்கொண்டபுராணம், ௧௯௯, ௨0௨) அருளிச்செய்தவாற்ருல் நன்கறியப்படும். படவே, திருத்தொண்டத் தொகை முதற்செய்யுளின் முதலடிக் கண் உள்ள "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என் னுஞ் சொற்றெடர் சுந்தரமூர்த்திகள் செய்த தன்றென்பது பெற்ரும். பெறவே, தனியடியாரைக் கூறும் அம் முதற்செய்

யுளில் அது வந்தமைபற்றி ஈண்டைக் காவதோர் இழுக்கில்லை யென விடுக்க.

நன்றசொன்னீர், மக்கள் அறிவினாற் செய்தற்கெளிதாகிய ஒருபாட்டுக்கு இறைவனே முதலெடுத்துக் கொடுத்தா னென்றல் நம்பர்பாலதன்று; அக் கதையின் கருத் தென்னென்றாற், சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத்தொகை பாடும் விழைவினராய் அதனை எவ்வாறுதுவங்குவதென்று ஆராய்ந்துகொண்டு நிற்கையில், அவர்க்கு அருகே நின்றாரில் ஒருவர் தற்செயலாய்த் 'தில்லைவாழந்தணர்' என்று சொல்லக்கேட்டு அதனையே இறைவனெடுத்துக் கொடுத்ததாக உட்கொண்டு அதனை முதற்கண் நிறுத்துப் பாடினாராதல் வேண்டுமெனக்கோடலே அதன் கருத்தாவதாமெனின்; அங்ஙனங் கொள்வார் கொள்க; அவ்வாறே கொள்ளினுந் 'தில்லைவா ழந்தணர்' எனத் தொகையடியாரைக் குறிக்கும் அச் சொற்றொடர் சுந்தரமூர்த்திகள் அருளியதன்றென்பதே பெறப்படுமாகலின் அதுவும் எமது கொள்கையினையே வலியுறுத்துமென வுணர்க.

அற்றன்று, தேவாரப் பதிகங்களுள் எதனைப் பாடத்துவங்கினுந் தில்லைக்கண் உள்ள 'திருச்சிற்றம்பலம்' என்பதனைச் சொல்லியே துவங்குதல் தொன்றுதொட்ட வழக்காய்ப் போதரக் காண்டலின், ஏனையெல்லாப் பதிகளினும் உள்ள அடியாரைச் சொல்லுதற்குமுன் தில்லையம்பதிக்கண் உள்ள தொகையடியாரையுந் தனியடியா ரொருவரையும் ஒருங்கெடுத்து மொழிதல் வேண்டுமென்னுங் கருத்துப் பற்றியே அப் பதிக்கண் இருந்த தில்லைவாழந்தண ராகிய தொகையடியாரையுந், திரு நீலகண்ட நாயனாராகிய தனியடியாரையுஞ்சுந்தரமூர்த்திகள்ஒருங்கெடுத்து முதற்கண்வைத்து ஓதுவாராயின ரெனின்; அவ்வா றாயிற் பினுந், தனியடியாரைக் கூறுஞ் செய்யுளில் தொகையடியார் குழுவொன்றைக் கூறுமாறு தமதுகருத்துக்குமுரணாய் நின்று தம்மை வலிந்தேவும் ஒருசிறந்த ஏதுவின் வழிப்பட்டே சுந்தரமூர்த்திகள் அங்ஙனந் 'தில்லைவாழந்தண'ராந் தொகையடியாரை

பயன்படக்கூடும். இஃது [illegible] இருப்பதால், இதனை மறுபடியும் ஒரு முழுப் புத்தகமாகப் பதிப்பிட்டு முடிப்பதற்கு மூவாயிர ரூபாவுக்குமேல் வேண்டும். பொருளை வீணான துறைகளிற் செலவிட்டுப் பொருட்பயனை இழக்குஞ் செல்வர்கள் இந் நூலால் தமிழ்மக்களுக்கு விளையும் அரும்பெரும் பயன்களை எண்ணியாவது தக்கபடி இந் நூற்பதிப்புச் செலவுக்குப் பொருளுதவி செய்வார்களாயின் அவர்கள் அழியாப் புகழும் நல்வினையும் பெற்று மேன்மேலுஞ் செல்வம் பெருகி இனிது நீடுவாழ்வர். தக்கபடி பொருளுதவி செய்யும் அன்பர்களின் பெயருந் தொகையும் ஞானசாகரத்தில் அவ்வப்போது வெளியிடப்படும்.

இப்போது ஞானசாகரத்தினின்றும் எடுத்துத் தனிப்புத்தகமாக்கப்படும் இந் நூலின்படிகள் நூற்றைம்பதுக்குமேல் ஆகா. ஆனால், இந்நூலைப் பெற விரும்புவோர் தொகை ஆயிரக்கணக்காயிருக்கின்றது. ஆதலால், எவர் இதன் விலை பத்துரூபாவும் தபாற்கூலி ஒரு ரூபாவும் ஆகப் பதினொரு ரூபாவும் முன் அனுப்பித் தம் பெயரை இப்போதே பதிவுசெய்கின்றார்களோ அவர்களுக்கு மட்டுந்தான் இந்நூல் விரைவிற் கிடைக்கும். மற்றையோர் இதன் இரண்டாம் பதிப்பு வெளிவரும் வரையிற் காத்திருக்கவேண்டியவர் ஆவர். இதன் இரண்டாம்பதிப்பு அச்சிட்டு முடிய ஏறக்குறைய ஓர் ஆண்டு ஆகும்.

---

## தஞ்சைக்கு அடுத்த கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ௧௫, ௧௬-ஆம் ஆண்டு நிறைவு விழா

சென்ற ஆடித்திங்கள் ௮, ௯-ஆம் நாட்களில் மறைத்திருவாளர் மறைமலையடிகளின் அவைத் தலைமையில் இஃது இனிது நிறைவேறியது. தமிழ்ப் புலவர்களான: திரு இராசுப்பிள்ளையவர்களால் 'திருத்தொண்டர்பெருமை'யும், திருவேங்கடசாமி நாட்டாரவர்களால் 'பழைய உரையாளர்' என்பதும், திருப் பாலசுந்தரம் பிள்ளையவர்களால் 'இளங்கோவடிகளும் அடியார்க்கு நல்லாரும்' என்பதும், திரு அமிர்தலிங்கம்பிள்ளையவர்களால் 'திருவள்ளுவருஞ் சேக்கிழாரும்' என்பதும், திருச் சச்சிதானந்தம் பிள்ளையவர்களால (பி எ., எல்-டி) 'தமிழர் சமயவாழ்க்கை' என்பதும், திருக் கதிரேசச் செட்டியாரவர்களால் 'திருவள்ளுவரும் பரிமேலழகரும்' என்பதும் விரித்துரை செய்யப்பட்டன. எல்லாருடைய விரிவுரைகளுங் கேட்டற்கு இனியனவாய் நுண்பொருள்நிறைந்து அவையில் வந்து கூடிய பெருந் திரளான அன்பர்களின் உள்ளங்களைத் தம் வயமாக்கி மிக மகிழ்வித்தன. அவைத்தலைவர் நிகழ்த்திய முன்னுரை தொகுப்புரைகளும் அங்ஙனமே இனிமையும் நுட்பமும் விரிவும் வாய்ந்து அவையினரெல்லார்க்கும் பெருங் கிளர்ச்சியினை உண்டுபண்ணின. இச் சங்கத்தின் தலைவர் திரு உமாமகேசுரம்பிள்ளையவர்களும் (பி. எ., பி. எல்), அமைச்சர் திருவேங்கடாசலம் பிள்ளையவர்களும் அவையின் துவக்கத்திலும் ஈற்றிலும் பேசிய முகவுரை முடிவுரைகளும் பெரிது பாராட்டற் பாலனவாயிருந்தன. இச் சங்கக் கல்விச்சாலையின் மாணாக்கர்கள் நடாத்திக்காட்டிய சிலப்பதிகார நாடகங் கல்லையுங் கனிவிக்குந் திறத்ததென்றால் அம் மாணாக்கர்களின் ஆற்றலையும், அவரைப் பழக்கிய அவர்தம் ஆசிரியர்களான திருவேங்கடாசலம்பிள்ளையவர்கள் திரு இராமசாமி வன்னியாரவர்களின் புலமைத் திறத்தையும் ஆற்றலையும் என்னென்பேம்! இச் செந்தமிழ்த் திருநாட்டுக்கு நடுவணதாகிய தஞ்சாவூர்க் கரந்தையில் தூய தனிச் செந்தமிழ்த் தெய்வ அன்னை அரசு வீற்றிருந்து அறிவொளி பரப்பும் அத்தாணி மண்டபமாக இச் சங்கத்தை நிலைநாட்டி இதனைச்

முயற்சிகளும் மேன்மேற் றழைத்தோங்கி நம் தூய தனித்தமிழ்த் தெய்வ அன்னையின் தனி யரசாட்சியை எங்கணும் பரவச்செய்து உலகினை நன்கு வாழ்வித்துத் தாமும் நீடு வாழ்கவென்று எல்லாம்வல்ல அம்மையப்பனை வேண்டி வழுத்துகின்றோம்.

## திருச்சிராப்பள்ளிச் சைவசித்தாந்தசபையின் 38-42-ஆம் ஆண்டு நிறைவுவிழா

சென்ற புரட்டாசித்திங்கள் ௨௯, ௩௦-ஆம் நாட்களில் இது மறைமலையடிகளின் அவைத்தலைமையில் மிக்க சிறப்புடன் நடந்தேறியது. நற்றமிழ்ப் புலவர்களான திருவாளர் வேங்கடசாமி நாட்டாரவர்களால் 'திருக்குறட் பாயிர இயல்' என்பதும், திருவாளர் வரதநஞ்சையபிள்ளை யவர்களால் 'மதுரைக்காஞ்சியும் பழந்தமிழ்நாடும்' 'நாயன்மார்களின் உட்கோள்' என்பனவும், திருவாளர் இளவழகனாரால் 'பொதுநெறி' என்பதும், திருவாளர் சரவண முதலியாரவர்களால் 'அப்பரும் அவர் அருள்மொழியும்' என்பதும் மிக்க இனிமையுடன் விரித்துப் பேசப்பட்டன. அவைத்தலைவர் முன்னுரையாகக் 'கடவுள்நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா' என்பதும், இடையுரையாகத் 'தமிழ்நலத்திற்கு மாறான கொள்கைகள் தமிழர்க்கு ஆகா' என்பதும் மறைமலையடிகளால் விரித்துரை செய்யப்பட்டன; இவ்விரண்டு சொற்பொழிவுகளும் வந்துகேட்ட பெருந்திரளான அன்பர்களாற் பெரிது பாராட்டப்பட்டன. இச் சபையும் இதனை நடாத்திவரும் அன்பர்களும் நீடுவாழ்ந்து, உண்மைச் சைவசமயத்தையும் சிவத்தின் உண்மைத் தன்மைகளையும் எங்கும் பரவச்செய்து உலகை மெய்யுணர்வில் வாழ்விப்பார்களாகவென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டுதும்.

## யாழ்ப்பாணத்து இருபாலைச்செட்டியார் இயற்றிய வைத்திய விளக்கம்

இற்றைக்குத் தொண்ணூறு ஆண்டுகளின்முன் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த மீசாலையிற் பிறந்து, பிறகு இருபாலையென்னும் ஊரில் நெடுங்காலம் இருந்தமையால் இருபாலைச்செட்டியார் என்னும் பெயர்வாய்ந்த மருத்துநூற் புலவரால் இயற்றப்பட்ட வைத்திய விளக்கம் என்னும் மருத்துநூல் ஒன்று, யாழ்ப்பாணத்து எழாலைத் தமிழ் மருத்துவ ஆசிரியர் திரு அ. பொன்னையாபிள்ளையவர்களாற் பதிப்பிடப்பட்டு வெளிவந்திருக்கின்றது. இந்நூல் 'அமிர்தசாகரம்,' 'பதார்த்தசூடாமணி' என்னும் இருபகுதியினதாய்த் திருத்தமான இனிய செந்தமிழ்ச் செய்யுட்களால் ஆக்கப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டுள் முதற்பகுதியாகிய 'அமிர்தசாகரம்' என்பது பல்வகை நோய்களின் தன்மைகளும் அந்நோய்களை நீக்கவல்ல மருந்துகள் கூட்டும் முறைகளுந் தெள்ளத்தெளிய விளக்குகின்றது. இரண்டாவதாகிய 'பதார்த்தசூடாமணி' யானது மருத்துப் பண்டங்கள் உணவுப்பண்டங்களின் இயற்கைகளை நன்கு வகுத்துரைக்கின்றது. ஆகவே, தமிழ்மருந்து முறைகளைப் பழகி அவற்றில் தேர்ச்சிபெற வேண்டுவார்க்கு இந்நூல் இன்றியமையாத தொன்றாகும். இந் நூற்பதிப்புஞ் சிறந்ததொன்றாயிருக்கின்றது. இஞ்ஞான்று பதிப்பிட்டு வெளிவரும் மருத்துநூல்கள் பெரும்பாலுஞ் சொற்பிழைகள் அச்சுப்பிழைகள் மலிந்திருத்தலின், அவற்றைப் பயிலும் மருத்துவர் தமிழ் மருத்துவத்தில் தேர்ச்சிபெறுதல் இயலாததாயிருக்கின்றது. ஆனல், இவ் 'வைத்தியவிளக்கம்' என்னும் நூலைப் பயில்வார்க்கு அத்தகைய இடர்ப்பாடு வராது. இதனைப் பதிப்பித்த திருவாளர் பொன்னையா அவர்கள் தமிழ்ப்புலமை வாய்ந்தவராகலின், எழுத்துப்பிழை அச்சுப்பிழைகள் விரவாமல் அழகிய எழுத்தில் அழகிய தாளில் திருத்தமாக இந்நூலை அச்சிட்டிருக்கின்றார்கள்; இவ்வுதவிக்குத் தமிழுலகம் இவர்கட்குப் பெரிதுங் கடமைப்பட்டதாகின்றது. இந்நூலின் படி ஒன்றை நமது கருத்துரைக்காக அனுப்பிய பதிப்பாசிரியர்க்கு நன்றி கூறுகின்றோம். இதன்விலை இவ்வளவென்பது இதிற் குறிக்கப்படவில்லை. என்றாலும், இதன்விலை ஒன்றரைரூபா இருக்கலாம்; இதுவேண்டுவோர், யாழ்ப்பாணத்தைச் சார்ந்த எழாலையிலுள்ள தமிழ் மருத்துவர் திருவாளர் அ. பொன்னையாபிள்ளை என்னும் அருளானந்த சிவத்திற்கு எழுதி இதனைப் பெற்றுக்கொள்க.